விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை (09.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 234

## தமிழரசுக் கட்சியின் தலைமையை பொதுக்குழுவே தீர்மானிக்கும்

### சுமந்திரனுக்கு மாவை பதில்



(யாழ்ப்பாணம்)
தமிழரசுக் கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் ஏனைய பதவிப் பொறுப்புக்கள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பொதுக்குழுவுமே கட்சி யாப்பின்படி தீர் மானங்களை 15

### அனைவரும் இணைந்து வழங்கினால்

## தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்கத் தயாராக உள்ளேன்

### சிவஞானம் சிறீதரன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)
தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பினை அனைவருமாக இணைந்து வழங் கினால் தான் அதனை ஏற் கத் தயார் என சிவஞானம் 15

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

## தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் கட்சிக்குள் இழுபறி

(யாழ்ப்பாணம்)
பொதுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற் குள் மீண்டும் நெருக் கடி நிலை உருவாகி 15

## அடக்குமுறைகள் இலங்கையில் அதிகரிக்கலாம்

### பெரமுனவின் வெற்றியையடுத்து

### சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை



(நியூ யோர்க்)
அரசாங்க கொள்கைகளை சவாலுக்குட்படுத்தும் துறைகள் மீதான அச்சுறுத்தல்கள் எதிர்காலத்தில் அதி கரிக்கலாம் என சர்வதேச மனித உரிமைகள் கண் காணிப்பகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெர முன பெற்றுக் கொண்ட வெற்றியினைத் தொடர்ந்து குறித்த அமைப்பு இந்த எச்சரிக்கை யினை விடுத்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசின் வாக்குச் சரிவாலே கூட்டமைப்பும் தோல்வியடைந்தது

### சிறீதரனும் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தோல்விக்கு தமிழரசுக் கட்சி யின் வாக்குச் சரிவே காரணம் என சுமந்திரனைத் தொடர்ந்து சிவஞானம் சிறீதரனும் குற்றம் சுமத்தியுள்ளார்.
கிளிநொச்சியில் 16

### 5 கிலோ கஞ்சாவுடன்

## யாழைச் சேர்ந்தவர் மன்னாரில் கைது

(மன்னார்)
மன்னார், பரப்பாங்கண்டல் பிரதேசத்தில் மோட் டார் சைக்கிள் ஒன்றில் 16

## சசிகலா வீட்டுக்கு நேரில் சென்ற அங்கஜன், சிவாஜிலிங்கம், அனந்தி



### சுமந்திரனின் பதவியேற்புக்கு இடைக்கால தடை கோர முடிவு

(யாழ்ப்பாணம்)
இலங்கை தமிழரசுக் கட்சி யின் யாழ். மாவட்ட வேட் பாளர் சசிகலா ரவிராஜின் வீட் டுக்கு யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த அரசியல் 16

### கடன் தொல்லை காரணமாக

## விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
கடன் தொல்லை தாங்க முடி யாமல் குடும்பப் பெண்ணொரு வர் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவத்தில் ஊரெழு கிழக்கு பகுதியை சேர் ந்த சுரேந்திரராசன் 15


### மீண்டும் பிரதமராக

## மகிந்த இன்று பதவியேற்கிறார்

(கொழும்பு)
ஒன்பதாவது பாராளுமன்றத்தின் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ இன்று பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார்.

களனி ரஜமஹா விகாரையில் இன்று முற்பகல் 9.00 மணிக்கு மகிந்த ராஜபக்ஷ புதிய பிர தமராக பதவிப் பிரமாணம் 15

## முன்னணியின் தேசியப் பட்டியல் கஜேந்திரனுக்கு



(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசியப் 15

ராஜ் ஜூவல்லர்ஸ்
அடகு பிடிப்பவர்கள்
Best Choice
1 பவுண் - 22 கரட்டிற்கு 75,000/=
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது.
1 வருட கால அவகாசம்
உங்களுக்கு நாங்கள் தருகின்றோம்.

(3183)
இல. 31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி ( சந்தைக்கு அருகில் )
Tel : 021 221 7287 / 076 636 1238

## பதவி வெற்றிடம்

வேலை தேடுபவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

◆ மேற்பார்வையாளர் ◆ நேரக் கணிப்பாளர் வெற்றிடம்.

பணியாற்ற விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

(3512)

தொடர்பு : 021 222 6924

## துர்க்கா திருமண சேவை

87 உத்தரம் 3 சூரியன் செவ்வாய்க் குற்றம் இல்லாத மணமகளிற்கு மணமகன் தேவை.

துர்க்கா திருமண சேவை

(3523)

தொடர்பு : 077 818 5978, 075 011 1122

## பௌதிகவியல்

T.K.KAJAN B.Sc

077 653 1177

(3508)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



Congratulations!

ஓய்வு நிலை உச்ச நீதிமன்ற நீதியரசர், முன்னாள் முதலமைச்சர் - வடமாகாணம்

### சி.வி. விக்னேஸ்வரன்

பாராளுமன்றத்திற்கு செல்வதை இட்டு பாராட்டுகின்றோம்

வாழ்த்துவோர் :-

அனந்தி சசிதரன்

அருணாயோகநேசன் டினோராஜ்

ஆ. பேரின்பநாதன்

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம்

(3516)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா, ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளர வேண்டுமா? பேன் பொடுகு தொல்லையா? முடிகொட்டுகிறதா? இளநரையா? தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? புதிதாக முடி முளைக்க வேண்டுமா? பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணைக்குளிசை

இந்த எண்ணையைப் பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்

(3515)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## இயற்கை மூலிகை மருத்துவம்

உங்களுக்கு ஏற்படுகின்ற மூட்டுவலி, முழங்கால் வலி, பாத விறைப்பு, வரிக்கோஸ் மற்றும் நீரிழிவு கொலஸ்ரோல், அதிகரித்த உடல் எடை போன்றவற்றிற்கும் முகத்தில் ஏற்படும் பருக்கள், கரும்புள்ளிகள், தலைமுடி உதிர்தல் போன்ற அனைத்து விதமான உடல் உபாதைகளுக்கும் இயற்கை மூலிகைகளிலான மருந்துகளைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது

### அகஸ்தியா இயற்கை மருத்துவ சிகிச்சை நிலையம்

(3521)

இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தொடர்புகளுக்கு

077 912 8944, 076 190 5341


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.07.2020 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

அமரர்

### லட்சுமி நடராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (10.08.2020) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 12.08.2020 புதன் கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோவில் வீதி, நந்தாவில், கொக்குவில் கிழக்கு.

(3517)

குடும்பத்தினர்


## NORTH LANKA IIT CITY CAMPUS

### Faculty of Agriculture - Kariyalai Nagapaduvaan

விவசாய ஆராய்ச்சி நிலையமும், பயிற்சி மாதிரிப் பண்ணையும்

பூநகரியை சார்ந்த மாணவர்களுக்கு விவசாயத்துறையில் பட்டம் பெறுவதற்கான அரிய சந்தர்ப்பம்!

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டச் சான்றிதழ்.

- # கற்கைநெறி - B.Sc in Agriculture Science
- # தகமை - A/L
- # காலம் - 3 வருடங்கள்
- # நேரடி செயன்முறைப் பயிற்சி

விண்ணப்ப முடிவுத் திகதி 20.08.2020

ரூபா 200000 வரையிலான புலமைப் பரிசில்!

மிகக் குறைந்த கட்டணம்.

வகுப்புக்கள் யாவும் விவசாயத்தில் (Ph.D) கலாநிதி பட்டம் பெற்ற விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்.

(C-010)

விபரங்களுக்கும், விண்ணப்பபடிவங்களுக்கும்.


Rector - 076 750 4535 பூநகரி சங்கீதா - 076 428 4134

# சிங்கள-பௌத்த பேரினவாத ஆட்சியை எதிர்கொள்ள நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியுள்ளது

## - நீதியரசர் விக்னேஸ்வரன் -

**(யாழ்ப்பாணம்)**

**"வடக்கு - கிழக்கு ரீதியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெரும் தோல்வியை சந்தித்துள்ளது. விடுதலைப்புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரனினால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு அழிக்கப்படக்கூடாது என்றும் தவறானவர்களை நீக்கி சரியானவர்களை தெரிவு செய்து கூட்டமைப்பு சரி செய்யப்பட வேண்டும் என்றும் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் இன்று சரியானவர்கள் வெளியேற்றப்பட்டு தவறானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு பாரதூரமான நிலைமையினை உருவாக்கி இருக்கின்றது என்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



தேர்தல் முடிவடைந்த பின்னர், ஆசனங்களுக்காக இடம்பெற்றுள்ள சில அசிங்கமான செயற்பாடுகள் கூட்டமைப்பின் எதிர்காலப் பாதையைக் கட்டியம் கூறி நிற்கின்றன என நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்துக்கு என்னைத் தெரிவு செய்த வாக்காளர்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகள். உங்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் . தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பங்காளிக்கட்சிகள் மற்றும் அனைத்து வேட்பாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கூட்டணியின் உருவாக்கம், பங்காளி கட்சிகளின் அர்ப்பணிப்பு, எமக்கிடையேயான புரிந்துணர்வு மற்றும் ஒற்றுமை ஆகியவை இல்லாமல் எனது இந்த வெற்றி சாத்தியம் ஆகியிருக்காது. நாம் தொடர்ந்து கூட்டணியாகச் செயற்படவே எண்ணியுள்ளோம்.

இந்தக் கூட்டணியை மேலும் பலப்படுத்தி தமிழ் மக்களுக்கான நேர்மையான, ஊழல் அற்ற, தமிழ் தேசியத்தின் அடிப்படையிலான அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவோம்.

6 மாதங்களுக்குள் உருவாக்கப்பட்ட கூட்டணி என்ற வகையிலும், அதனுள் கொரோனாக் காலம் உள் நுழைந்தது என்ற வகையிலும் கட்சிகள் அல்லது கூட்டணிக்குரிய மக்கள் கட்டமைப்புக்கள் உருவாக்கப்படாத நிலையிலும் நாம் பெற்றிருக்கும் வெற்றிமிகுந்த நம்பிக்கை அளிக்கின்றது. எமது கொள்கைகள் மற்றும் அவற்றை அடைவதற்காக நாம் முன்வைத்த அணுகு முறைகளை எமது மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஆணை வழங்கியிருக்கின்றார்கள். பாராளுமன்ற த்துக்கு உள்ளேயும் வெளியேயும் இவற்றை அடைவதற்கு நாம் பாடுபடுவோம்.

தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது நான் முன்வைத்த அதே குற்றச்சாட்டை நான் மீண்டும் நினைவுபடுத்த வேண்டியுள்ளது. நீங்கள் கடந்த காலத்தில் உரிமை அரசியலை தவிர்த்து சலுகை அரசியலை முதன்மைப்படுத்தி மேற்கொண்ட செயற்பாடுகளே இம்முறை தேர்தலில் கணிசமானளவு மக்கள் சிங்கள கட்சிகளுக்கும் அரசாங்க சார்பு தமிழ் கட்சிகளுக்கும் வாக்களிக்கும் நிலைமையை உருவாக்கியிருக்கின்றது. இதே தவறை மீண்டும் செய்து எமது 70 வருடகால போராட்டத்துக்கு சாவுமணி அடித்து விடாதீர்கள்.

வடக்கு- கிழக்கு ரீதியாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பெரும் தோல்வியை சந்தித்துள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரனினால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு அழிக்கப்படக்கூடாது என்றும் தவறானவர்களை நீக்கி சரியானவர்களை தெரிவு செய்து கூட்டமைப்பு சரி செய்யப்பட வேண்டும் என்றும் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் இன்று சரியானவர்கள் வெளியேற்றப்பட்டு தவறானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு பாரதூரமான நிலைமையினை உருவாக்கி இருக்கின்றது. தேர்தல் முடிவடைந்த பின்னர், ஆசனங்களுக்காக இடம்பெற்றுள்ள சில அசிங்கமான செயற்பாடுகள் கூட்டமைப்பின் எதிர்காலப் பாதையை கட்டியம் கூறி நிற்கின்றன.

எது எவ்வாறாக இருந்த போதிலும், தெரிவு செய்யப்பட்டுள்ள எல்லா தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், இந்த நாட்டில் எமது மக்களின் இருப்பு, அடையாளம் ஆகியவற்றை அழிவில் இருந்து மீட்கும் வகையில் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டிய ஒரு ஆபத்தான சூழ்நிலையில் இருக்கின்றோம். முன்னெப்போதும் இல்லாத வகையில், சிங்கள-பௌத்த பேரினவாதம் பாராளுமன்றத்துக்குள் அசுர பலத்துடன் புகுந்துள்ளது.

பெருமளவில் எமது பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படும் ஆபத்தும் கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியான இனப்படுகொலைகளும் தீவிரப்படுத்தப்படும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளன. இந்த அச்சுறுத்தலை தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்று சேர்ந்து முறியடிக்க வேண்டும். எமக்கு இடையேயான பொது உபாயங்கள் அவசியம். ஒன்றுபட்ட செயற்பாடுகள் அவசியம்.

எமது மக்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் எழுச்சியும் திரட்சியும், நாம் அவர்களுக்கு அஞ்சி ஒடுங்கி எமது சுய நிர்ணய உரிமைகளைப் பேசக் கூடாது என்றோ விட்டுக் கொடுக்க வேண்டும் என்றோ ஆகிவிடக் கூடாது. சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணைகளை நாம் வலியுறுத்த முடியாது என்று ஆகிவிடக் கூடாது. நில ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகவோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காகவோ நாம் போராட முடியாது என்று ஆகிவிடக் கூடாது. வடக்கு - கிழக்கு இணைப்பை நாம் வலியுறுத்தக் கூடாது என்று கூட ஆகிவிடக் கூடாது.

எமது இனத்தின் நன்மை கருதி தெரிவு செய்யப்பட்டுள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு கொள்கை அடிப்படையில் ஒன்றுபட்ட ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மிகவும் அவசியமாக இருக்கின்றது. இதற்கு நானும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் தயாராக இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# உரிமை இல்லாத தமிழன்; அடையாளம் இல்லாத தமிழனாக மாறிவிடுவான்!


சாணக்கியன்

(களுவாஞ்சிக்குடி)
மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சிக்கு அப்பால் அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழர் நலனில் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

2020 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் நான்கு தமிழ் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அனைவரும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக செயற்பட வேண்டும்.

நாம் உரிமை சார்ந்த அபிவிருத்திக்குள் மாத்திரம் தான் செல்ல வேண்டும். உரிமை இல்லாத அபிவிருத்தியை நாம் எப்போதும் ஏற்க முடியாது. உரிமை இல்லாத தமிழன்; அடையாளம் இல்லாத தமிழனாக மாறிவிடுவான்.



எமது உரிமை அடிப்படை உரிமையாகத்தான் இருக்க வேண்டும். இதில் இளைஞர்களையும் இணைத்து பயணிக்க வேண்டும். இந்த நாடு தமிழனின் நாடு என்பதிலும் சம உரிமை அனைவருக்கும் உண்டு என்பதில் இருந்தும் பின்வாங்கக் கூடாது.

மக்கள் என்னை நம்பி வாக்களித்துள்ளார்கள். உங்களுடைய நம்பிக்கை வீண்போக முடியாத அளவிற்கு நான் செயற்படுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஜ-2)

# கொரோனா கட்டுப்பாட்டில்; முடக்கல் நிலை ஏற்படாது



அனில் ஜாசிங்க

(கொழும்பு)
**கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் நாட்டின் எந்தவொரு பகுதியையும் முடக்கும் தேவை கிடையாது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்.

கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் ஊரடங்கு அமுல்படுத்தப்பட வேண்டிய தேவையும் இல்லையெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி தேர்தலை நடத்தியுள்ளது.

சுகாதார துறையுடன் இணைந்து மேற்கொண்ட பாரிய பணியாகவே இது அமைந்துள்ளது.

இந்நிலையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி வாக்களிப்பில் ஈடுபட்ட பொதுமக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## மகிந்தவுக்கு பாகிஸ்தான் பிரதமர் வாழ்த்து



(கொழும்பு)
நடைபெற்று முடிந்துள்ள பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றுக் கொண்ட அமோக வெற்றிக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடிய அவர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டின் அனைத்து அபிவிருத்தித்திட்டங்களுக்கும் கைகொடுக்கத் தாம் தயாராக இருப்பதாக இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் 145 ஆசனங்களை வென்றுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, பெரும்பான்மைப் பலத்துடன் புதிய அரசாங்கத்தை அமைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



## மயக்கமுற்ற கடற்படை வீரர் உயிரிழப்பு

(கொழும்பு)
திருகோணமலை திஸ்ஸ கடற்படை முகாமில் கடமையாற்றி வந்த கடற்படை வீரரொருவர் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தரமுயர்வுக்கான பரீட்சார்த்தப்போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை நேற்று முன்தினம் மாலை மயக்க நிலை ஏற்பட்டதாகவும் அதனையடுத்து கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது இவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு உயிரிந்தவர் பூனேவ - ஆணைக்கட்டு பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 34 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## தேர்தலுக்கு பின்னரும் நாட்டில் சுமுக நிலை



(கொழும்பு)
தேர்தலுக்கு பின்னரும் நாட்டில் சுமுகமான நிலை தொடர்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை எவ்வித வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நடமாடும் சேவைகளும் தொடர்ந்தும் கடமையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

## மீண்டும் சபாநாயகராகும் சமல்?



(கொழும்பு)
எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகும் 9 ஆவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக சமல் ராஜபக்ஷ தெரிவு செய்யப்படலாம் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சமல் ராஜபக்ஷ கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் நாடாளுமன்றத்தின் சபாநாயகராக பதவி வகித்தார். அத்துடன் தினேஷ் குணவர்த்தன சபை முதல்வராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## லொறி - மோ.சைக்கிள் மோதல் ஒருவர் பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)
பூகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லுனுகம பூகொடை வீதியின் நெல்லிகஹமுல சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியொன்றுடன் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ள நிலையில் 52 வயதுடைய பனாவல, லுனுகம பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பூகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## இராசிபலன்

09.08.2020
ஆடி 25, ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி பின்னிரவு 5.55 மணிவரை
ரேவதி முன்னிரவு 7.24 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சந்திராஷ்டமம் - பூரம், உத்தரம்

வளவன்

**மேஷம்** – எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், சுப விரயங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** – பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் முன் னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** – மன நிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** – ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**சிம்மம்** – கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

**கன்னி** – கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.

**துலாம்** – நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, கடன் பிரச்சினைகளிலிருந்து விடுபட முயற்சிகள் எடுப்பீர்கள்.

**விருச்சிகம்** – பூர்வீக சொத்துக்களால் அனுகூலமுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** – நண்பர்கள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**மகரம்** – உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், உறவினர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** – குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், போசன நன்மையுண்டு.

**மீனம்** – மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், கற்பனை மிகுதியான நாள், கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

தன்னம்பிக்கையும், துணிச்சலும் சிகர வாழ்வின் இரு சக்கரங்கள்.

# தேர்தல் தோல்வியை அடுத்து தலைமையில் மாற்றம் வேண்டும்

## ஐ.தே.க.வலியுறுத்து



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வி தொடர்பாக நாம் இன்னொருவரை குறைகூற வேண்டிய தேவை கிடையாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியை சந்தித்ததை அடுத்து, நேற்று முன்தினம் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கிடையில் விசேட கூட்டமொன்று சிறிகொத்தாவில் இடம்பெற்றது.

இதன்நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வி தொடர்பாக நாம் இன்னொருவரை குறைகூற வேண்டிய தேவை கிடையாது.

அரசாங்கத்துக்கு இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளது. இது சரியா - தவறா என எம்மால் கூறமுடியாது.

ஆனால், இதற்கு காரணம் சஜித் பிரேமதாஸ தான். பொதுத் தேர்தலில் அவர் எம்முடன் இல்லாமல் போயுள்ளதுடன், ஜனாதிபதித் தேர்தலின் போது நாம் அவருக்கான முழுமையான ஆதரவினை வழங்கினோம். இதனை இல்லை என்று கூற முடியாது.

எனினும், அந்தத் தேர்தலில் வெற்றி பெற முடியாது போனது. இதன் ஊடாக எமது வாக்குவீதம் குறைவடைந்துள்ளது.

இந்தத் தோல்வியை அடுத்து கட்சியின் தலைமையில் மாற்றம் வேண்டும் எனக் கூறினாலும், இப்போது அது தொடர்பாக நாம் எந்தவொரு தீர மானத்தையும் எடுக்கவில்லை" என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# தேர்தல் மத்திய நிலையங்களை தொற்று நீக்கம் செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நிறைவடைந்த பின்னர் தேர்தல் மத்திய நிலையங்களாக பயன்படுத்தப்பட்ட அனைத்து நிலையமும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்படவுள்ளது.

பாடசாலைகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தேர்தல் மத்திய நிலையங்கள் மற்றும் வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களாக பயன்படுத்தப்பட்ட இடங்கள் இவ்வாறு கிருமித் தொற்று நீக்கம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் முப்படையினரின் தலையீட்டில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# பெய்ரூட் வெடி விபத்து; நீதியான விசாரணை தேவை

## ஐ.நா.வலியுறுத்து



(பெய்ரூட்)

பெய்ரூட் வெடி விபத்து தொடர்பாக சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் லெபனான் அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் செய்தி தொடர்பாளர் ரூபர்ட் கொல்வில் கூறுகையில், "பெய்ரூட் வெடிவிபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குரல்கள் கேட்கப்பட வேண்டும். அவர்களின் கோரிக்கைப்படி விபத்து தொடர்பாக சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும்" எனக் கூறினார்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கடந்த செவ்வாய்க் கிழமை, 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் வெடித்து சிதறியதில், இதுவரை 149பேர் உயிரிழந்ததோடு, 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மேலும், 200,000 முதல் 250,000 பேர் வரை வீடுகளை இழந்துள்ளனர்.

இன்னமும் மீட்புப் பணிகள் தொடருவதால் உயிரிழப்பின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடுமென அஞ்சப்படுகின்றது.

இது ஒரு விபத்து என்றபோதிலும் நூற்றுக்கும் மேற்பட்டோரின் உயிர் பறிபோனதற்கு அதிகாரிகளின் அலட்சிய போக்கே காரணம் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

எனவே இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தி விபத்துக்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தி தக்க தண்டனை வழங்க வேண்டும் என லெபனான் மக்கள் மட்டுமன்றி உலகத் தலைவர்களும் வலியுறுத்தி வருகின்றனர். (ஜ-4)

# சசிகலாவிற்கான குரல் எமது கட்சியிலிருந்து ஒலிக்கும்

## அங்கஜன் திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)

**சசிகலா ரவிராஜினுடைய கண்ணீர், ஆதங்கம் எமக்கும் கவலையளிக்கிறது. அவருக்கான குரல் எமது கட்சியிலிருந்து ஒலிக்கும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணம் - கோவில் வீதியிலுள்ள அவரின் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கை யில்,

என்னை வெற்றிபெற வைத்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கக் கட மைப்பட்டுள்ளேன்.

வரலாற்றில் முதல் தடவை யாக இம்மண்ணில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மக்களால் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளேன். "என் கனவு யாழ்" என்ற செயற் றிட்டத்தை அனைத்து மக்கள் வாக்காளர்கள், வேட்பாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இணைத்து செயற்படுத்த தீர்மானித்துள் ளோம்.

சசிகலா ரவிராஜிற்கு இழை க்கப்பட்டது அநீதியாகும். அவ ரது கண்ணீர், ஆதங்கம் எமக் கும் கவலையளிக்கிறது. நிச்ச யமாக அவருக்கான குரல் எமது கட்சியிலிருந்து ஒலிக்கும். எமது பிரதேச மக்கள், இளைஞர்களு க்கு வேலைவாய்புக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது எனது கடமை.

அதை நான் பொறுப்புக்கூற வேண்டிய பாராளுமன்ற உறுப் பினர் என்ற வகையில் நிச்சயம் நிறைவேற்றுவேன். ஒருவர் ஒருவரை விமர்சன ரீதியாக தாக்குவதை விடுத்து மக்களு க்கு உதவிகளை செய்து கொடுப் போம். நான் ஒன்று கொடுத் தால் நீங்கள் இரண்டு கொடுங் கள் பரவாயில்லை. எதுவாகி லும் மக்களைத் தானே சென்ற டைகிறது. பிற கட்சிகளை விமர் சிக்கும் உடன்பாடு இனி எனக் கும் இருக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (2-8)



**நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலித்து வெளிப்படுத்தினர். இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதன் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், க.சுகாஷ், திருமதி.வாசுகி சுதாகர், டிலான் பத்மநாதன் ஆகியோருடன் முன்ன ணியின் ஆதரவாளர்களும் பங்குகொண்டனர்.**

# யாழில் தங்கத்தின் விலை உச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கத் தின் விலை நேற்று ஒரே நாளில் பவுணுக்கு ஆயிரத்து 500 ரூபாய் உயர்வடைந்து வரலாற்றில் முதன்முறையாக ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் என்ற புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

கொரோனாப் பொது முடக் கத்திற்குப் பின்னர் சர்வதேச பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்தத்தின் காரணமாக தங் கத்தின் விலை கிடுகிடுவென உயர்வடைந்து வருகிறது.

இதனால் தங்கத்தின் விலை வரலாறு காணாத வகையில் தாண்டியுள்ளது. இந்நிலையில் தங்கத்தின் விலை நேற்று ஒரேநாளில் பவுணுக்கு ஆயிர த்து 500 ரூபாய் உயர்ந்துள் ளது. நேற்று முன்தினம் அதன் விலை திடீரென்று 4 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரித்திருந்தது. இதனால் 24 கரட் தூய தங்கம் ஒரு பவுணின் விலை நேற்று ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையாகிறது.

அத்தோடு 22 கரட் ஆபர ணத் தங்கத்தின் விலை பவுண் ஒன்று ஒரு இலட்சத்து 850 ரூபாவுக்கு விற்பனை செய்யப் படுகிறது. நேற்று முன்தினம் அதன் விலை 99 ஆயிரத்து 450 ரூபாவாகக் காணப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (2-8)

# சிறையில் இருந்து சாதித்த இருவர்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்ற தேர் தலில் போட்டியிட்ட இருவர் இம் முறை தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்கு தெரிவா கியுள்ளனர்.

வேட்பு மனு தாக்கல் செய் யப்பட்ட பின்னர் கொலைக் குற் றவாளியாக மரண தண்டனை வழங்கப்பட்ட பிரேமலால் ஜய சேகரவும் மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபராக விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ள பிள் ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்த னுமே இவ்வாறு இம்முறை தேர்தலில் வெற்றி பெற்றுள்ள னர்.

1,04,237 விருப்பு வாக்கு களைப் பெற்றுள்ள பிரேமலால் ஜயசேகர இரத்தினபுரி மாவட்ட த்தில் பொதுஜன பெரமுன கட்சி யின் சார்பில் அதிக விருப்பு வாக் குகள் பெற்றுக் கொண்ட முன் னாள் அமைச்சர் பவித்ரா வன் னியாராச்சிக்கு அடுத்தபடியாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

2015 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் காவத்தையில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விருப்பு வாக்கு விபரங்கள் வெளியிடப்ப ட்டுள்ள நிலையில் தமிழ் மக் கள் விடுதலைப் புலிகள் கட்சி யின் சார்பில் போட்டியிட்ட சிவ நேசதுரை சந்திரகாந்தன் 54,198 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். (ஜ-2)


# உப வாடகை கடைகளை மூட பிரதேச சபை உத்தரவு

## வியாபாரிகள் பாதிப்பு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபையினால் நெல்லி யடி நவீன சந்தை மற்றும் மத் திய சந்தைக்குள் இருக்கும் உப வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள கடைகளை பூட்டுமாறு நேற்று முன்தினம் 7 ஆம் திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதால் வாடகை கொடுத்து கடை நட த்துபவர்கள் பெரிதும் பாதிப்பிற் குள்ளாகியுள்ளனர்.

வங்கிக்கடன் மூலம் பணம் முதலீடு செய்தவர்கள் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து வியாபார நடவடிக்கைக ளில் ஈடுபடுபவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.(2-8-60)



**அங்கஜன் இராமநாதனின் நிதிப் பங்களிப்புடன் குருநகரில் நீண்டகாலமாக கவனிப்பாரற்று இருந்த வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன.**

**(படம்:குருநகர் செய்தியாளர்)**

# அதிக மழை வீழ்ச்சி பதிவாகியது

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையினால் பல்வேறு பகுதிகளிலும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகி வருகின்றது. இந்நிலையில் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகில் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறிப்பிடத்தக்க அளவு அதிக ரித்துள்ளது.

பிரதான நீர்த் தேக்கங்க ளில் கொள்ளளவானது நூற்றி ற்கு அறுபது வீதமாக அதிக ரித்துள்ளதாக மின்சக்தி அமை ச்சின் ஊடகப் பேச்சாளர் -சுலக் ஷன் ஜயவர்தன தெரிவித்துள் ளார்.

அத்துடன் நாட்டிற்கான மின் தேவையில் நூற்றிற்கு முப்பத் தைந்து சதவீதமான மின்சாரம் நீர்மின் உற்புத்தி நிலையங்க ளினூடாகவே பெற்றுக் கொள் ளப்படுவதாகவும் தெரிவித் தார். (ஜ-2)

# இசைக்கல்லூரியின் இலவச வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசடி விநா யகர் ஆலய ரஸிக ரஞ்ஜன சபா இசைக்கல்லூரியில் வாய்ப்பா ட்டு, வயலின், மிருதங்கம், நடனம், வீணை ஆகிய துறை களில் புதிய வகுப்புகள் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெ றும்.

இலவசமாக நடத்தப்படும் இவ் வகுப்புகளில் வயது வேறு பாடின்றி அனைவரும் பங்கு பற்ற முடியும் என ஏற்பாட்டாள ர்கள் அறிவித்துள்ளனர்.(ஜ-2)

## பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2020 மாவட்ட ரீதியிலான தேர்தல் முடிவுகள் (நேற்றைய திருத்தம்)

**கம்பஹா மாவட்டம்**

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 807,896 | 13 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 285,809 | 04 |
| தேசிய மக்கள் சக்தி | 61,833 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 28,282 | - |

**அம்பாறை மாவட்டம்**

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 126,012 | 03 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 102,274 | 02 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 43,419 | 01 |
| தேசிய காங்கிரஸ் | 38,911 | 01 |

# தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலை பெற நடவடிக்கை



(கொழும்பு)

தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ள சந்தேகநபர்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் அறுவுறுத்தலை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலப்பகுதியில் பதிவான சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ள சந்தேக நபர்களின் தகவல்களை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜேசூரிய தெரிவித்தார். (ஜ-4)


**Canada VISA**
நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

STUDENT VISA Study, Work & Settle
- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் - Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

VISIT VISA பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

REFUSED VISA உங்கள் மறுக்கப்பட்ட வீசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Sponsor Letters
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும். செய்து தரப்படும்

Hotline: 0777-761 346

STUDENT VISA
VISIT VISA
TOURIST VISA

USA / UK
Australia
New Zealand
Italy / France
Swiss
Germany
Romania
Norway
Finland
Poland

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute
(C-996)
FLEX Graphic

10 வருட கால நம்பிக்கையான சேவை



**சேவை**

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை
AAA Gold Center

0765684346 (C-996)



**தேவை**

யாழ்.நகரில் உள்ள உணவகம் ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.
- உணவு சமைப்பவர்
- ரொட்டி வேலை
- உணவு பரிமாறுபவர்

சம்பளம் கதைத்து தீர்மானிக்கப்படும். (3502)

தொ.இல:- 0774652860



**உலகின் மிகப்பெரிய ஒன்லைன் தியான நிகழ்வுக்கு வரவேற்கிறோம்**

**ஏகம் விஷ்வ ஷாந்தி உற்சவம் (2020 ஒகஸ்ட் 9 முதல் 15 வரை)**



ஸ்ரீப்ரீதாஜி மற்றும் ஸ்ரீகிருஷ்ணாஜி ஆகியோர் ஏகம் விஷ்வ ஷாந்தி உற்சவத்தை வருடாந்திர நிகழ்வாக உருவாக்கியுள்ளனர், இதில் உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் ஒன்றிணைந்து மனித சைதன்யத்தில் அமைதியை நோக்கி ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்த தியானிக்க உள்ளனர். ஒவ்வொரு நாளும் 68 நிமிட தியானத்தில் ஒன்லைனில் எங்களுடன் சேரலாம், ஏகம் சக்தி க்ஷேத்திரத்திலிருந்து நேரடியாக ஒளிபரப்பப்படும். திருப்பதிக்கு அருகில் அமைந்துள்ள ஏகம் க்ஷேத்திரம் மனித குலத்தின் சைதன்யத்தை தாக்கம் செய்யும் வகையிலும், மக்களை அதிக அமைதி மற்றும் ஒற்றுமையை நோக்கி நகர்த்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அமைதிக்காக 7 நாட்கள் நடைபெறும் இந்த உற்சவத்தின் சிறப்பு நோக்கங்கள்**

**நாள் 1 - நாடுகளுக்கு இடையிலான அமைதி**
**நாள் 2 - குழந்தைகளுக்கு அமைதி**
**நாள் 3 - இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையிலான அமைதி**
**நாள் 4 - இயற்கைக்கும் வனவிலங்குகளுக்கும் அமைதி**
**நாள் 5 - பெண்களுக்கு அமைதி**
**நாள் 6 - பொருளாதார நிறைவில் அமைதி**
**நாள் 7 - கூட்டு மனித பரிணாம வளர்ச்சிக்கான அமைதி**

அமைதியான மனிதர்களை உருவாக்குவதற்காக இந்த உற்சவம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அமைதியான மனிதனால் மட்டுமே அமைதியான குடும்பம், அமைதியான அமைப்பு மற்றும் அமைதியான உலகத்தை உருவாக்க முடியும். இந்த மாபெரும் நோக்கத்தில் எங்களுடன் இணையுங்கள்.

எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் - https://ekam.org/ewpf/

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். பின்வரும் இணைப்பைக் கொண்டு நேரடி நிகழ்வில் பங்கு ஏற்கவும். தமிழில் இணைய https://www.youtube.com/Ekam Channel Tamil Live.

தினமும் காலை :- 10.00, மாலை:- 6.00 மணி

விபரங்களுக்கு: 0771255398, 0768341221



**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 56 செவ் 1 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்: Diploma in Teaching. ஆசிரியர்.
எதிர்பார்ப்பு: தகுந்த பெண்
தொ.இ: B/11072

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 20 ½ செவ் 7 இல்
உயரம்:165cm
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சொந்தக் கடை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11074

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: செவ் 5 இல்
உயரம்: 5'6''
தகைமை/தொழில்:Q.S in Abudhabi (Private)
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11077

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 56 செவ் 7 இல்
உயரம்: 5'6''
தகைமை/தொழில்: B.Sc (Agricultural Technology Management), ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச, உயர் தனியார் உத்தியோகமுள்ள பெண்.
தொ.இ: B/11078

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 கிறிஸ்தவம்
உயரம்: 5'6''
தகைமை/தொழில்: B.Sc. Software Engineer.(Private)
எதிர்பார்ப்பு: மருத்துவர், பொறியியலாளர், கணக்காளர் போன்ற உத்தியோகத்தர்.
தொ.இ: G/8644

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: 39 ¼ சூரி, செவ் 1 இல்
உயரம்: 5''
தகைமை/தொழில்: HND IT,
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/8653

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 28 செவ் 4 இல்
உயரம்: 154cm
தகைமை/தொழில்: Q.S. (Private)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர் அல்லது வெளிநாட்டில் வசிப்பவர்.
தொ.இ: G/8662


பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: 24 ¾ செவ் 6 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: பட்டதாரி. ஆசிரியர்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/8679

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# முதலாவது கொரோனா தடுப்பூசி பதிவுக்கு வருகிறது

(மொஸ்கோ)

**உலகெங்கிலும் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. கொரோனா வைரஸ் நோய்க்கான மருந்தை கண்டறிய உலக நாடுகள் தொடர் முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் தம்மால் கண்டு பிடிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பு மருந்தை எதிர்வரும் 12 ஆம் திகதி பதிவு செய்ய இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.**



இதுகுறித்து ரஷ்ய சுகாதாரத் துறை அமைச்சர் முரஸ்கோ உரையாற்றிய போது "உலகின் முதல் கொரோனாத் தடுப்பு மருந்து எதிர்வரும் 12 ஆம் திகதி பதிவு செய்யப்படவுள்ளது. 2020 ஒக்டோபர் முதல் தடுப்பூசி மருந்துகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தடுப்பூசி தொடர்பான அனைத்துச் செலவுகளும் பட்ஜெட்டில் அடங்கும்" என அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் இந்தத் தருணத்தில் மூன்றாம் கட்டம் நடந்து கொண்டிருக்கிறது. பரிசோதனை முயற்சிகள் மிக முக்கியம்.

நாங்கள் தடுப்பு மருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்துள்ளோம்" என தெரிவித்துள்ளார். (ஐ-4)

## லெபனான் வெடிப்பு சம்பவம்

# காயமடைந்த இலங்கையர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

லெபனான் தலைநகர் பெய்ரூட் நகரில் இடம்பெற்ற பாரிய வெடிப்பு சம்பவத்தில் காயமடைந்த இலங்கையர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளதாக லெபனானுக்கான இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

பெய்ரூட் நகரில் சுமார் 30 ஆயிரம் குடியிருப்புக்கள் முழுமையாக சேதமடைந்துள்ளதாக தூதரக தகவல்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்தவர்களுக்கு அவசர சிகிச்சையளிப்பதற்காக தேவை ஏற்படும் இரத்தத்தை பெற்றுக்கொடுப்பதற்காக நேற்று இரத்ததான நிகழ்வொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாக லெபனானுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வெடிப்பு சம்பவத்திற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென வலியுறுத்தி மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ-4)

# ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைத்து முன்னோக்கிச் செல்ல தீர்மானித்துள்ளோம்

## தயாகமகே தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைத்து முன்னோக்கி செல்ல தீர்மானித்துள்ளோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாகமகே தெரிவித்துள்ளார்.



பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியை சந்தித்ததை அடுத்து நேற்று முன்தினம் அந்தக்கட்சியின் முக்கியஸ்தர்களுக்கிடையில் விசேட கூட்டமொன்று சிறிகொத்தாவில் இடம்பெற்றது.

இதன் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைத்து முன்னோக்கி செல்ல தீர்மானித்துள்ளோம்.

இந்தத் தேர்தலில் நாம் பாரிய தோல்வியை சந்தித்துள்ளோம்.

ஜனாதிபதியிடமே அரசாங்கம் இருக்க வேண்டும் என மக்கள் நினைத்துள்ளதால் கூட இந்தத் தோல்வி எமக்குக் கிடைத்திருக்கலாம்.

இன்னொரு பக்கத்தில் எமது கட்சியின் பிளவையும் நாம் எடுத்துக்கொள்ளலாம். சஜித் பிறேமதாஸ எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்று, எமது கட்சியை அழித்ததோடு, அவர் சார்ந்த கட்சியையும் அழித்துள்ளார்.

இவை தான் தோல்விக்குக் காரணம் என நாம் நினைக்கிறோம்" என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் விபரம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தி 7 பேரைக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் தேசியப்பட்டியலை தேசிய தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ளது.

சஜித் பிறேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில், அக்கட்சிக்கு 7 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன.

ரஞ்சித் மத்தும பண்டார
ஹரீன் பெர்னாண்டோ
இம்தியாஸ் பாகீம் மக்கார்
திஸ்ஸ அத்தநாயக்க
எரான் விக்ரமரத்ன
மயந்த திஸாநாயக்க
தயாகமகே

ஆகியோர் வேட்பாளர்கள் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் செல்ல உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. (ஐ-4)

# சிறைச்சுவருக்கு மேலே வேலி அமைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் போதைப்பொருள், மொபைல் போன்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட பொருட்கள் உள்ளே நுழைவதைத் தடுக்க பாதுகாப்பு சுவருக்கு மேல் வேலி அமைக்கப்படவுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த சிலகாலமாக போதைப்பொருட்கள், தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றைத்தடுப்பதற்காக இவ்வாறு மதிலுக்கு மேல் வேலி அமைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு

(கொழும்பு)

பாடசாலைகள் நாளைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பாடசாலையில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் கொரோனாவிற்கு மத்தியில் டெங்கு நோய்த்தாக்கமும் தீவிரமடைந்து வருவதால் குறித்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் அனைத்துப்பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 130 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 350 |
| தக்காளி | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 100 |
| கோவா | 160 | 140 | 160 |
| கரட் | 120 | 160 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 |
| புடோல் | 50 | 70 | 80 |
| வாழைக்காய் | 120 | 130 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 160 |
| பயற்றங்காய் | 140 | 100 | 120 |
| லீக்ஸ் | 90 | 90 | 150 |
| பீற்றூட் | 80 | 90 | 100 |
| கறிமிளகாய் | 350 | 300 | 350 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 120 |
| போஞ்சி | 160 | 280 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 45 | 40 |
| தேசிக்காய் | 150 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60-80 |
| இராசவள்ளி | — | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 240 | 200 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 |
| ஈரப்பலா | 60 | -- | 60 |

# கேரளாவில் விமான விபத்து
# உயிரிழப்பு 18 ஆக உயர்வு



(கேரளா)

**கேரளாவில் இடம்பெற்ற விமான விபத்து சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளது.**

டுபாயில் இருந்து கேரள மாநிலம் கோழிக்கோடு கரிப்பூர் விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏர் இந்தியாவின் ஐ.எக்ஸ். 1344 விமானம் வந்தடைந்தது.

184 பயணிகள் மற்றும் 6 விமான பணிக்குழுவினர் என மொத்தம் 190 பேர் பயணித்த விமானம், கோழிக்கோடு விமான நிலையத்தை வந்தடைந்து 10 ஆவது ஓடுதளத்தில் தரையிறங்க முற்பட்டது.

இதன்போது ஓடுதளத்தில் வழுக்கிக்கொண்டு அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து குறித்த விமானம் விபத்துக்குள்ளானது.

குறித்த விமானம் இரண்டு பாகங்களாக உடைந்தது. இந்த பாரிய விபத்து தொடர்பாக தகவலறிந்து அருகில் இருந்த மக்கள் உடனடியாக சம்பவம் நடைபெற்ற பகுதிக்கு விரைந்து சென்று விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். (ஜ-4)

## குணமடைந்தோர் 2574

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் மேலும் 12 பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2574 ஆக உயர்வடைந்துள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேலும், 252 கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கையில் இதுவரை மொத்தமாக இரண்டாயிரத்து 839பேருக்குகொரோனாவைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதுடன் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## பெரமுனவுக்கு ஜப்பான் வாழ்த்து

(கொழும்பு)

நிறைவடைந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன பெற்றுக் கொண்ட வெற்றிக்கு ஜப்பான் அரசாங்கம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளது. (ஜ-4)

## பெய்ரூட் வெடி விபத்து; தகவலறிய தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

லெபனானில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்காக தமது அலுவலகம் நாளாந்தம் செயற்படுமென அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

குறித்த வெடிப்பு சம்பவத்தில் 10 இலங்கையர்காயமடைந்தனர். அவர்களில் மூன்று பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போது பெருமளவான இலங்கையர்கள் தூதரக அலுவலகத்துடன் தொடர்ச்சியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலர் உணவு வழங்கும் செயற்பாடு தற்போது முழுமையாக இடம்பெற்று வருவதாகவும் வெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தகவல்களை வழங்குவதற்காக 24 மணி நேரமும் இயங்கும் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய 096157 69585 என்ற இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

## நாளை பாடசாலைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நிறைவடைந்துள்ள நிலையில் நாளை திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பாடசாலைகளையும் முழுமையாக ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்போது 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளை கட்டம் கட்டமாக ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் பிரதி செயலாளர் ரஞ்சித் சந்திரசேகர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில், 200 இற்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேண முடியுமானால் அனைத்து மாணவர்களையும் அழைக்க முடியும்.

200 ஐ விட அதிக மாணவர்கள் காணப்படுகின்ற பாடசாலைகளில் கட்டம் கட்டமாக மாணவர்களை வரவழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (ஜ-2)

## தேசியப் பட்டியலில் ஞானசாரரின் பெயர்

(கொழும்பு)

மக்கள் சக்தி கட்சி (அபே ஜன பல பக்ஷ) கட்சியின் தேசியப் பட்டியலில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இக்கட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ள ஒரு ஆசனத்தை பயனுடையதாக உபயோகிக்க வேண்டும் என கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

இக்கட்சி மொனராகலை, கொழும்பு, குருநாகல் மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் போட்டியிட்டு 67 ஆயிரத்து 758 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டியல் மூலம் ஒரு ஆசனம் இக்கட்சிக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. தேசியப் பட்டியலில் ஞானசார தேரரின் பெயரை உள்ளடக்குவதற்கு அக்கட்சியின் செயற்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது. (ஜ-4)

## தேசியப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட லக்ஸ்மன் பியதாஸ

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்ட பின்னர் ஒரு சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை என்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் தேசிய பட்டியலில் ரோஹன லக்ஸ்மன் பியதாஸவை நியமிப்பதாக ஆரம்பத்திலேயே இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-2)



## 68 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தனர்

(கொழும்பு)

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 68 பேர் நேற்று தனிமைப்படுத்தலினை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனர்.

தற்போதுவரை 29 ஆயிரத்து 621 பேர் தனிமைப்படுத்தலினை நிறைவு செய்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (ஜ-2)

# தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்கு தேசியப் பட்டியலில் இடமில்லை

## சஜித் திட்டவட்டம்

(கொழும்பு)

**பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்கு தேசியப் பட்டியலில் வாய்ப்பளிப்பதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் 54 ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்த 27 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புவதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தேசியப் பட்டியல் தொடர்பான கலந்துரையாடல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

தேர்தலில் பின்னடைவைச் சந்தித்தவர்களுக்குத் தேசியப் பட்டியலில் வாய்ப்பு வழங்கப் போவதில்லை எனக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் முன்னரே அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் மக்களின் விருப்பமும் அதுவாகவே உள்ளது. எனவே பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்குத் தேசியப் பட்டியலில் வாய்ப்பளிப்பதில்லை என அவர் மேலும் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் விபரங்களை சமர்ப்பிக்க காலக்கெடு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள அனைத்துக் கட்சியினரதும் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசியத் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் பொதுத்தேர்தல் தேசியப் பட்டியலை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## கேரள விமான விபத்து பாதுகாப்பு குறைபாடே காரணம்



(கேரளா)

கேரள கோழிக்கோடு விமான நிலையத்தின் பாதுகாப்பில் காணப்பட்ட குறைபாடே விபத்திற்குக் காரணமென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒன்பது வருடத்திற்கு முன்னரே குறித்த விடயம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விமான நிலையம் மலைமீது அமைந்துள்ளது. அதன் ஓடுபாதை நீளம் உரிய அளவில் நிர்மாணிக்கப்படவில்லை. மழைக்காலங்களில் ஓடுபாதையில் விமானம் தரையிறங்குவதற்கான நெறிமுறைகளும் வகுக்கப்பட்டிருக்கவில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு விமானம் தரையிறங்க முற்பட்ட நிலையில் அதிக மழை காரணமாக பள்ளத்தாக்கில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

குறித்த விமானத்தில் 191 பேர் பயணித்துள்ளனர். காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டவ.ர்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக இந்திய வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஜ-2)

## வர்த்தமானி அறிவிப்பின் பின்னரே அமைச்சரவை பதவியேற்கும்

(கொழும்பு)

தேசியப்பட்டியலில் தெரிவான பிரதிநிதிகளின் பெயர்ப் பட்டியல் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பின்னரே புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பதவியேற்பு இடம்பெறவுள்ளது.

தேசியப் பட்டியலில் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் அடுத்தவாரம் வெளியிடப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அனைத்துக் கட்சிகளினதும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரம் கிடைக்கப் பெற்றதையடுத்து அதனை வர்த்தமானியில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதனையடுத்து அமைச்சரவை பதவியேற்பு இடம்பெறவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஜ-2)


## கொரோனா நெருக்கடியிலும் மீண்டெழும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலும் அமெரிக்க பொருளாதாரம் உயர்வடைந்துள்ளதாக அமெரிக்க தொழிற்றுறை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

அந்தவகையில், ஜூலை மாதத்தில் 1.8 மில்லியன் வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு வேலையின்மை 10.2 வீதமாகக் குறைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் 4.8 மில்லியன் வேலை இழப்புக்கள் ஏற்பட்டது. பண்ணையில்லாத ஊதியக் குறைப்பு, நாட்டில் ஏற்பட்ட பொதுமுடக்கம், முடக்கக்கட்டுப்பாடுகளின் தளர்வையடுத்து கொரோனாத் தொற்று நோயாளர்களின் அதிகரிப்பு என்பன வேலையிழப்புக்களை அதிகரிக்கச் செய்தன.



ஆனால், மில்லியன் கணக்கான மக்கள் வேலை இழந்தாலும் மில்லியன் கணக்கானவர்கள் அவற்றை மீண்டும் பெற்றுள்ளனர். இதன்படி, கடந்த மாதம் வேலையில்லாத தொழிலாளர்களின் எண்ணிக்கை 1.4 மில்லியன் குறைந்து 16.3 மில்லியனாக இருந்தது.

இந்நிலையில், கொரோனா நெருக்கடியில் இருந்து மீண்டு முன்னைய பொருளாதார வலிமையைப் பெறுவதற்கு இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## ஒரு வாரத்திற்கு பேரணிகள் கூட்டங்கள் நடத்த தடை

(கொழும்பு)

தேர்தல் முடிவடைந்த நிலையில் ஒருவார காலத்திற்கு பேரணிகள் மற்றும் கூட்டங்களை நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



தேர்தலின் பின்னரான காலப்பகுதியில் பாதுகாப்புப் பணிகளில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் சட்டப்பிரிவுப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலின் பின்னர் நாட்டில் சமுகமான நிலை தொடர்கிறது. எந்தவொரு பாரிய வன்முறை சம்பவங்களும் பதிவாகவில்லை. அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு பொலிஸ் நடமாடும் சேவைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# தேசியப்பட்டியலில் இருந்து நான் விலகிவிட்டேன்

## டில்ஷான் அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் தேசியப்பட்டியில் இருந்து கடந்த மாதம் தொடக்கத்தில் விலகியதாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் திலகரட்ன டில்ஷான் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் 17 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ள நிலையில் அதில் டில்ஷானின் பெயர் உள்ளடக்கப்படவில்லை.

இது குறித்து கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட டில்ஷான் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

தேசியப் பட்டியலில் இருந்து விலகுவதற்கான தனது முடிவை அறிவித்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுனர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு கடந்த மாதம் தொடக்கத்தில் கடிதம் அனுப்பியுள்ளேன்.

அந்த பதவி இன்னும் தகுதியான ஒருவரிடம் செல்ல வேண்டும் என்று நான் உணர்ந்தேன். நான் கிரிக்கெட் விளையாடுவதில் அதிக நேரம் செலவிட்டேன்.

எனவே இப்போது எனது குடும்பத்தினருடன் சிறிது நேரம் செலவிட விரும்புகிறேன். ஆகையினால் இந்த நேரத்தில் அரசியலில் நுழையாமல் இருப்பதே சிறந்த முடிவு என்று நான் நினைத்தேன்.



இதேவேளை, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான பிரசாரத்தில் நான் என்னால் முடிந்த அனைத்தையும் செய்தேன்.

இந்நிலையில் ஜனாதிபதி நாட்டை எவ்வாறு வழிநடத்துகிறார் என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# மகிந்தவிற்கு சர்வதேச ஊடகங்கள் பாராட்டு



(கொழும்பு)

பொதுத் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு கிடைத்த வெற்றியை சர்வதேச ஊடகங்கள் பாராட்டி எழுதியுள்ளன.

சில ஊடகங்கள் இந்த வெற்றியை ராஜபக்ஷவின் சுனாமி என வர்ணித்துள்ளன. இது குறித்து விரிவான வகையில் தத்தமது ஊடகங்களில் முக்கிய இடமளித்து எழுதியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை அமோக வெற்றியை நோக்கி வழிநடத்தியுள்ளார்கள் என அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

கடந்த காலத்தில் சர்ச்சைக்குரிய கட்டுரைகளை எழுதிய நியூயோர்க் ரைம்சின் மரியா அல் அப் என்ற கட்டுரையாளர், இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திய ஸ்திரத்தன்மையை பொதுத் தேர்தலில் மக்கள் அங்கீகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பி.பி.சி., சி.என்.என், அல்-ஜசீரா, நியூயோர்க் ரைம்ஸ், வோஷிங்டன் போஸ்ட், பீப்பில்ஸ் டெய்லி, ரஷ்யா ருடே முதலான செய்தி நிறுவனங்களும் இலங்கையின் தேர்தல் குறித்து செய்திகளை வெளியிட்டுள்ளன.

இந்தியாவின் நியூஸ் எயிட்டீன் இணையத்தளம் எழுதிய விமர்சனத்தில், தாமரை மொட்டின் மூலம் யானையொன்று வீழ்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் த ஹிந்து, ரைம்ஸ் ஒவ் இந்தியா, என்.டி.ரிவி, ஹிந்துஸ்தான் ரைம்ஸ் முதலான பல ஊடகங்கள் இலங்கையின் பொதுத் தேர்தல் பற்றி விரிவான விமர்சனங்களை எழுதியுள்ளன.

இலங்கை மக்கள் வலுவான தலைமைத்துவத்திற்கும், நிலையான அரசாங்கத்திற்குமாக வாக்களித்துள்ளார்கள் என அவை குறிப்பிட்டுள்ளன. (ஐ-4)

# புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும்

## வாழ்த்திய கரு

(கொழும்பு)

புதிதாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் "கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்" என அழைப்பதற்காக கௌரவத்தை சம்பாதிக்க வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்திற்கு முதல் முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள பதிவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முதன் முறையாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களை வாழ்த்துகிறேன். எந்தத் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்கவும் நாடாளுமன்றம் தொடர்பாக பொது மக்களின் நிலைப்பாட்டை



மேம்படுத்தவும் இது சந்தர்ப்பமாகும்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் என அழைக்கப்படுவதற்கான கௌரவத்தை புதியவர்கள் சம்பாதிக்க வேண்டும் எனவும் கரு ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார். (ஐ-2)




### நல்லாட்சி புரிந்திடுவாய்

நல்லையம்பதி கந்தா - உன்னை
தினம் காண ஓடி வந்தேன்
உந்தன் அலங்காரம் ரசித்தேன்- உன்
புகழ் பாடி சரணடைந்தேன்
அழகா முருகா காத்திடுவாய்
கொடிய நோயினை அழித்திடவே -நீ
வேல் கொண்டு காத்திடுவாய் வேலவா
மானிடர் மனம் குளிர - நல்லைக்குமரா
நல்லாட்சி புரிந்திட அருள்வாயே

யோ.சிவதர்ஷினி,
உரும்பிராய்.

### நல்லருள் புரிந்திட வாருமய்யா...

தேவசேனாதிபதியாய் காத்தருள்பவனே
பராசக்தியின் பாலகனே
பன்னிருகரங்கள் உடையவனே
வள்ளிமலை வள்ளல்பெருமானே
சூரனை வென்றவனே
தேவயானை கணவனே
சிங்கார வேலனே - நல்லூர் கந்தா
நல்லருள் புரிந்திட வாருமய்யா

லோ.சிந்துகௌரி,
உரும்பிராய்.

### நல்லை செல்வனே நலமிகு வாழ்வு அருள்வாய்!

பலமிகு வேலை உனக்குப்
பார்வதித் தாயாள் தந்தாள்!
பலமுடன் சூரன் தன்னை
வதமது செய்தாய் நீயும்!
நலமிக எங்கள் வாழ்வு
நானிலம் தனிலே விளங்க
தலமது நல்லை நகரின்
செல்வனே அருள்வாய் அப்பா!

ப. மகேந்திரதாசன்,
நாயன்மார்கட்டு.

### சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

கெலி பிடித்து நாக ரிகம்
கிளர்ந் துழன்று வேகமாய்
வலி விழுந்து பொலி வழிந்து
வழி மறந்து போவதா
கலி யுகத்தில் மொழியு மையன்
கருணை யின்றி ஆவதா
நலிவை நீக்கு மெலிவைப் போக்கு
ஞான நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ. பாலகோபால்

# மக்கள் நலன்சார்ந்த பணிகளை முன்னெடுப்போம்



## டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
நாம் எதிர்பார்த்தளவான வாக்குகள் எமக்கு கிடைக்காது விட்டாலும் யாழ்.மாவட்ட மக்களும் மேலதிகமாக வன்னி வாழ் மக்களும் எமக்கு தமது ஆதரவு பலத்தை தந்து இரண்டு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளனர்.

அத்துடன் இம்முறை வன்னி மாவட்டத்திலும் எமக்கு ஒரு ஆசனம் கிடைத்துள்ளது.

அந்த வகையில் மக்கள் எமக்கு அளித்த அரசியல் பலத்தைக் கொண்டு தொடர்ந்தும் மக்கள் நலன்சார்ந்த பணிகளை முன்னெடுப்போம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாண மக்கள் எமக்கு தொடர்ந்தும் வழங்கிவரும் ஆணைக்கு ஏற்ப நாம் முன்னெடுத்த பெரும் பணிகளை போன்று இன்று வன்னியிலும் முன்னெடுக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அதை நாம் நிச்சயமாக செயற்திறனோடு முன்னெடுத்து எமது மக்களின் தேவைகளை முடியுமான அளவு செய்வோம் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்முறை கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் எமது வெற்றிக்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களது எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைப்பாடுகள் மட்டுமல்லாது எமது மக்களனைவரது தேவைகள் அனைத்தையும் முடியுமானளவு செய்வோம் என்றும் தெரிவித்துள்ளார்.


பொதுத் தேர்தல் வெற்றியின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவுடன் அமெ.தூதரக பாதுகாப்பு இணைப்பதிகாரி சந்திப்பு



(கொழும்பு)
இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பதிகாரி லெப்டினன் கேணல் ட்ரைவிஸ் கொஸ் விசேட பிரமுகருடன் பாதுகாப்புப் பிரதானியும் இராணுவத் தளபதியும் கொவிட்-19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவை நேற்று முன்தினம் காலை ஜயவர்த்தனபுர இராணுவ தலைமையகத்தில் சந்தித்து இரு நாடுகளிடையே மேம்படுத்த வேண்டி முக்கியத்துவம், விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது இலங்கையில் கொவிட்-19 ஐ கட்டுப்படுத்துவதில் இலங்கை இராணுவம் மற்றும் பங்குதாரர்களின் பங்களிப்புகளுக்கு அமெரிக்கத் தூதரக பாதுகாப்பு இணைப் பதிகாரியினால் பாராட்டப்பட்டது. (ஜ-8)





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள அங்கஜன் இராமநாதனின் வரவேற்பு நிகழ்வு யாழிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் யாழ்.மாவட்ட இளைஞரணியின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

(படங்கள்- ஐ.சிவசாந்தன்)

# இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட்; பாகிஸ்தான் முன்னிலை

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில், யாசிர் ஷா 12 ஓட்டங்களுடனும் மொஹமட் அபாஸ் ஓட்டமெதுவும் பெறாத நிலையில், ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ் மற்றும் ஸ்டுவர்ட் பிரோட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், டொமினிக் பெஸ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட்போட்டி, கடந்த புதன்கிழமை மன்செஸ்டர்- ஓல்ட் ட்ரப்போர்ட் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 326 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஷான் மசூத் 156 ஓட்டங்களையும் பாபர் அசாம் 69 ஓட்டங்களையும் சதாப் கான் 45 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் ஸ்டுவர்ட் பிரோட் மற்றும் ஜொப்ரா ஆர்சேர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்டுகளையும் டொம் பெஸ் மற்றும் ஜேம்ஸ் எண்டர்சன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, 219 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது ஒல்லி போப் 62 ஓட்டங்களையும் ஜோஸ் பட்லர் 38 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், யாசிர் ஷா 4 விக்கெட்டுகளையும் மொஹமட் அபாஸ் மற்றும் சதாப் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஷாயின் அப்ரிடி மற்றும் நயீம் ஷா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 107 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணி, நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில், 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இன்னமும் இரண்டு விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் நான்காவது நாளை நேற்று பாகிஸ்தான் அணி ஆரம்பித்தது. (4)

# சசிகலாவிற்கு நீதி வேண்டி யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள அமரர் நடராஜா ரவிராஜின் நினைவுத்தூபி அருகில், சசிகலா ரவிராஜிற்கு நீதி வேண்டி போராட்டம் இடம்பெற்றது.

சசிகலா ரவிராஜின் ஆதரவாளர்களால் நேற்று சனிக்கிழமை இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. நடைபெற்று முடிந்துள்ள தேர்தலில் சசிகலா ரவிராஜிற்கு அநீதி இழைக்கப்பட்டதாகத் தெரிவித்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியில் விருப்பு வாக்குகள் விடயத்தில் தேர்தல் முடிவுகள் வெளியான அன்று குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.

தனது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் குழறுபடி ஏற்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிட்டுள்ள தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சசிகலா ரவிராஜ், இது தொடர்பாக தேர்தல்ஆணைக்குழுவில் முறையிடவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள அமரர் நடராஜா ரவிராஜின் சிலை கறுப்பு, சிவப்பு துணிகளால் மூடப்பட்டு சசிகலாவின் ஆதரவாளர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)



இந்த நாளை, நம் நன்மைக்காக, கடவுள் படைத்திருக்கிறார் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.
– தத்தானியேல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் மனங்களை அறிந்து கொள்ளுங்கள்

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் தமிழர் தாயகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துமா? அல்லது தும்மல் போய் இருமல் வந்த மாதிரியாக முடியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எதுவாயினும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் மனங்களைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்பதையே நாம் தொடர்ந்து வலியுறுத்த விரும்புகின்றோம்.

பொதுவில் தமிழ் மக்களுக்காகவே நாங்கள் என்று சொல்பவர்கள் அதனை நுனி நாக்கில் மட்டும் வைத்திருக்கக் கூடாது.

மாறாக உள்ளத்தாலும் அதனைச் சொல்ல வேண்டும்.

ஏனெனில் தமிழ் மக்களுக்காக... தமிழ் மக்களுக்காக... என்று சொன்னவர்களை நம்பி நம்பியே எல்லாவற்றையும் இழந்தவர்கள் நம் தமிழ் மக்கள்.

இவர்கள் எங்களை ஏமாற்ற மாட்டார்கள் என்று நம்பி வாக்களித்து கண்ட பலன் என்ன?

பாராளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள் தத்தம் நலன் மீது கவனம் செலுத்தினரேயன்றி, தமிழ் மக்கள் மீது அவர்கள் கருசனை கொள்ளவில்லை.

எம்மைப் பாராளுமன்றம் அனுப்பிய தமிழ் மக்களுக்காக நாம் குரல் கொடுக்க வேண்டும். எம் மக்களின் நலனுக்காக நாம்' பாடுபட வேண்டும் என்ற நினைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்திருக்குமாயின் இன்று தமிழ் மக்களின் நிலைமை வேறாக இருந்திருக்கும்.

பரவாயில்லை. நீண்ட சந்தர்ப்பத்தை வழங்கிய தமிழ் மக்கள் இப்போது மாற்றத்துக்கான ஒப்பத்தை இட்டுள்ளனர்.

இந்த மாற்றம் என்பது எது. அதன் பொறுப்பை எடுப்பது யார்? என்ற கேள்விகள் அர்த்தமற்றவை.

மாறாக, நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்களிப்பு எவ்வாறாக இடமாற்றம் பெற்றது என்பதை நுணுகி ஆராய்வது இங்கு அவசியமாகும்.

தவிர, தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் நாம் செய்யக்கூடிய திட்டமிடல்கள் தொடர்பில் பொதுமக்களின் ஆதரவையும் பங்களிப்பையும் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் இருத்தல் அவசியம்.

இதைவிடுத்து, நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகி விட்டோம். இனி எங்களை எதுவும் செய்ய முடியாது என்று நினைத்தால் அதற்கான தீர்ப்பையும் எங்கள் தமிழ் மக்கள் வழங்கத் தயாராக உள்ளனர் என்பதை எவரும் மறந்துவிடாதீர்கள்.

ஆக, தமிழர் தேசத்தில் இருக்கக்கூடிய மக்கள் அமைப்புகள் குறிப்பாக தமிழ் மக்கள் பேரவை போன்றவை தம்மைப் பலப்படுத்திக் கொண்டு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களை வழிப்படுத்தவும் அவர்கள் மூலமாக தமிழர் நலன்சார் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவும் தயாராக வேண்டும். இதுவே இன்றைய உடனடித் தேவை.

# ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை ஒருபோதும் ஏற்கத் தயாரில்லை

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள்தெளிவான ஆணையை அளித்துள்ளனர். எனவே எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை தொடர்நதும் தொலைபேசி சின்னத்தின் ஊடாகவே முன்னெடுக்கவிருக்கின்றோம்.

ஐக்கிய தேசிய கட்சி உட்பட எந்தவொரு தரப்பினாலும் எமது கொள்கைகளை ஏற்றுக் கொண்டு இணைந்து செயற்பட வருவதாக இருந்தால் அதற்கு வெளிப்படை தன்மையுடன் வாய்ப்பளிக்க தயாராகவே உள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின தலைமையகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுவின் அனுமதியுடனே ஐக்கிய மக்கள் சக்தி ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் , தேர்தல் நெருங்கிய தருணத்தில் அவர்கள் எடுத்த தீர்மானத்தின் பலாபலனையே தற்போது அனுபவிக்கின்றார்கள்.

தொடர்ந்தும் அவர்கள் தொடர்பில் பேசுவதற்கு நான் விரும்பவில்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள்தெளிவான ஆணையை பெற்றுக்கொடுத்துளளனர். இந்நிலையில் தொலைபேசி சின்னத்தில் எமது எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவே நாங்கள் விரும்புகின்றோம்.

எமது கட்சிக்கு என்றே தனிப்பட்ட கொள்கைத் திட்டமொன்று இருக்கின்றது. அதற்கமைய நாட்டு மக்கள் எம்மை மாற்று அரசியல் கட்சியாக தெரிவு செய்துள்ளனர்.

மக்களது ஆணைக்கு மதிப்பளிப்பதுடன அவர்களது நலனை பெற்றுக கொடுப்பதற்கும் நாங்கள் முயற்சிக்க வேண்டும். எம்மிடம் ஏனைய கட்சிகளைப் போன்று தேர்தல் பிரசாரங்களுக்காக செலவிடுவதற்கு பணப்பலம் இல்லாத போதிலும் , நாட்டின் ஜனநாயக கொள்கையை பாதுகாப்பதற்காக மக்கள் எமக்கு ஆணையை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

மக்களது எண்ணத்தை நிறைவேற்றுவதுடன்.,வரலாற்று சிறப்பு மிக்க ஒரு பலம் பொருந்திய கட்சியாக முன்னேறிச் செல்வதே எமது நோக்கமாகும்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது ஊடகங்கள் எமக்கு கொடுத்திருந்த இடத்தை அனைவரும் அறிவீர்கள்.

இந் நிலையில் அனைவருக்கும் சம இடத்தை பெற்றுக் கொடுத்து செயற்படுமாறு ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுககின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை பொறுப்பு தொடர்பில் எமக்கு அக்கறையில்லை.

தொலைபேசி சின்னம் தான் எங்களது சின்னம். எமக்கென்று தனிப்பட்ட கொள்கைத்திட்டம் இருக்கின்றது.

தொலைபேசி சின்னத்திற்கும் எமது தனித்துவம் மிக்க கொள்கை திட்டத்திறகுமே மக்கள் ஆணையை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இதனால் சிறிகொத்தாவின் பொறுப்பையோ , ஐ.தே.க.வின் தலைமைத்துவத்தையோ பொறுப்பேர்க நான் விரும்பவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியே தற்போது மக்கள் தெரிவு செய்துள்ள மாற்று கட்சி. அதனால், கட்சியின் கொள்கைக்கு மதிப்பளித்து செயற்படுபவர்கள் ஐ.தே.க.வாக இருநதாலும் சரி, வேறு எந்த தரப்பினராக இருந்தாலும் சரி அவர்கள் எம்முடன் இணைந்துசெயற்பட விரும்பினால் அதற்கு வெளிப்படை தன்மையுடன் வாய்பபளிக்க தயாராகவே உள்ளோம என தெரிவித்தார்

(ம-3)

# சங்கிலி பறிப்புடன் தொடர்புடைய இருவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியாவில் சங்கிலி பறிப்புடன் தொடர்புடைய இருவரை கைது செய்துள்ளதாக வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவிதனர்.

கடந்தமாதம் 30ஆம் திகதி வவுனியா அலகல்லு பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் தங்கச்சங்கிலி ஒன்றை பறித்து சென றிருந்தனர்.

அது தொடர்பான முறைப்பாடு வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸாரிடம்வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 20,23 வயதுடைய இருவரை நேற்று கைது செய்துள்ளதுடன், சங்கிலி பறிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும், திருடப்பட்ட ஒன்றரை பவுண் தங்கச்சங்கிலியையும் மீட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் குறித்த இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை குற்றத்தடுப்பு பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் பிரனீத் திசாநாயக்க தலைமையில்

நிலந்த, திசாநாயக்க, வசந்த, பிரியங்க, விக்கிரமசூரிய, விஜயசிங்க ஆகியோரை கொண்ட பொலிஸ குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

(ம-3-299)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை


**யாழ்.பிரதேசத்தில்** கொழும்புத்துறை மணியந் தோட்டம், உதயபுரம், உதயபுரம், Infants Ice Solutions பிறைவேற் லிமிற்றெட் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** பத்தினியார் மகிழங்குளம் கிராமம், ஆண்டியப் புளியங்குளம், வாரிக்குட்டியூர் 04ம் வட்டாரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மனிதனை மனிதனாக்குவது உதவிகளும் வசதிகளும் அல்ல, இடையூறுகளும் துன்பங்களுமே!
-டபிள்யூ மேத்யூஸ்

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- கோபத்திலிருந்து நீங்கி உக்கிரத்தைக் கைவிட்டு விடு. பொல்லாங்கு செய்வதற்கு ஏதுவான எரிச்சல் உன் புத்திக்கு வேண்டாம்.
- தேவையுள்ளவன் என்றைக்குமே மறக்கப்படுவதில்லை. எளியவர்களின் எதிர்பார்ப்பு என்றைக்குமே நசித்துப் போய் விடுவதில்லை.
- தீய மனம் படைத்தவர்களும் மதியை மயக்கி கெடுப்பவர்களும் மோசத்திற்கு மேல் மோசமாய் உருகி பிறரையும் ஏமாற்றித் தாங்களும் ஏமாந்து போகிறார்கள்.
- மனிதர்கள் உங்கள் நற்காரியங்களைக் காணும் பொருட்டு உங்கள் ஒளி அவர்கள் முன் பிரகாசிக்கட்டும். பரமண்டலத்திலுள்ள உங்கள் பிதாவை அவர்கள் போற்றட்டும்.
- எந்த உழைப்பிலும் ஊதியம் உண்டு. வெறும் வாய்ப்பேச்சில் ஒரு பலனும் இல்லை.
- சகோதரர்கள் ஒருமித்து ஒற்றுமையுடன் வசிப்பது எவ்வளவு நன்மையானது. எவ்வளவு மனோகரமானது என்பதைப் பாருங்கள்.

# சொல்ல மறந்த கதை

## உரிமையும்-சலுகையும்

### தேர்தல் பற்றிய அலசல்



முன்னொரு காலத்தில் பனியுறைகின்ற ஸ்கண்டிநேவிய நாடொன்றின் மீது மற்றொரு நாட்டின் அரசன் படையெடுத்தான். படையெடுத்தவன் போர்களில் வல்லவன். எதிர்த்தவனோ படை பலத்தில் நலிந்தவன். எனவே அவன் படைகள் புறமுதுகிட்டு ஓடின. தோற்ற நாட்டின் முக்கிய தளபதிகள் பத்துப்பேர் படையெடுத்தவனிடம் சிக்கினர். படையெடுத்தவனோ கொடியவன். "நீங்கள் என் காலடியில் விழுந்து வணங்கினால், உங்களை விடுதலை செய்கிறேன்" என்று தன்னிடம் அகப்பட்டவர்களைப் பார்த்துச் சொன்னான். அதில் நான்கு பேர் உடனேயே எதிர்நாட்டு அரசன் காலில் விழுந்தனர் - தொழுதனர் - விடுவிக்கப்பட்டனர். பெறுமதியான பொருட்களை வெகுமதியாகவும் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் எஞ்சிய அறுவரும் "நாம் மடிந்தாலும் உன் காலடியில் மண்டியிடோம்" என்றனர். "மனந்திரும்புங்கள் அல்லது மடிந்து போவீர்கள்" என்றான் வெற்றி பெற்ற அரசன். அவர்கள் தன் காலில் விழும் வரையில் பனியால் உறைந்துபோய்க் கிடந்த ஆற்றிலே நிர்வாணமாக இறக்கிக் காவலுக்குத் தன் காவலர்களை நிறுத்தினான். ஆற்று நீரின் குளிர் நிர்வாண மேனியில் அம்புபோல் ஊடுருவியது. வேதனையால் தவித்தனர்.

இனியும் தாங்க முடியாது என்று கூவிக்கொண்டே இருவர் கரையேகினர் - மன்னன் காலடியில் மண்டியிட ஒப்புதல் கொடுத்தனர். ஆயினும் மிகுதி நால்வரும் தாய் மண்ணில் பிரமாணிக்கம் கொண்டோராய் உறுதிபட நின்றனர். இரவு கவிழ்ந்தது - பொழுது புலர்ந்தது. காலையில் குளிரில் உறைந்து - விறைத்து இறந்து போனோரை பார்வையிட இறுமாப்புடன் வந்தான் மாமன்னன். மண்டியிட மறுத்த நால்வரும் மடிந்து போய்க் கிடந்தனர். ஆயினும் நால்வருக்குப் பதில் எண்மரின் உடல்கள் குளிரில் விறைத்துப் போய்க்கிடந்தன. "இது எப்படி நிகழ்ந்தது" என்று அங்கிருந்த தன் படை வீரரைப் பார்த்து ஆச்சரியத்துடன்கேட்டான்சக்கரவர்த்தி. "மன்னா மடிந்து கிடக்கும் மற்றைய நால்வரும் அவர்களுக்கு காவலுக்கு நின்ற நம் வீரர்கள். அவர்களின் மன உறுதியையும், தாய் மண் பற்றையும் பார்த்து இவர்களும் அவர்களுக்கு வலுவூட்ட ஆதரவாக அந்த குளிர் ஆற்று நீரில் நின்று தம்முயிரையும் மாய்த்துக் கொண்டனர்" என்றனர் படைவீரர்கள்.

கொள்கை தளராதோர் தம் செயலால் மற்றோரையும் தம்பால் ஈர்ப்பர் என்பதே இக்கதை சொல்லும் அறமாகும். இக்கதையை இக்கட்டுரையின் இறுதியிலும் ஒரு தடவை வாசிக்கவும்.

### பிரதான கட்சிகளும், பிராந்திய கட்சிகளும்

பொதுவாக தேசத்தின் நலனை முன்னிறுத்தியதாகவே பிரதான கட்சிகள் செயற்படும். தாம் சார்ந்த பிரதேசத்தின் இனம், மொழி, மதம், கலாசாரம் சார் நலன்களை முன்னிலைப்படுத்தியதாகவே பிராந்திய கட்சிகள் இயங்கும். இதனால் பிராந்திய கட்சிகள் தாம் சார்ந்த பிரதேசத்தில் செல்வாக்கு மிக்கவையாக விளங்குவதுடன், அவற்றின் ஆதரவின்றி பிரதான கட்சிகளால் தேசம்சார் செயற்பாடுகளை முன்னெடுப்பது கடினமாகவேயிருக்கும். இத்தகைய அரசியல் களநிலைமையை இந்தியாவில் தெளிவாகக் காணலாம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இங்குள்ள பிரதான கட்சிகள் தேசத்தின் நலன்களாக பேரினவாத நலன்களையே கருதுவதால் பிரதான கட்சிகளுக்கும் பிராந்திய கட்சிகளுக்கும் முரண்பாட்டு நிலையே தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது.

இந்த முரண்பாடு காரணமாகவே ஆயுத முறுகலும் தோற்றம் பெற்றது. அதனால் நாடு எத்தகைய அழிவுகளைச் சந்தித்தது என்பதையும் நாமறிவோம். எவ்வாறாயினும் போர் ஓய்த பின்பும் சிறுபான்மை இனங்களின் உரிமை விடயத்தில் பிரதான கட்சிகள் அலட்சியப் போக்குடனேயே இருப்பது கண்கூடு. மேலும் உரிமையை வலியுறுத்தும் கட்சிகள் ஒரு புறமும், சலுகைகளை வரவேற்கும் கட்சிகள் மறுபுறமுமாக பிராந்தியங்களில் முட்டி மோதுவதால் பிராந்திய அரசியலிலும் தெளிவான செய்தியை தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் எடுத்துச் சொல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.

ஒரு பிராந்திய மக்களின் உணர்வுகளை, தேவைகளை வெளியுலகிற்கு சுட்டும் சுட்டியாகவே தேர்தல்கள் மதிப்பிடப்படுகின்றன. அந்த வகையில் பிராந்திய மக்கள் இம்முறை தேர்தல் ஊடாக சொன்ன செய்தி என்ன என்பதை ஆராய்வதே இப்பத்தியின் நோக்காகும்.

### மலையகத் தமிழ் மக்களின் தேர்தல் வெளிப்படுத்துகை

மலையக தமிழ் மக்கள் தம் ஜனநாயக உரிமைகளுக்காக நீண்டகாலம் போராட வேண்டியிருந்தது. சென்னன் மற்றும் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான தீவிர போராட்டத்தால் ஈற்றில் தம் ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொண்டனர். ஆயினும் அவர்களைப் பொறுத்தவரை சமூக உட்கட்டுமானங்கள், பொருளாதார நிலை என்பன வடக்கு - கிழக்கு வாழ் மக்களுடன் ஒப்பிடும் போது மிகத் தளர்ந்த நிலையிலேயே காணப்பட்டன. இதனால் உரிமைகளை அழுத்திக் கேட்பதை விடவும் சலுகைசார் அபிவிருத்தியை தம் முதன்மை அரசியல் இலக்காகக் கொள்ள வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

அத்துடன் அவர்கள் பேரின மக்கள் மத்தியில் வாழ்வதாலும் இணக்க அரசியல் போக்கை கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயமும்காணப்பட்டது. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தம் மக்களின் நலனுக்காக உரிமை அரசியலையும் சலுகை அரசியலையும் சிறப்பாகக் கையாண்டார். சிங்கள அரசியல் வாதிகளுடன் இணக்க அரசியலை கைக்கொண்டதுடன், வடபுலத்து தமிழ் அரசியல்வாதிகளுடன் இனம்சார் உரிமைகளுக்காகவும் கரம்கோர்த்தார்.

எவ்வாறாயினும் அவரின் மறைவுக்குப்பின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆட்சிக்கு வரும் அரசுகளின் பங்காளியாகியது. இதனால் உரிமைகளுக்கு அவர்களால் அதிக அழுத்தம் கொடுக்க முடியவில்லை. இந்நிலையில் தமிழரின் உரிமைப் போராட்டம் ஆயுத முனைப்புப்பெற்றது. மலையகத்திலும் இது தாக்கத்தை ஏற்படுத்தியது. காலப் போக்கில் மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி சலுகை அரசியல் போக்கிற்கு மாற்றீடான மலையக மக்கள் முன்னணி அமரர் சந்திரசேகரனால் தோற்றம் பெற்றது. இன்று மலையக அரசியிலிலே சலுகை அரசியலுக்கு முன்னுரிமை கொடுத்து பேரினவாதக் கட்சிகளுக்கு ஆதரவளிக்கும் அரசியல் அணியும், உரிமை அரசியலை வலியுறுத்தி இனவாதப் போக்கற்ற மென்போக்குக் கட்சிகளுடன் கூட்டு வைத்து செயற்படும் அணியென இரு பிரதான அணிகள் இயங்குவதைக் காணலாம்.

இம்முறைத் தேர்தலிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுஜன பெரமுனவுடன் தேர்தல் கூட்டுவைக்க, மாற்று அணியான மலையக மக்கள் முன்னணி மற்றும் முற்போக்கு முன்னணி என்பன ஐக்கிய மக்கள் சக்தியுடன் கரம் கோர்த்தன. மலையகத்தில் பல இன மக்களும் வாழ்வதால் தமிழ் வேட்பாளர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தே இறக்கப்படுகின்றனர். அந்த வகையில் அவர்கள் பெறும் வாக்குகளின் பெரும் எண்ணிக்கை தமிழ் வாக்காளர்களின் வாக்குகளாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. இம்முறை ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் களமிறக்கப்பட்ட உரிமைகளை அதிகம் வலியுறுத்தும், பேரினவாதப் போக்கை எதிர்க்கும் அத்தனை முக்கிய வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளார்கள். குறிப்பாக நுவரெலியாவில் திகாம்பரம், இராதாகிருஷ்ணன், உதயகுமார்.

பதுளையில் வடிவேல் சுரேஷ், அரவிந்தகுமார். கண்டியில் வேலுகுமார் என அனைவரும் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால் சலுகை அரசியலையும், பேரினவாதத்துடன் இணக்க அரசியலையும் நடத்தும் இ.தொ.கா.கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் எந்தவொரு வெற்றியும் பெறவில்லை. நுவரெலியாவில் மட்டும் ஜீவன் தொண்டமான் மற்றும் ராமேஸ்வரன் வெற்றி பெற்றுள்ளனர். இது கூட நுவரெலியாவில் அவர்களுக்கென நிலையான வாக்குத்தளமொன்று இருப்பதாலும், ஆறுமுகன் தொண்டமானின் மறைவால் ஏற்பட்ட அனுதாபத்தாலும் நிகழ்ந்திருக்கலாம். இதிலிருந்து மலையகம் வாழ் தமிழ் மக்கள் தெளிவான செய்தியொன்றை தெரிவித்துள்ளனர். பல்வேறு அபிவிருத்தித் தேவைகள் அப்பகுதிகளில் உள்ள போதிலும் இணக்கப்பாட்டுடன் வாழ வேண்டிய தேவை உள்ள போதிலும் பொதுஜன பெரமுனவின் அரசியல் வெற்றி அலை மேலோங்கியிருந்த போதிலும் இனவாதப் போக்குக்கும் சலுகை அரசியலுக்கும் எதிரான தமிழ்த்தரப்பை அமோகமாக வெற்றி பெறச் செய்துள்ளனர். அதாவது சலுகைகளுக்காகவும் வசதிகளுக்காகவும் இனவாத போக்குடையவர்களை தாம் அனுசரித்துப் போக தயாரில்லை என்பதே அச்செய்தியாகும்.

### வடக்கு- கிழக்கு மக்களின் தேர்தல் மனப்பாங்கு

வடக்கு-கிழக்கு தேர்தல் முடிவுகளை உலகே உன்னிப்பாக பார்த்திருக்க, அந்த முடிவுகள் ஆச்சரியமானவையாக அமைந்துள்ளன. பொதுவாக உரிமை பற்றியும் அதன் மீது கொண்ட அதீத பற்றையும் உலகின் பல சிறுபான்மை இனங்களுக்கும் எடுத்துரைத்த இப்பிரதேச மக்கள். பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்று சொல்வது போல உரிமையை விட அபிவிருத்தியும் சலுகையுமே தம் இன்றைய தேவை என இட்டுச் சொல்வதாகவே தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

உரிமை அரசியலை முதன்மைப்படுத்திய கட்சிகளுக்கு ஈடாக இணக்க அரசியலை முதன்மைப்படுத்திய கட்சிகளும் வாக்குகளை பெற்றிருப்பது ஆச்சரியமானதொரு விடயம் தான். கடந்தகால கசப்பான அரசியல் அனுபவங்களே மக்களின் புதிய நிலைப்பாட்டிற்கான முதன்மை காரணம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

தமிழ்த்தேசியம் என்பது இன்றைய அரசியல்வாதிகளால் வசீகரப் பொருளாக்கப்பட்டுள்ளதேயன்றி, அதற்குப் பால் செயற்பாட்டு அர்த்தம் இல்லை என்பதை மக்கள் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளனர்.

ஆயினும் உரிமைக்காக போராடிய, பல தியாகங்கள் புரிந்த இனம் இத்தகையதொரு முடிவுக்குள் தள்ளப்பட்டது ஆபத்தானது - அபத்தமானது.

உண்மையாகவே அபிவிருத்தித் தேவைகளும் சலுகை அடிப்படையிலான வசதித் தேவைகளுமுள்ள இணக்கப்பாட்டுடன் வாழ வேண்டிய கட்டாயமுள்ள மலையகத் தமிழ் மக்களே உரிமையை முதன்மைப்படுத்திய உணர்வு ரீதியான செய்தியை உலகிற்கு தெளிவாக சொல்லுகின்ற போது, அவர்களுடன் ஒப்பிடும் போது கட்டுமான மற்றும் பொருளாதார, வாழ்க்கை வசதி உயரிய நிலையிலுள்ள வடக்கு-கிழக்குத் தமிழர் சரியான செய்தியை உலகிற்கு சொல்லத் தவறிவிட்டனர்.

எவ்வாறாயினும் வடக்குக் கிழக்குத் தமிழரின் இத்தகைய நிலைப்பாட்டுக்கான பின்னணியை அரசியல்வாதிகள் புரிந்து கொள்வது காலத்தின் தேவையாகும். தமிழ்த்தேசியக் கட்சிகளாயினும் அரசுடன் இணக்கப்பாட்டுடன் செயற்படும் கட்சிகளாயினும் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் தமிழரே. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள், உரிமைகள் மற்றும் ஆதங்கங்கள் தொடர்பில் அனைவருக்கும் ஒரேவிதமான கருத்துக்களேயிருக்கும். மேலும் இன்று இணக்க அரசியல் செய்பவர்கள் பலரும் முன்பு இதற்காக தீவிரமாகப் போராடியவர்கள் - குரல் கொடுத்தவர்களே. சந்தர்ப்ப சூழல்கள் இன்று அவர்களை இத்தகைய அரசியல் நிலைப்பாடுகளுக்குள் தள்ளியுள்ளது என்பதேயுண்மை. எனவே கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் அத்தனை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரு அடிப்படைக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் மூலம் தமிழரின் அரசியல் அபிலாசைகளையும் அபிவிருத்திகளையும் முன்னெடுக்க முன்வரவேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். காலம் உங்களுக்குத் தந்த இந்தக் கடமையை நீங்கள் சரிவர செய்யாமல் ஆளுக்காள் முரண்பட்டுக் கொண்டிருந்தால் இலங்கையில் தமிழினம் இருந்ததாக வரலாறுகளிலேயே படிக்க நேரும்.

- கோகர்ணன் -

## மகிந்த இன்று...

செய்து கொள்ளவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றதன் பின்னர் புதிய அமைச்சரவை திட்டமிடப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மேலும் தெரிவித்தார். (ம-3)

## தமிழரசுக் கட்சி...

எடுக்கும்.

பொதுவெளியில், பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்குறித்த பதவிப் பொறுப்புக்கள் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் செயலாளரும் தோல்வியடைந்த நிலையில் அந்தப் பதவிகளில் மாற்றம் ஏற்படும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

அதுதொடர்பிலேயே தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள் வரலாற்றில் தமிழின விடுதலைப் போராட்டத்தினாலும், போர்களினாலும், இனக் கலவரங்களினாலும் தொடர்ச்சியான இன அழிவுகளையும் சமூக பொருளாதார இழப்புக்களையும் அவலங்களையும் தமிழ் மக்கள் சந்தித்துள்ளனர். இவை தொடர்கின்றன. இவற்றிற்கு இன்னுமே ஒரு தீர்வு ஏற்படவில்லை.

இப்பொழுது நடைபெற்று முடிந்த 2020 பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல வகையான நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆறுதலான ஒரு ஜனநாயக வெற்றியைப் பெற்றிருக்கிறது.

அதேவேளை, தேர்தல் நடைமுறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கும் கூட்டமைப்பு பொறுப்பேற்கின்றது. இவை பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை விரைவில் கூடி ஆராயவுள்ளது.

2020.08.05ஆம் திகதி பொதுத் தேர்தலில் கொரோனா வைரஸ் நோய் தொற்றுச் சூழலிலும், பெருமளவிலான அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தீவிர பரப்புரைகளில் ஈடுபட்டும், வேறுபட்ட தேர்தல் அறிக்கைகளை முன்வைத்த பொழுதிலும் வர்த்தக ரீதியிலான பல சலுகைகளையும், வேலைவாய்ப்புக்களையும் முன்வைத்த பொழுதும் எம் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையையும் கருத்துக்களையும் தேர்ந்தெடுத்துக் கணிசமான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்றுள்ளது. (ம-3)

## தமிழரசுக் கட்சி...

சிறீதரன் தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வியின்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பு ஏற்பது தொடர்பில் எனக்கு தனிப்பட்ட ஆசை ஏதும் கிடையாது. இன்னுமொரு தலைமையை தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் நான் இருக்க வேண்டும் என்ற எண்ணமும் எனக்கு இல்லை. தமிழரசு கட்சியில் மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

அது உடனடியாக ஏற்படுத்த வேண்டிய தேவை இல்லை. தேர்தல் முடிவுகளை வைத்து தலைமைகளை மாற்ற வேண்டும் என கூறுவது பொருத்தமற்றது.

தமிழரசுக் கட்சியில் இளம் இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும். மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்காக எனக்கு தலைமை பதவி கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது.

அனைத்து உறுப்பினர்களும் மக்களும் இணைந்து ஒருமித்து கோரினால் அந்த தலைமையை ஏற்க நான் தயாராகவே உள்ளேன்.

அனைவரினதும் சம்மதத்துடனேயே அன்றி இன்னொருவரது பதவியை பறித்து அதில் அமர வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,100)

## முன்னணியின்...

பட்டியல் ஆசனத்தை, கட்சியின் செயலாளர் செ.கஜேந்திரனுக்கு வழங்குவதென முடிவாகியுள்ளது.

கட்சியின் மத்தியகுழு நேற்று முன்தினம் இரவு நடத்திய ஆலோசனையின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கட்சியின் மத்திய குழுவில் 5 பேர் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கடன் தொல்லை...

மரிய ரீற்றா (வயது - 51) என்ற ஒரு பிள்ளையின் தாயே நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கு பகுதியில் வசிக்கும் குறித்த குடும்ப பெண் கணவனை இழந்து மிகுந்த கஷ்டத்தில் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் வாழ்ந்து வரும் பிரதேசத்தில் கடன் வாங்கியுள்ளார். எனினும் நீண்ட நாட்களாக கடனை மீள செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டுள்ளார். கடனை மீளச் செலுத்த முடியாமல் திணறிய அவர் கடந்த 23ஆம் திகதி வீட்டில் வைத்து விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

உடனடியாக கோப்பாய் பிரதேச வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்றைய தினமே மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாளில் இருந்து மயக்கம் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார். (ம-3,78)

## இலங்கையில்...

இலங்கையில் கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாரிய வெற்றியினைப் பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து அதன் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இன்று பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

மேலும், புதிய அமைச்சரவையும் விரைவில் அறிவிக்கப்படவுள்ள நிலையில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அரசாங்க கொள்கைகளை சவாலுக்கு உட்படுத்தும் துறைகள் மீதான அச்சுறுத்தல்கள் எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசிய இயக்குநர் மீனாக்ஷி கங்குலி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"புதிய அரசாங்கம் இன, மத சிறுபான்மையினரை ஒடுக்கும் வகையிலான புதிய கொள்கைகளை அமுல்படுத்துவதுடன் அதற்கான நீதி கோரும் அமைப்புகளின் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததில் இருந்து கடந்த 2005 முதல் 2015 வரையான காலப் பகுதியில் பல யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை தனது அமைச்சரவையில் நியமிக்கிறார்.

அவரது, சகோதரர் மகிந்த ராஜபக்ஷவும் தற்போது பாதுகாப்புச் செயலாளராக உள்ள கமால் குணரத்ன மற்றும் தற்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஆகியோரைப் போன்று மோசமான யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டவர்.

நாட்டில் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் சிவில் சமூகத்தின் பாதுகாப்பு ஆகியவற்றை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் சபையின் 30/1 தீர்மானத்தை ராஜபக்ஷ அரசாங்கம் வெளிப்படையாகவே நிராகரித்துள்ளது.

எவ்வாறாயினும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கையில் ஒரு மித்த தீர்வு ஒன்றை எட்டுவதற்கு அரசாங்கம் உடன்பட வேண்டும் என்பதுடன் சர்வதேச தரத்திலான பேச்சுரிமை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றை அரசாங்கம் மதிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் செயற்பட்டு வருகிறது.

எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த மகிந்த ஆட்சிக் காலத்தில் நிலவிய அடக்குமுறை சூழலை நோக்கி வேகமாக நகர்த்துகிறார்" என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம-3)

## தேசிய...

யுள்ளது.

கூட்டமைப்பிற்குக் கிடைத்த ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் கட்சிக்குள் தொடர்ந்து இழுபறி நிலை காணப்படுகின்றது.

பொதுத் தேர்தலில் 9 ஆசனங்களைக் கைப்பற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெற்றுக் கொண்டது.

அந்த ஆசனம் யாருக்கு வழங்கப்படும் என்பது இது வரை தீர்மானிக்கப்படவில்லை என இலங்கைத் தமிழ்

அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கட்சியின் உயர்மட்டக்குழு கூடி அதனைத் தீர்மானிக்கும் எனவும் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ம-3)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08-08-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1044
Z 1 5 6 9 4 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 08-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2503
J 05 06 13 43

மஹஜன சம்பத
திகதி 2020/08/08
சீட்டிழுப்பு இலக்கம் 4208
Q 9 1 2 4 7 5

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020 / 08 / 08 1524
சுப்பர் இலக்கம் 03 வெற்றி இலக்கங்கள் 05 07 27 47
2nd இலக்கங்கள் 0 6 0

மெகா பவர்
திகதி 08/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 575
N 09 01 30 37 51

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1188
சீட்டிழுப்பு திகதி 08.08.2020 நீலம்
B 03 28 31 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,855,955.60

சீட்டிழுப்பு இல: 1004
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.08.08
அத கோடிபதி
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,909,105/-
வெற்றி இலக்கங்கள் 16 47 59 69 W

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3348 திகதி: 2020.08.08
பச்சை சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 12 18 35 66 T
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் ரூ. 35,777,825/-

ராசி
வெற்றி வாரம் 2885 வர்ணம் இளநீலம் திகதி 08.08.2020
வெற்றி இலக்கங்கள் 06 39 41 42 கும்பம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,156,119
Web: www.dlb.lk

## நன்றி கூறல்

எனது வேண்டுகோளை ஏற்று
தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்
சைக்கிள் சின்னத்திற்கு வாக்களித்த எனது
கிராம மக்கள் அனைவருக்கும்
மனமார்ந்த நன்றிகள்.
(3522)

சா.பத்மநாதன்
நாயன்மார்கட்டு





## FIXED JOB

Inner Circle

Job! Job! Job! .....
076 770 7759

நீங்கள் O/L பயின்றவரா ?
இவ் இலக்கத்துக்கு அழைத்து
உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க.
வட மாகாணத்தில் முதல் 40 பேருக்கு முன்னுரிமை.

- நிர்வாக அதிகாரி
- செயல்திட்ட அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- முகாமைத்துவ உதவியாளர்
- மேற்பார்வையாளர்

அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.
பயிற்சிக் காலத்தில் 24,500/= பின்னர் குறைந்தது 45,000/=

The Inner Circle ( Pvt ) Ltd
100/3, Manipay Road, ( முட்டாசுக்கடைச் சந்தி ) Jaffna. (3524)



## வைத்திய சேவை

யாழ். நகரில் மிக நீண்டகாலமாக வைத்திய நிபுணர்கள் சேவையை நடாத்தி மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற

சம்பந்தர் மொடேர்ன் வைத்திய நிலையத்தில்

◎ பொது வைத்தியம் ◎ சத்திரசிகிச்சை ◎ கண் ◎ காது ◎ மூக்கு ◎ தொண்டை ◎ நரம்பியல் ◎ எலும்பு முறிவு ◎ இருதயம் ◎ சுவாசம் ◎ மகப்பேறும் பெண்நோய்யியலும் ◎ குழந்தை ◎ நீரிழிவு ◎ தோல்

போன்ற எல்லா நோய்களுக்குமான வைத்திய நிபுணர்கள். சேவையை சிரமமின்றி பெற்றுக்கொள்ள அழையுங்கள்.

தொடர்பு : 077 873 0129

சம்பந்தர் மொடேர்ன் வைத்திய நிலையம்
08, ஆஸ்பத்திரி வீதி, இராமையாச் செட்டியார் லேன்,
யாழ்ப்பாணம். (C-011)



## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு
வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் யாழ்ப்பாணம்.
(3526)
பண்டாரிக்குளம், வவுனியா.
076 328 7119



## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

| | |
|---|---|
| பிரான்ஸ் | -ரூ.1500/ரூ.1300 |
| ஜேர்மனி | -ரூ.1500/ரூ.1300 |
| டென்மார்க | -ரூ.1500/ரூ.1300 |
| கொலன்ட் | -ரூ.1500/ரூ.1300 |
| பெல்ஜியம் | -ரூ.1600/ரூ.1300 |
| இத்தாலி | -ரூ.1700/ரூ.1450 |
| லண்டன் | -ரூ.1500/ரூ.1150 |

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள் (C-001)

எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

லண்டன்-1000/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1500/=
சுவிஸ்- 1400/= அவுஸ்ரேலியா- 1600/= / 1000/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 075 5522999 076 1221566 | பளை மன்னார் கொழும்பு 12


# சசிகலா வீட்டிற்கு...

பிரமுகர்களான அங்கஜன் இராமநாதன், சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோர் நேற்று அதிரடியாக சென்றுள்ளனர்.

பொதுதேர்தல் வாக்கெண்ணும் பணிகளின் போது சுமந்திரனின் தலையீட்டால் முறைகேடுகள் இடம்பெற்று சசிகலா ரவிராஜ் தோற்கடிக்கப்பட்டார் என்று சசிகலா தரப்பால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவரைச் சந்திப்பதற்காகவே குறித்த மூவரும் நேற்று அவரது வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்துள்ளனர்.சசிகலாவின் வீட்டுக்கு சென்ற இவர்கள் மிகப்பெரும் அநீதி நடந்துள்ளதாக கூறியுள்ளதுடன், அதற்கு நீதி கிடைக்க வேண் டும் என வலியுறுத்தியுள்ளதுடன் அதற்கு ஒத்துழைப்பதாக உறுதியளித்துள்ளனர்.

குறிப்பாக மேன்முறையீட்டு நீதிமன்றில் 16ம் திகதிக்கு முன் வழக்கு தாக்கல் செய்யும்படியும் தேர்தலில் தோல்வியடைந்த ஒருவர் தன்னுடைய் கட்சிக்கான விருப்பு வாக்கு தொடர்பில் வழக்கு தொடர சட்டத்தில் இடமுள்ளது. எனவே அதனை செய்து சுமந்திரனின் பதவியேற்புக்கு இடைக்கால தடையுத்தரவு பெறப்படவேண்டும் என கூறியுள்ளதுடன் அது தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் எடுக்குமாறு கேட்டிருந்தனர். மேலும் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவை சந்தித்து இது பற்றி பேசவும், தமது ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கு தயாராக உள்ளதாக உறுதியளித்துள்ளனர்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த சிவாஜிலிங்கம் தேர்தல் கண்காணிப்பு குழு சார்பிலும் இவ்வாறான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளது. இதற்கிடையில் உங்கள் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டால் நீதியரசர் குழாமினால் அது கவனத்தில் கொள்ளப்படும். எனவே ஓரிரு நாட்களுக்குள் அதற்கான தீர்மானத்தை எடுங்கள் எனக் கேட்டுள்ளார். (ம-3,8)


## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலியில் தபாற் பெட்டிச் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள வீட்டிற்கு சமையல் மற்றும் இதர வேலைகளை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 405 4597



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (3510)



## இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



இலங்கா புரிவாழ் இந்து மக்கள் வாழ்வின்
வளம் கண்ட சரவணையூர் பள்ளம்புலம்
முருகமூர்த்தி கோவிலடியைப் பிறப்பிடமாகவும்
இடப்பெயர்வு கால இணைப்பில்
கொழும்புத்துறை மற்றும் மானிப்பாயை
வாழ்விடமாகவும் கொண்ட

தோற்றம் 06.01.1924
மறைவு 08.08.2020

அமரர்
### நாகலிங்கம் மகாலிங்கம்

( கூட்டுறவாளரும் பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவில் தர்மகர்த்தா மரபினரும்)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக. அன்னாரின் இறுதிக்கிரியைகள் மானிப்பாயில் உள்ள குடும்ப உறுப்பினர் இல்லத்தில் இடம்பெற்று சரவணை புன்னாங்கண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கும், (3525)

சு.வே. கெங்காதரம்பிள்ளையும் குடும்ப உறுப்பினரும்.
"முருகபவனம்" தேவபுரம், சரவணை.



## VACANCY AVAILABLE
## உடனடி வேலைவாய்ப்பு

எமது Mr.Bright நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது. O/L மற்றும் A/L சித்தி பெற்ற, சித்தி பெறாத இளைஞர் யுவதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு பதவி வெற்றிடம் நிரப்பப்படவுள்ளது. 15000 ரூபாய் - 30000 ரூபாய் வரையில் அடிப்படை கொடுப்பனவு வழங்கப்படும். ஒவ்வொரு பதவிக்கும் கற்றலுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்.
நேர்முகத் தேர்வில் நபர்கள் தெரிவு செய்யப்படுவர்.
முதல் தோற்றும் 50 பேருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். (3518)

தொடர்புகளுக்கு : 077 200 0018



## வேலையாட்கள் தேவை

◎ களஞ்சியப் பொறுப்பாளர்
கணணி அறிவுடைய 40 வயதுக்கு மேற்பட்டவர்
◎ பணம் வசூலிப்பவர் (Sales வாகனம்)
◎ உதவியாளர் (Sales வாகனம்)

யாழ்ப்பாணம் / திருநெல்வேலி / கோண்டாவில் / கொக்குவில் / இருபாலை ஆகிய இடங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (3527)

தொடர்புகளுக்கு:-
077 009 0189


## தமிழரசின் வாக்கு...

அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கும் போதே சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-3)

## யாழைச் சேர்ந்த...

கேரள கஞ்சா தொகையொன்றை கடத்திய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் மன்னார் முகாம் அதிகாரிகள் குழு வொன்றினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து 5 கிலோ 252 கிராம் கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 33 வயதுடைய யாழ்ப்பாணம், சுழிபுரம் பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப் படுகிறது. (ம-3)

## அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்

### ராஜித அறிவிப்பு

(கொழும்பு)

2020ஆம் ஆண்டு பொது தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றியை பெற்றுள்ளதால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் கொண்டுவரவுள்ள அரசியலமைப்புத் திருத்தத்திற்கு கட்சி, நிற பேதமின்றி ஒத்துழைப்பு வழங்கப்படும் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ம-3)


## வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலி Central Nursing Home க்கு அண்மையாக சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தரகர் வேண்டாம். (3483)

தொடர்பு : 071 536 0894



## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-006)

0768226240


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

## சங்குநாதம்

Viber 076 636 3378

நாதம் 270

வள்ளுவர் ஆண்டு 2051 | 09.08.2020 | தொலைபேசி : 021 222 3378




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## திருக்கேதீச்சர சிவன் ஆலயத்தை அரசியலில் இருந்து மீட்டெடுங்கள்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஒரு மாதிரியாக தேர்தல் நடந்து முடிஞ்சுது. நீண்ட மூச்சுடன் விதானையார் விசுவலிங்கம் கூறி முடித்தார்.

கங்காணி: தேர்தல் மழை விட்டாலும் தூறல் தும்மல் இன்னும் விட்டபாடில்லை தானே.

சாத்திரியார்: என்ன கங்காணியார் சொல்லுறிள். தேர்தல் முடிஞ்சுதெண்டால் பிரச்சினை இல்லை தானே.

கங்காணி:தேர்தல் முடிஞ்சாலும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில திருமதி சசிகலா ரவிராஜ் எடுத்த விருப்பு வாக்கு மாற்றப்பட்டதான விமர்சனங்கள் இன்னும் ஓயவில்லைத் தானே.

சிறாப்பர்: அதுமட்டுமல்ல கங்காணியார். தேசியப் பட்டியலில் எம்.பி. பதவியை யாருக்கு வழங்குகிறது என்ற பிரச்சினையும் கட்சிக்குள்ள பூகம்பத்தை ஏற்படுத்தி, உச்சக்கட்ட ஆதரவாளர்களைக் கட்சியில இருந்து வெளியேற்றத்தான் போகுது.

பண்டிதர்: பொதுத் தேர்தலில இருக்கிற விருப்பு வாக்கு முறைக்கு ஒரு சரியான தீர்வு காணப்பட வேணும். இல்லையெண்டால் என்ர விருப்பு வாக்கை மாற்றிப் போட்டினம் எண்ட கதை ஒவ்வொரு தேர்தலிலும் தொடர்கதையாகத் தான் இருக்கும்.

விதானையார்: அது மட்டுமல்ல தமிழர் பகுதியில ஆரு பாராளுமன்ற உறுப்பினராக வரவேணும் என்பதை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் தீர்மானிக்கின்ற ஆபத்தும் வந்து விடும்.

(விதானையார் இவ்வாறு கூறியதும் ஆலடியில் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தைக் கலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்)

மூப்பர்: விதானையார் நீங்கள் சொல்லுறதில ஏதோ விசயம் இருக்குது எண்டு தெரியுது. எதுவாயினும் விளக்கமாகச் சொல்லுங்க.

விதானையார்: மூப்பர் அண்ணே! நடந்து முடிந்த தேர்தலில யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில விருப்பு வாக்கில குளறுபடி இடம்பெற்றதாகக் களேபரம் நடந்ததல்லோ. இந்த விடயம் தொடர்பில மகிந்த ராஜபக்ஷவுக்குத் தகவல் கொடுத்ததாகவும் அவர் இங்குள்ள தேர்தல் அதிகாரியோட கதைத்ததாகவும் கதைபட்டது. இந்தக் கதை உண்மையோ கற்பனையோ என்பதற்கப்பால், பொதுமக்கள் நம்பிக்கையோட அளித்த வாக்குகள்தான் தீர்ப்பாக அமைய வேணும்.

சிறாப்பர்:அதோட வாக்குகளை எண்ணுகின்ற இடங்களில கடமை செய்கின்றவர்கள், கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுகின்றவர்கள் எவரும் தொலைபேசி வைத்திருப்பதற்கு அனுமதிக்கக் கூடாது. வாக்கு எண்ணுகின்ற இடங்களில் இருந்து சொண்டு வெளியில தகவல்களைக் கொடுக்க, அந்தத் தகவல் எங்கும் பரவிவிட, பின்னர் அது தேர்தல் முடிவில் விமர்சனத்தை ஏற்படுத்தி விடுகிறது.

வாத்தியார்: சிறாப்பர் சொல்லுறதிலும் நியாயம் இருக்குது. ஆனால் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின்ர விருப்பு வாக்குகளை எண்ணுவதில காலதாமதம் எடுத்தது ஏன்? என்ற கேள்வி பரவலாக இருக்குது. எனவே விருப்பு வாக்குகளை எண்ணி முடித்தபின்பும் அதன் விபரத்தை வெளியிடாமல் அமத்தி வைத்திருந்ததற்கான காரணம் என்ன என்பதைப் பொறுப்பு வாய்ந்த தேர்தல் அதிகாரிகள் வெளிப்படுத்த வேணும் என்பதுதான் என்ர கருத்து.

பண்டிதர்: உண்மைதான். யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி மீது (யாழ். அரச அதிபர்) பொதுமக்கள் நல்ல மதிப்பு வைத்திருக்கினம். அவர் ஒரு நல்ல மனிதர் என்பதில எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. ஆனால் விருப்பு வாக்கு போன்ற விடயத்தில அவர் மிகத் தெளிவாக இருந்திருக்க வேணும். இப்பவும் காலம் போகல்ல. தனக்கு ஏதேனும் அழுத்தம் இருந்திருந்தால், அதை அவர் வெளிப்படையாகக் கூறுவதுதான் நல்லது.

வாத்தியார்: சரி... சரி... இனி விடுங்கோ. அங்கால தேசியப் பட்டியலில யாரை எம்.பி. ஆக்குகிறது எண்ட பிரச்சினை ஓடிக் கொண்டிருக்குது.

கங்காணி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்க் காங்கிரஸும் ஆருக்காம் நியமன எம்.பி. பதவியைக் கொடுக்கப் போகினம்.

விதானையார்: இந்தக் கேள்வியை அந்தக் கட்சிகளிட்டத்தான் கேட்க வேணும். ஆனா என்னைப் பொறுத்தவரை இரண்டு கட்சிகளுக்கும் கடும் தலையிடியைக் கொடுக்கப் போற விடயம் இந்த நியமன எம்.பி. விவகாரம் என்பது மட்டும் உண்மை.

சாத்திரியார்: அது சரி நடந்து முடிந்த பொதுத் தேர்தலில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டுமென்று திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையின் இணைச் செயலாளர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன், திருக்கேதீச்சர ஆலய நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் பிரதித் தலைவர் பிருந்தாவனநாதன் ஆகியோர் அறிக்கை விட்டவர்களல்லோ. இது சரியான விடயமோ.

விதானையார்: பாடல் பெற்ற மன்னார் திருக்கேதீச்சரம் அரசியல் சார்ந்து செயற்பட்டமை மிகப்பெரிய வேதனை.

மூப்பர்: நானும் பார்த்தனான். இப்படியான வேலைகளை ஆலயங்கள் ஒருபோதும் செய்யக் கூடாது. என்னைப் பொறுத்தவரை ஆலயங்கள் அரசியல் சாராமல் இருக்கவேணும். அதுதான் ஆன்மீகத்திற்கு நல்லது.

சிறாப்பர்: நீங்கள் இப்படிச் சொல்லுறியள். இதை திருக்கேதீச்சர நிர்வாகத்திட்ட கேட்டால் நாங்கள் ஒண்டும் அறிக்கை விடல்ல எண்டு சொல்லுவினம்.

வாத்தியார்: இது கண்டியளோ நொண்டிச் சாட்டு. உள்ளூர அந்த அறிக்கையைச் சேர்ந்து விட்டிட்டுச் செப்படி வித்தை காட்டுற கதை. ஆலய நிர்வாகம் கூட்டமைப்பை ஆதரித்து அறிக்கை விடவில்லை எண்டால், அது தொடர்பில வந்த செய்தியை ஆலய நிர்வாகம் உடனடியாக மறுத்திருக்க வேணும்.

விதானையார்: வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் சரி. அதோட ஆலய நம்பிக்கைப் பொறுப்புச் சபை, ஆலய புனரமைப்புச் சபை என்பவற்றில இருந்து கொண்டு அந்தப் பெயரைப் பயன்படுத்தியமைக்காக சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகக் குறித்த பதவிகளில் இருந்து நீக்க வேணும். ஒரு பெரும் ஆலயத்தை அரசியலுக்குப் பயன்படுத்திய துரோகத்தை ஒருபோதும் மன்னிக்க முடியாது. சிவனும் மன்னிக்கமாட்டான்.

வாத்தியார்: திருக்கேதீச்சர ஆலய நுழைவாயிலை உடைப்பதற்குப் பின்னணியில இருந்த இரண்டு பேரை பாராளுமன்ற உறுப்பினர்களாக ஆக்குவதற்கு திருக்கேதீச்சர ஆலய நிர்வாகப் பிரிவுகள் ஆதரவு வழங்கின என்றால், அந்த நுழைவாயிலை தள்ளி விழுத்திறதுக்கு மூலகாரணமாக இருந்தவர்கள் கேதீச்சர ஆலயத்தின் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் என்று ஏலவே வந்த செய்திகள் உண்மையாக இருக்கும் போல...


இவ்வாறு வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பதுபோல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தேர்தல் முடிவுகளில் இருந்து கற்றறிய வேண்டிய பாடம்







## புதிதாகக் கட்சி ஆரம்பித்து வெற்றி பெற்ற நீதியரசர்

பொதுத்தேர்தல்- 2020 ஒரு மாதிரியாக நிறைவுற்றது. கொரோனாத் தொற்றுக் காரணமாக தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டிருந்த சிக்கல்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டு, சுகாதார முறைமைகளைப் பின்பற்றி நடத்தப்பட்ட பொதுத்தேர்தல் என்ற வரலாற்றுப் பதிவும் இத்தேர்தலுக்கு உண்டு.

இதற்கு மேலாக, நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் தரக்கூடிய தகவல்கள் ஏராளம். அதிலும் அரசியல் ஆய்வாளர்கள் ஏலவே விதந்துரைத்த கருத்துக்கள் பல சிதைபட்டுப் போகுமளவிலும் இத்தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

அதிலும் வடபகுதித் தேர்தல் முடிவுகள் வித்தியாசமான செய்திகளை நமக்குத் தெரியப்படுத்தி நிற்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.


குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இத்தேர்தல் இறங்கு முகமாகவே உள்ளது. அதேநேரம் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) கட்சிக்கு இத்தேர்தல் ஏறுமுகம் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்.

அதேசமயம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கஜன் இராமநாதன் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டமை ஒரு புதிய பதிவு. அதிலும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அங்கஜன் இராமநாதனுக்கு அதிக விருப்பு வாக்குகள் என்பதையும் தமிழ்க் கட்சிகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

இவைதவிர, வழமை போல் டக்ளஸ் தேவானந்தா தனது வெற்றியை உறுதி செய்திருப்பது தனது கட்சிக்கான வாக்காளர் களம் பலமாகவே உள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

அதிலும் மக்களின் செல்வாக்குடைய முருகேசு சந்திரகுமார் ஈ.பி.டி.பியில் இருந்து வெளியேறிய நிலையில்- அங்கஜன் இராமநாதனின் வாக்குகள் தனது வாக்குகளை உடைக்கும் என்ற நிலையிலும் அவற்றைக் கடந்து டக்ளஸ் தேவானந்தா தனக்கான பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உறுதி செய்ததை சாதாரண விடயமாக கருதிவிட முடியாது.

இவை ஒருபுறமிருக்க, யாழ். மாவட்டத் தேர்தல் களத்தில் நிறுத்தப்பட்ட திருமதி சசிகலா



ரவிராஜுக்கு கட்சி உறுப்பினர்கள் சிலரால் கொடுக்கப்பட்ட அழுத்தம், அதனால் அவர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதாகப் பொலிஸாருக்கு அறிவித்து பொலிஸ் பாதுகாப்புப் பெற்றுக் கொண்ட சம்பவங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அட்டமம் என்பதும் உண்மையே.

திருமதி சசிகலா ரவிராஜுக்குக் கிடைத்த விருப்பு வாக்குகளில் மாற்றம் செய்யப்படவில்லை என்றால்; அவரை இராஜினாமாச் செய்யுமாறு அவர் சார்ந்த கட்சி உறுப்பினர்களால் அழுத்தம் கொடுக்கப்பட்டது எதற்காக? என்ற கேள்வியும் எழவே செய்யும்.

விருப்பு வாக்குகளைக் குறைவாகப் பெற்றுக்கொண்டவர் என்றால், அவரிடம் பாராளுமன்றப் பதவியை விட்டுத் தாருங்கள் என்று கேட்பது அர்த்தமற்றது என்ற அடிப்படையில், எதிர்காலத்தில் திருமதி சசிகலா ரவிராஜ் தெரிவிக்கப்போகும் உண்மைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடுக்கண் கொடுக்கவே போகிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

இவற்றையெல்லாம் நாம்



கூறும்போது, நீதியரசர் விக்னேஸ்வரனின் வெற்றி என்பது முன்னிற்கின்றது.

வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் புதிய கட்சியை ஆரம்பித்து இன்னும் இரண்டு வருடங்கள் கூட நிறைவடையாத நிலையிலும் தான் அமைத்த தமிழ் மக்கள் கூட்டணியை (TMK) தலைமைக் கட்சியாகக் கொண்டு இதர கட்சிகளுடன் தேர்தல் களத்தில் இறங்கினார்.

நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தேர்தலில் களம் இறங்கியபோது அது அரசியல்வாதிகள் பலருக்கு அச்சத்தைக் கொடுத்தது. நீதியரசரின் கட்சி குறைந்தது மூன்று ஆசனங்களைக் கைப்பற்றும் என்ற கருத்துக் கணிப்புகள் அமைந்தபோது, அனைத்துக் கட்சிகளும் தமது ஒட்டுமொத்த பலத்தைப் பயன்படுத்தி நீதியரசர் விக்னேஸ்வரனின் களத்தை நோக்கி தாக்குதலை நடத்தின.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் நீதியரசர் விக்னேஸ்வரன் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தின. அதிலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வீடு வீடாகச் சென்றுநீதியரசர் விக்னேஸ்வரனுக்கு வாக்களிக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டது.

கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் உள்ள கிட்டுப் பூங்காவில் நடைபெற்றபோது, அங்கு உரையாற்றிய எம்.ஏ. சுமந்திரன் நல்லூர் மண்ணில் இருந்து சொல்கிறேன்; நீதியரசர் விக்னேஸ்வரனின் வெளித்தோற்றத்தை நம்பி ஏமாந்து விடாதீர்கள்.

காமுகன் பிறேமானந்தாவை விடுதலை செய்யுமாறு இந்தியப் பிரதமர் மோடியிடம் மனுக் கொடுத்தவர் விக்னேஸ்வரன். அவருக்கு வாக்களிக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டார்.

இவை யாவற்றுக்கும் மேலாக, கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்கள் அறநெறிகளின் அத்தனை எல்லைகளையும் பிடுங்கி எறிந்து விட்டு, நீதியரசர் விக்னேஸ்வரனை எவ்வளவுக்குக் கேவலப்படுத்தவும் இழிவுபடுத்தவும் முடியுமோ அந்தளவிற்குக் கீழிறங்கி கவிதைகளையும் கட்டுரைகளையும் படைத்தருளினார்.

இருந்தும் நீதியரசர் மீது தமிழ்மக்கள் வைத்திருந்த இதயபூர்வமான அன்பும் அவரின் ஆத்மபலமும் அவருக்கு வெற்றியைக் கொடுத்தது.

ஆக, புதிய அரசியல்கட்சி ஒன்றை உருவாக்கி; ஏலவே களத்தில் பலமாக வேரும் விழுதும் விட்டிருந்த அரசியல் கட்சிகளுடன் சமராடி, உள்ளூராட்சி மன்றங்களில் தனது கட்சிக்கென்று ஒரு உறுப்பினரையேனும் கொண்டிருக்காமல், பாராளுமன்றத் தேர்தலில் ஒரு ஆசனத்தைத் தனதாக்கிக் கொண்டார் என்றால், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் வெற்றி தான் மிகவும் பெறுமதியானது என்ற கருத்து நிராகரிக்க முடியாத உண்மையாகும்.

விதுரன்




## உண்மையான குற்றவாளி



ஆக்ரா நகரக் கடை வீதியில் ஜனநடமாட்டம் அதிகமாயிருந்தது. உள்நாட்டு மக்களும், வெளிநாட்டிலிருந்து வியாபாரிகளும் வாணிபம் செய்ய வந்திருந்தனர்.

திடீரென்று, முத்து விற்பனை செய்யப்படும் கடையின் அருகில் ஏதோ சலசலப்பு ஏற்பட அங்கு சென்று பார்த்தால் முத்து வாங்க வந்திருந்த ஒருவனை வெளிநாட்டிலிருந்து வந்த வியாபாரி பிடித்துக் கொண்டு, "இவன் என்னிடம் அடிமையாக இருந்தான். நான் வெளியூர் சென்ற சமயத்தில் என் பொருள்களை கொள்ளை அடித்து விட்டு ஓடிவிட்டான்.

"இவனை தேடாத இடம் கிடையாது. இன்றுதான் இவன் கிடைத்தான்" என்று கூறினான். பிடிப்பட்டவனோ, "இவன் சொல்லுவது பொய். நான் இந்த ஊரில் ஒரு பெரிய வியாபாரி.

இவன் என்னிடம் அடிமையாக இருந்தான். நான் வெளியூர் சென்ற சமயத்தில் என் பொருட்களை கொள்ளை அடித்து விட்டு ஓடி விட்டான். இவனைத் தேடாத இடம் கிடையாது. இன்று தான் இவன் கிடைத்தான்" என்று கூட்டத்தினரைப் பார்த்துக் கூறினான்.

அப்போது அவ்வழியாக வந்த காவலர்கள் அந்த இர ண்டு பேரையும் அரசவைக்குக் கூட்டிச் சென்று அக்பரின் முன்னால் நிறுத்தினர்.

அவர்கள் வழக்கைக் கேட்ட அக்பருக்கு ஒன்றுமே புரியவில்லை. பீர்பால், இவர்களில் யார் சொல்வது உண்மை என்று புரிகிறதா?" என்றார் அக்பர்.

"அரசே, இவர்களில் யார் குற்றவாளி என்று கண்டுபிடிக்க நான் சிறிது நேரம் தியானம் செய்ய வேண்டும். என் தியானம் முடியும் வரையில் இவர்கள் இருவரும், தரையில் குப்புறப்படுத்துக்கொண்டு கண்களை மூடிய படி இருக்க வேண்டும்" என்றார் பீர்பால்.

பீர்பால், உண்மையான குற்றவாளி தன்னை தியானத்தின் மூலம் கண்டுபிடித்து விடுவாரோ என்று அஞ்சினான்.

திடீரென்று பீர்பால், காவலர்களைப் பார்த்து அந்த அடிமையின் தலையைச் சீவி விடு" என்றார். உண்மையான குற்றவாளி தன்னைத் தான் சொல்கிறாரோ என்று எண்ணி பதற்றத்துடன் எழுந்தான்.

பீர்பால் அக்பரை நோக்கி, "இவனே உண்மையான குற்றவாளி. இந்த வெளி நாட்டவரிடம் இவன் அடிமையாக இருந்திருக்கிறான். அவர் ஊரில் இல்லாத சமயத்தில் அவருடைய பொருட்களை அபகரித்துக் கொண்டு நம் நாட்டுக்கு வந்து வேறு பெயரில் பெரிய வியாபாரியைப் போல் வேடமிட்டுத் திரிந்து வருகிறான்" என்றார் பீர்பால்.

அக்பர் அவனிடமிருந்த பொருட்களை பறிமுதல் செய்து வெளிநாட்டு வியாபாரிக்கு கொடுத்தார். பின்பு அந்த அடிமைக்கு ஆயுட்கால சிறைத் தண்டனையும் கொடுத்தார்.

அக்பர், பீர்பாலைப் பாராட்டி பரிசுகள் கொடுத்தார்.

**நீதி: பிறர் பொருளை அபகரிக்கக்கூடாது.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்




மன்னர் மார்த்தாண்ட வர்மா

இது, பாண்டியர்களால் சோழர்கள் மண்ணோடு மண்ணாக மக்கிப் போகும் வரை தொடர்ந்த பகைமை.

அமரபுஜங்கனின் தோல்வியைத் திருவாலங்காட்டுச் செப்பேடும் உறுதிப்படுத்துகிறது.

பாண்டிய நாடு ராஜராஜனுக்கு முன்னே சோழர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்றாலும் அமரபுஜங்கன் என்ற பாண்டிய மன்னன், மீண்டும் சேர நாட்டின் பகுதிகளை அடைய முயற்சி செய்தார் என்றும் அதை எதிர்த்த ராஜராஜன் அப்பாண்டிய மன்னனை விழிஞம் வரை துரத்தி போரில் வென்றார் என்றும் அந்தச் செப்பேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

முதலாம் பராந்தகன் காலத்தில் சோழர்கள் வசமிருந்த விழிஞம், பின்னர் பாண்டியர்களின் வசம் சென்றதால் பாண்டியர்களைத் தன் ஜென்ம விரோதியாகக் கருதிய ராஜராஜன் விழிஞத்தைக் கைப்பற்றினார்.

அப்போது தான் அங்கிருந்த பாடசாலைகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார் என்பது உறுதியான தகவலாகவே இருக்கிறது.

ஒரு சாதாரண தூதில் ஆரம்பித்த விடயம், ஓட ஓட விரட்டும் அளவுக்கு முற்றிப் போகும் என்று ராஜராஜன் எதிர்பார்க்கவில்லை. ஆனால்,கண் மூடித் திறப்பதற்குள் ஓர் ஆட்டம் ஆடி முடிந்திருந்தது.

அமரபுஜங்கனைத் தோற்கடித்ததன் அடையாளமாக 'பாண்டிய குலாசனி' என்கிற புதிய விருதுப் பெயர் , இதர விருதுப் பெயர்களோடு சேர்ந்து கொண்டது.

பாண்டிய மண்ணில் ஆட்சி செய்ய அனுப்பப்பட்டவர்கள் 'சோழ பாண்டியர்கள் ' என மக்களால் அழைக்கப்பட்டனர். பாண்டிய மண்டலமானது ராஜராஜ மண்டலம், ராஜராஜ வளநாடு எனப்பெயர் மாற்றம் அடைந்தது.

மேலும் , பாண்டியர்களால் எந்தவொரு சிக்கலும் வந்துவிடக் கூடாது என்பதற்காகப் போராற்றல் நிறைந்த படைப் பிரிவுகளைச் சேர்ந்த படைவீரர்கள் முக்கியமாக 'மூன்று கைமா சேனை' வீரர்கள் பாண்டிய நாட்டில் பல இடங்களில் நிறுத்தி வைக்கப் பட்டார்கள்.

ராஜராஜன், குமரி மாவட்டத்தின் இரணிய சிங்க நல்லூரை ஆண்ட பாஸ்கர ரவிவர்மனை இறுதியில் கொன்றதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

காந்தளூர்ச்சாலை அழிக்கப்பட்ட பின்பு, பத்மநாபசாமி கோயிலின் அதிகாரம், எட்டு வீட்டுப் பிள்ளைகள் என்கிற நிலப்பிரபுகளுக்கு அளிக்கப்பட்டது.

பின்னர் 1740இல் மன்னர் மார்த்தாண்ட வர்மா மகாராஜாவால் கோயில் கைப்பற்றப்பட்டு, விரிவாகக் கட்டப்பட்டு மீண்டும் தாந்திரீக முறை பூஜைகள் நடை முறைக் குக் கொண்டு வரப்பட்டன.

(தொடரும்)



நடந்து முடிந்த பொதுத்தேர்தல் பலருக்குப் பல பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளதே?




சாவியைக் கொடுக்க ஆடும் பொம்மைகளாய் தமிழரை நினைத்தவர்களை என்ன செய்யலாம். சொல்லுங்கள்?



முள்ளிவாய்க்கால் போராட்டங்களுக்கு அதன் அருகில் கூட போகாத கூட்டமைப்பு மக்கள் ஆணை கேட்டதன் நோக்கம்?

**சுதன் — குப்பிழான்**

**முள்ளிவாய்க்கால் போராட்டங்களுக்கு அதன் அருகில் கூட போகாத கூட்டமைப்பு மக்கள் ஆணை கேட்பதன் நோக்கம்?**

மக்களை ஏமாற்றுவோம். தேர்தலில் வெல்வோம். இதுவே இவர்களின் தாரக மந்திரம். சரிவிடுங்க, தேர்தலுக்கு முன் தேசியம் பேசுறதும் தேர்தலில் வென்ற பின்பு WP வாகனத்தில் ஓடுறதும் எமக்குப் பழக்கப்பட்டது தானே.

**திகழன் — யாக்கரு**

**புலிகளின் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் கூட்டமைப்பு சர்வதேசத்தை நம்புவது ஏன்?**

சர்வதேசம் என்ன பக்கத்து வீட்டு மாரிமுத்து அண்ணையா கூப்பிட்ட உடன கொல்லைப் பக்கத்தாலை ஓடி வாறதுக்கு.

தமது வெற்றியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக இவர்கள் தொடர்ந்து நாடகமாடிக் கொண்டுதான் இருப்பார்கள்.

எமது இனத்தின் விடிவுக்காகப் போராடிய அந்தப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தினால் இவர்களுக்கு நரகத்தில் கூட நல்ல இடம் கிடையாது என்பதே உண்மை.

**அருட்கதிர் — துன்னாலை**

**தமிழனுக்கு இருக்க வீடும் உண்ண உணவும் இருந்தால் போதுமா?**

அதுதான் தமிழர்க்குத் தேவை என்றால் எப்போதோ தென்னிலங்கை அரசுடன் இணைந்து ஒத்தூதி இருக்கலாமே.

எம் சுதந்திரத்திற்காக பல்லாயிரம் உயிர்களை தியாகம் செய்திருக்க வேண்டிய தேவை இல்லையே.

பேசுவதற்கு வாயும் அதற்கு ஒரு பதவியும் இருந்தால் எதையும் பேசி விடலாம் எனும் எண்ணத்தை துறக்கும் வரை இவற்றைத் தடுக்க முடியாது.

**கோகிலன் — வரணி**

**சாமந்தி என்ற பெயர் பெண்களுக்குச் சூட்டப்படுகிறது. சாமந்தியின் அர்த்தம் என்ன வியாசரே?**

மலர்களின் பெயர்கள் பெண்களுக்கு மட்டுமே சூட்டப்படுகிறது. ஏனெனில் பெண்மை மலர் போன்றது. மென்மையானது.

அதைச் சரியாக கையாள வேண்டும். இல்லையேல் உதிர்ந்து விடும்.

**தானா — வடமராட்சி**

**நடந்து முடிந்த பொதுத்தேர்தல் பலருக்குப் பல பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளதே?**

உண்மை. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற உண்மையை பலருக்கு உணர்த்தியுள்ளது.

இப்போது நாம் எம்.பி.அதனால் எடுக்கக் கூடியதை எல்லாம் எடுப்போம். நிறைக்கக் கூடியதை எல்லாம் நிறைப்போம்.

தேர்தல் வரும்போது தேசியம் பேசி மக்களை ஏமாற்றி வாக்கு வாங்குவோம் என பகல் கனவு கண்டவர்களுக்கு மக்கள் வாக்கால் ஓங்கி அடித்து பாடம் கற்பித்திருக்கிறார்கள். இது முடிவல்ல.

இன்னும் அடி உண்டு. ஆதலால் இப்போதே உம்மை சீர்திருத்திக்கொண்டு மக்கள் சேவை செய்யுங்கள். அது உங்கள் வெற்றியை உறுதி செய்யும்.

**வியாசர் பதில்கள்**

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**சிவம் — வதிரி**

**விக்னேஸ்வரனின் வெற்றி பற்றிக் கூறுங்கள் வியாசரே?**

நீதிக்குக் கிடைத்த வெற்றி. நேர்மைக்குக் கிடைத்த வெற்றி. உண்மைக்குக் கிடைத்த வெற்றி.

தமிழர் உரிமைகளை பாராளுமன்றில் உரத்துக் கூறுவதற்காய் பெற்ற வெற்றி.

இது, அது, உது எண்டு எழுதியவர்களின் வாயை அடைக்கும் வெற்றி.

இந்த நேர்மை, உண்மைக்குரல் நிச்சயம் பாராளுமன்றில் தமிழர் இன்னலை எடுத்தியம்பும்.

கண்டதுக்கெல்லாம் கோடி வாங்கி கைதூக்காது.

சர்வதேசத்தை எம் பக்கம் திரும்பிப் பார்க்க வைக்கும் என்பதில் ஐயமில்லை.

**அலன் — சாவகச்சேரி**

**கூட்டமைப்பின் கடிவாளம் யார் கையில்?**

இப்போது அது யார் கையிலும் இல்லை. ஓட்டி இன்றிய படகாய் அது திசைமாறிச் சென்று கொண்டிருக்கிறது.

இனி அதைத்தடுத்து நிறுத்தி கடிவாளம் இட்டு கட்டுப்படுத்த ரணிலால் ஏலாது.

நிச்சயமாக அந்த கடிவாளத்தை மகிந்த தான் எடுப்பார்.

ம்ம்...எடுக்கட்டும் எடுக்கட்டும். எல்லாம் தமிழ் சனத்தின்ற அறிவின்மைதான்.

கொள்கைப் பற்றின்றி இப்போதும் அதே பழைய பல்லவி எண்டால் நாம் என்ன செய்ய முடியும்.

**அன்பு — யாழ்ப்பாணம்**

**வாக்களித்து விட்டு விரலைப் படமெடுத்து முகப்புத்தகத்தில் போடும் பழக்கம் உண்டோ வியாசரே?**

அடக் கொடுமை.
ஏதோ இந்த உலகத்தில் இல்லாத ஒண்டைப் பெரிசா சாதிச்சமாதிரி விரலைப் படம் எடுத்து முகப் புத்தகத்தில போடுதுகள்.

பாக்க சும்மா பத்திக்கொண்டு வருது.

விரலைப் படமெடுத்துப் போடுற நேரத்தில் நாலு பேருக்கு தவறாமல் வாக்களியுங்கோ எண்டு சொல்லியிருந்தால் கூட வாக்களிப்பு வீதம் 100 ஆகியிருக்கும்.

மண்டை கழண்டதுகள் எண்டுறதை அடிக்கடி நாம் உறுதிப்படுத்திக் கொண்டே இருக்கிறம் எண்டுறது மட்டும் உண்மையானது.

**தரன் — வடமராட்சி**


**சாவியைக் கொடுக்க ஆடும் பொம்மைகளாய் தமிழரை நினைத்தவர்களை என்ன செய்யலாம். சொல்லுங்கள்?**

தம்பியவைக்கு இந்தத் தேர்தலில அதுக்குச் சரியான பாடம் கற்பிக்கப் போட்டுதுகள் தானே மக்கள்.

இனி இதுகள் எல்லாம் எடுபடாது. நீங்கள் அங்கை தலையும் இங்கை வாலும் காட்டு வியள். நாங்கள் உங்கள் வாலைப் பாம்பெண்டு நம்பவேணும் என்ன.

அந்தக் காலத்திற்கு மூடுவிழாச் செய்தாச்சு அவ்வளவுதான்.

# கொரோனாவே போ!




கொரோனாவே போய்விடு!
வராதே இங்கே
நாங்கள் நீடு வாழ விரும்புகின்றோம்
விதி மறந்து மதி நிறைந்த மனிதர் நாம்- உன்
சதிவேலை இங்கே வேண்டாம்
திரும்பி விடு உன் தேசத்திற்கே!

மரணப்புதைகுழிக்கு அழைத்திட
வந்தாயோ... கொரோனா...
கரணங்கள் வலிந்தாலும்
கிரகங்கள் நலிந்தாலும்
பரதமும் நாமமும்
பண்ணிசையின் தேனமுதும்
விரதங்கள் வேள்வியொடு
விருந்தோம்பலுமாய்
பண்பட்ட தேசமிது
யுத்தம் தொலைத்தும் மீண்டு விட்டோம்
சித்தம் தெளிந்து வாழுகிறோம்
கெட்டதெல்லாம் போதும்-எம்
கிட்டடிக்கும் வந்திடாதே
உன் கொட்டம் அடங்கி- உந்தன்
தேசத்திற்கே திரும்பி ஓடு!

அகத்தியம் சொல்லும் அறிவுரையில்
வாழ்கிறோம்
இயற்கையை இதயமாய்ப்
போற்றுகின்றோம்
புறத்தையர் மருந்துகளை ஓரங்கட்டி
வைத்துவிட்டோம்
ஒடியற் கூழும் ஒற்றைப் பனங்கள்ளும்
விடியற்காலையில்
பழஞ்சோற்றுக் கவளமும்
கருவாட்டுக் குழம்பும் கத்தரிக்காய்
பொரியலும் உண்டவர் நாமென்று
தெரியாமலா இங்கு வந்தாய்
மரியாதையோடு ஓடிவிடு- உன்
மகத்தான நாட்டிற்கே!

வந்தாரை வாழவைக்கும்
சுந்தரப்பூமி இது- ஆனால்
எம்மவரைப் பலியெடுக்கும்-உன்
வித்துவத்தை விடமாட்டோம்
இஞ்சி மிளகு இனிக்கும் இரசமும்
மஞ்சள் மல்லி மூலிகை வாசமும்
கொஞ்சம் கறிவேப்பிலை சீரகம் உப்பிட்டு
உணவிலே அருமருந்துண்ணும் எம்மிடம்
கொஞ்சங்கூட நீ தங்குவதை நினைத்திடாதே
வந்தவழி காட்டுகின்றோம்
சென்றுவிடு உன் தேசத்திற்கே!

வாசலில் துளசியும் வண்ணமிகு மூலிகையும்
தூதுவளைப் படர்கொடியும்
கண்டங்கத்தரியுமாய் கொண்டவிடம் நீக்க
அதிமதுரம் குரல் தெளித்து
ஆடாதோடை இருமல் சளி போக்கி
பசும் சாணத் தெளி தண்ணீர்
கொடும் கிருமி அழிக்க
மங்கள மஞ்சள் பொடியுடன் இன்னும் பலதாய்
விஷம் அழிக்கும் உருத்திரர் நாங்கள்
ஒளிந்துகொள்ள கொரோனாவே
உனக்கு இடமில்லை இங்கே
ஓடிவிடு உன் நாட்டிற்கே- ஓரிரவுக்குள்!

தவளை, பாம்பு, பல்லி எறும்பும்
வெட்டுக்கிளி கரப்பானோடு
வேறுபல உயிரிகளையும்
எம் உயிராய் மதிக்கும் உன்னத தேசமிது
புரியாத மனிதருக்கும்
புதினமாகும் எம்வாழ்வு
ஆகாரத்தை மருந்தாக்கும்
அற்புத மனிதர் நாங்கள்
தெரியாமலும் வந்திடாதே கொரோனாவே
திமிரான தேசமிது!!!
மரணம் உனை நெருங்க முதல்
பறந்துவிடு உன் நாட்டிற்கே!

# கொரோனா

தொட்டால் குற்றமாம்
தொடர்ந்து பரவுமாம்
காற்றாலும் பரவி
மீளாதேசம் அழைக்குமாம்
நெருங்கிப் பேசவே நெஞ்சினில்
அச்சமர்ம்- பலர்
முகவுரை கொண்டே தன்
முகவரி காக்கவாம்

ஆறுகோள் சேர்க்கை
ஆகாது என்றது
ஜோதிட சாஸ்திரம்
கண்டதையும்
தின்னும் கனவான்களால்
இன்றே வருமென்று
அன்றே சொன்னது
பழைய புராணம்

சுத்தம் சொல்லும்
சூட்சும தத்துவம்
நெருங்கி வந்து
நெஞ்சைத் தொட்டது


அருகிப்போன ஆரிய
கலாசாரம்- மீண்டும்
அகிலமெங்கும்
அரங்கேறல் ஆனது

வேண்டாம் இந்தக்
கொரோனா என்றே
அகிலம் எல்லாம்
ஒன்றாய் திரளுது
ஆகாது இந்த
வைரஸ் என்றே
வேரோடு அழிக்க
முயற்சிகள் நடக்குது

முயற்சிகளெல்லாம்
வெற்றியை எட்டி
சுகமாய் நலமாய்
அகிலம் வாழ்ந்திட
அனைத்து மக்களும்
அகம்தனில் இருந்து
ஆண்டவன் அருளை
வேண்டிடுவோமே

த.லக்ஸ்மன், நல்லூர்

# மௌனத்தின் தேடல் -491



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்


## பொய் வாழ்க்கை

மெய் மறந்து சிலிர்க்கிறதே
மேனி பொய்யாத் தவிக்கிறதே
கையில் வந்த உறவெல்லாம்
கண்பார்க்கப் போனதெங்கே
ஒத்தை ரெட்டை ஒரு வீட்டில்
எச்சமிட்டுப் போனதேனோ
ஐயோ என்றவறையில்
யார் துணையும் வந்ததில்லை
கையாலாகாத் தனம்போலே
கடப்பயிலே உடைத்தோமே
வெயில் மழையினிலும்
விரட்டுகின்ற வெடியினிலும்
வீழமுயிர் உறவுகளை
வீதி வீடு காணி எங்கும்
விதைத்து மேல்
பாய்விரித்து படுத்துறங்கி
விம்மி விம்மி அழுதோமே
விரட்டித் துரத்தி பலவிடிவு
இருளுக்குள் வடிவுண்ட
சாவுக்குள் வதைபட்டுப் போனோமே
சதைப்பிண்டம் நாலறையிலும்
சாவு ஒலி அலறையிலும்
காவுண்ட உயிர்ப்பிணங்கள்
கால்வாசி கணக்கிருக்கு
கைது செய்து போன உயிர்
கண்ட கண்ணும் குருடாச்சே
பாதம் வலித்தாச்சே
பதறி தொண்டை காய்ந்தாச்சே
நாதி அநாதையாய் எம்
தமிழும் ஆனதுவே!

யாழ்வாகீஷ்

## கண்ணீர் பூக்கள்

வேற்கேணியன்



என்னை அழைக்கிறது உன் அறையில் நீ
அன்று வரைந்த ஓவியம்
நீ எழுதி வைத்த விடுதலை வீரர்களின் அனுபவம்
உன் பொன்மேனி தழுவி தமிழ் மழலை தேனுண்டு
பொன்வண்டு எனக்கொஞ்சி களிப்புற்ற நாட்கள்
பத்தாம் வகுப்பு வரை படித்து முடித்த நீ
பயிற்சிப் படையில் இணையப் புறப்பட்ட நேரம்
பெற்ற தாயினும் மேலாய் பிறந்த மண்ணை நேசித்தாய்
நோயுற்று நலிந்த அன்னை உன்னைக் காணாமலே
கண்மூடிய துயரம் பார் வியக்க பகை விரட்டி மீண்ட
மறவர்களில் ஒருவன் நீ உன் மண் இன்று
அந்நியரின் காலடியில் நீ எங்கே?
தம்பி இருக்கிறானா வருவானா?
ஆர்வலர் அன்பர்கள் அறிய விளைகிறார்
அணுவளவும் உன் இழப்பை
எண்ணவொண்ணா எனது பதில்
என் மறவன் இருக்கிறான் வருவான்
அன்று என் முற்றத்தில் தவழ்த்தி
மண் அளைந்தாய் தோளில் விளையாடி மகிழ்வித்தாய்
இன்று என் நெஞ்சுக்குள் உயிராய் உறைபவனே
உன் தாளில் நாளும் நான் படைக்கும் கண்ணீர்ப் பூக்கள்

சிறுகதை



# தனிமரங்களின் தோப்பு

சாளரத்தினூடு நிலை குத்தி நின்ற பார்வையை அலைய விட்டவராய் சாய்மனையில் மல்லாந்து கிடந்தார் முருகேசு. அவரது உடலின் உறுப்புக்கள் அனைத்தும் செயற்பாட்டை மறந்தனவாய் சோர்ந்து போய்க்கிடந்தன. சுவாசம் மட்டும் சீராகத் தன் தொழிற்பாட்டைச் செய்து கொண்டிருந்ததால் மார்புப்பகுதி கீழிறங்கி மேலெழுந்து நிதானமாக இயங்கிக் கொண்டிருந்தது. மனதில் பல நூறு எரிவண்டு நுழைந்து குடைந்து, நமைச்சலைத்தர அவர் முற்றாகக் குழம்பிப் போனார்.

தனது இரட்டை நாடிச் சரீரத்தை ஆட்டி அசைத்து, நலுங்காமல் குலுங்காமல் அவர் அருகே வந்து நின்றாள் மூத்தவள். தனது சிந்தனை கலையப் பெற்றவராய் அவள்மீது தன்பார்வையைத்திருப்பினார் முருகேசு. என்ன...? என்பது போல் அவளது முகத்தைப் பார்வையால் துலாவினார்.

" அப்பா! நீங்கள் தனியாகவே இருந்து விடுவீர்களா?"மகளை உற்றுப் பார்த்தவருக்கு தன் முன்னால் ஒரு யானைக் குட்டியே வந்து நிற்பது போன்றதோர்பிரமை. மெதுவாகக் கொடுப்புக்குள் ஒரு முறுவல் தோன்றி மறைந்தது. ஒரு கணம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டார்.

" ஏன் அப்படிக் கேட்கிறாய்?" "தம்பியவங்கள் இரண்டு பேரில... யாராவது ஒருத்தனோட போய் இருக்கலாம் தானே?" ஒப்புக்காகக் கேட்டாளே தவிர தம்பிமார் இருவரும் தங்களுடன் அவரை அழைத்துப்போக மறுத்துவிட்டதை நினைவுபடுத்தி மனச்சாட்சி அவளை உறுத்தத்தான் செய்தது.

"அது சாத்தியப்படாது" தெளிவாக வந்தது பதில். "அப்ப... என்னோட லண்டனுக்கு வந்துவிடுங்கோ" "அதெல்லாம் நடக்கிற காரியமா... என்ன..." "அம்மாவும் இல்லாமல் இந்த வீட்டில... நீங்கள் தனிய என்னெண்டு இருக்கிறது? என்னதான் உங்கட மனதில நினைத்து வைத்திருக்கிறியள்? அதையாவது சொல்லுங்கோவன்"

ஒரு கதிரையை எடுத்து அவரது சாய்மனையின் அருகில் போட்டவள் அதில் அமர்ந்து கொண்டாள். முருகேசர் அவளை நிமிர்ந்து பார்த்தார்.

பாடசாலை நாட்களில் பலவிதமான விளையாட்டுக்களிலும் பங்கேற்று வருடந்தோறும் சம்பியனாக வந்து "கப்" எடுத்தவள். திருமணம் முடித்து லண்டனுக்குப் போகும்போது கொடியிடையுடன் கூடிய கனகச்சிதமான உடல்வாகுடன் இருந்தவள்... எப்படி அவளது உடம்பு இப்படிப் பருமனாய்... ஒரு குண்டு பூசணிக்காய் மாதிரி உப்பிப் பருத்தது? மனம் ஆராய முற்பட்டு குழம்பியதுதான் மிச்சம். அவரால் எதையும் கிரகிக்க முடியவில்லை.

"அப்பா! சொல்லுங்கோவன்" அப்பாவின் பிடிவாதகுணம் அவளுக்கு நன்கு தெரியும். அழுங்கிப் பிடிக்குப் பேர் போனவர் ஆயிற்றே. அம்மாவுக்கு அவரிடம் பிடிக்காததே இந்தக்குணம்தான்.

" நான் இந்த வீட்டிலேயே இருந்து சீவிப்பன். ஏன் உனக்கு வீட்டை விற்கிற எண்ணம் வந்திட்டுதோ?" அவளுடைய சீதனவீடுதான் அது. "இல்லையில்லை. நீங்கள் என்னெண்டு தனிய இருக்கிறது"

"நீ வேண்டுமென்றால் வீட்டை வாடகைக்கு குடுத்திட்டுப் போ. எனக்கு முன் அறை மட்டும் இருந்தால் போதும்" .

"அப்பா! எனக்கு அந்த எண்ணமும் இல்லை" அப்படியெண்டாச் சரி. எனக்கு பென்சன் வருகுதுதானே. நான் சீவிச்சுக் கொள்ளுவன்"

"என்னப்பா உங்கட கதை. சாப்பாட்டிற்கு என்ன பண்ணுவியள்.?"

"அதெல்லாம் ஐயர் கடையில சொன்னால் மூன்று நேரமும் வீட்டுக்கு வரும். கொண்டந்து தாறவனுக்கு பாத்து ஏதும் குடுத்துட்டுப் போறது"

"அப்ப... நீங்கள் உங்கட பிடிவாதத்தில இருந்து கொஞ்சமும் இறங்க மாட்டியள். அப்படித்தானே"

முருகேசர் மௌனத்தைத் தழுவிக் கொண்டார்.

தாயின் மரணச் செய்தி அறிந்து வந்தவள், அந்தியேட்டி முடிந்ததும் லண்டனுக்குப் புறப்பட்டு விட்டாள். கணவன், குழந்தைகள் இருவர் எனக் குடும்பப் பொறுப்பு அவளுக்கு இருந்தது.

மகள் புறப்பட்டுப் போனபின்தான் முருகேசர் வாழ்க்கையில் முதன் முதலில் தனிமையை உணர்ந்தார். மூத்தவன் குடும்பத்தினர் சற்றுத் தொலைவில்தான் இருந்தனர். கணவன்- மனைவி இருவரும் வேலைக்குப் போவதிலும் பிள்ளைகள் பாடசாலை, ரியூசன் என்று அலைவதிலும் அவனுக்கு அடிக்கடி அப்பாவை வந்து பார்க்க முடிவதில்லை. வாரம் ஒரு தடவை ஞாயிற்றுக்கிழமைகளில் வந்து பார்த்துப் போவான். வரும்போது ஏதும் உணவு கொண்டுவந்து கொடுப்பான்.

இளையவன் குடும்பத்தினருடன் கொழும்பில் வசித்ததால் அப்பாவை வந்து பார்க்க முடியவில்லை. ஆறுமாதங்களின் பின் ஒருதடவை வந்திருந்தான். தான் கொழும்பில் வீடு வாங்கப் போவதாகவும் அதற்குப் பணம் பற்றாக்குறையாக இருப்பதாகவும் அப்பாவுக்கு கதை அளந்தான். அவரும் தான் சேமித்து வைத்திருந்த பணத்தில் ஒரு சிறு தொகையை எடுத்துக் கொடுத்து விட்டிருந்தார். பணத்தோடு போனவன் போனதுதான். ஒரு பேச்சு மூச்சையும் காணவில்லை.

முன்பெல்லாம் அதாவது அவரது மனைவி மரகதம் உயிரோடு இருந்த காலப்பகுதியில் பேரப்பிள்ளைகள் லீவு நாட்களில் வீட்டுக்கு வருவார்கள். பேரப்பிள்ளைகளைக் கண்டுவிட்டால் போதும். மரகதமும் சளைக்காமல் வாய்க்கு ருசியாக விதவிதமாய் சமைத்துப் போடுவாள். அப்பம்மா என்று அழைத்தவாறு அவளையே சுற்றி வருவார்கள் பேரக்குழந்தைகள். முருகேசருக்கு அதைப் பார்த்து மனம் பூரித்துப் போகும். இப்போது... இந்த நாதியற்ற கிழவனைப் பார்க்க எவருமே வருவதில்லை. ஏன் அயலவர்கள், நண்பர்கள் கூட அலுத்துப் போய்விட்டார்கள் போலும். மரகதம் வாழ்ந்த நாட்களில் எவர் வந்தாலும் தேநீர் கொடுத்து உபசரிக்கத் தவறியதில்லை. இப்போது நிலை மாற்றம் ஏற்பட்டு முருகேசருக்கே ஒரு கோப்பை தேநீர் போட்டுக் குடிப்பது பெரும் பாடாக இருக்கிறது.

ஒருநாள் மூத்தவனின் மகன் வந்தான். முருகேசரும் பேரனை அன்போடு வரவேற்று உச்சிமோர்ந்தார்.

" அப்பப்பா! பள்ளிக்கூடம் போய்வர எனக்கொரு சைக்கிள் வாங்கித் தரமாட்டினமாம். நீங்களாவது வாங்கித் தாருங்களேன்" பேரனின் வேண்டுதலை ஆர்வத்தோடு நிறைவேற்ற நினைத்தவர் அவரிடம் பணத்தைக் கொடுத்து " அப்பாவிடம் கொடுத்து வாங்கிக்கொள்" என்று கூறி அனுப்பி வைத்தார்.

சொல்லி வைத்தாள் போல் அதற்கடுத்த கிழமையே பேர்த்தி அவரைத் தேடி வந்தாள்.

"அப்பப்பா! அண்ணாவுக்கு மட்டும் சைக்கிள் வாங்கிக் குடுத்திருக்கிறியள். எனக்கு மட்டும் இல்லையா?"

சிணுங்கிய பேர்த்தியை ஆறுதல் படுத்தி அவளுக்கும் ஒரு சைக்கிள்வாங்க பணம் கொடுத்து அனுப்பினார். இப்படியே தேவைகள் ஏற்படும்போது பேரப்பிள்ளைகளுக்கு அப்பப்பாவின் ஞாபகம் வந்துவிடும்.

"பாசம் என்பது விலைக்கு வாங்கும் பொருளல்ல. அது தானாக உள்ளத்திலிருந்து சுரக்கவேண்டும்" முருகேசரின் மனதிலும் தத்துவம் பிறந்தது.

வருடம் ஒன்று ஆமை வேகத்தில் நகர்ந்து போக, மூத்தவள் அம்மாவுக்கு ஆண்டுத் திவசம் கொடுக்கவேண்டுமென்ற முனைப்புடன் ஊருக்கு வந்திருந்தாள். வாடிக்கொண்டிருந்த பயிர் நீர்த்துளியைக் கண்டதுபோல் முருகேசரின் விரக்திபடிந்த உள்ளத்திலும் ஒரு பிடிப்பு ஏற்பட்டது.

முருகேசரின் மனத்தில் சில காலமாக ஒருஆசை. மரகதத்தின் நினைவாக முதியோர் இல்லம் ஒன்றிற்கு மதிய உணவு அளிக்கவேண்டுமென ஓர் எண்ணம் அவரது மனதை துருத்திக் கொண்டு இருந்தது. மூத்தவளிடம் தனது விருப்பத்தை வெளியிட்டார். அவளும் அதை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டாள்.

அன்று மரகதத்திற்குத் திதி. பிராமணர் வந்து சமய அனுஷ்டானங்களைச் செய்து முடித்து அவர்களுக்குத் தானம் வழங்கிய பின்னர் முருகேசரும் குடும்பத்தினரும் முதியோர் இல்லம் போயினர்.

வேப்பமரங்களின் நடுவில் அமைந்திருந்த அந்த இல்லத்திற்குள் காலடி எடுத்து வைத்ததும் மனமும் உடலும் குளிர்ச்சியடைவதை முருகேசரினால் நன்கு உணர முடிந்தது. இல்லப்பொறுப்பாளரும் ஊழியர்களும் அவர்களை மனமார வரவேற்று உபசரித்தனர். இறைவழிபாட்டின் பின்னர் இவர்கள் கொண்டு போன உணவு அனைவருக்கும் பரிமாறப்பட்டது. முருகேசர் ஒரு குழந்தையைப் போல ஓடியாடி அங்குள்ள முதியவர்களை நலம் விசாரித்தார். தானும் அவர்களுள் ஒருவனாய் அமர்ந்து உணவருந்தினார். அந்தச் சூழல் அவருக்கு நிறைவைத் தந்தது.

கைகள் இயங்காத ஒரு முதியவருக்கு உதவியாளர் ஒருவர் உணவை ஊட்டிவிடுவதைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து போனார் அவர். கருணை என்பது வெறும் கடைச்சரக்கல்ல. உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து பெருகும் சீவகாருண்யத்தின் சுரப்பு. இதை நன்கு உணர்ந்து கொண்டவர், தனக்குள்ளே ஒரு முடிவு எடுத்துக்கொண்டார்.

மூத்தவள், தம்பிமார் இருவரிடமும் அப்பாவைக் கூட்டிப்போய் அவர்களிடம் வைத்துக்கொள்ளுமாறு கெஞ்சியதும் அவர்கள் அதற்கு நொண்டிச்சாட்டுச் சொல்லி மறுத்ததும்... எல்லாமே அன்று அவரது காதில் விழுந்தது. இன்றும் அந்த வார்த்தைகள் அவரது காதுகளில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன.

"இன்று நான் தனிமரமல்ல. எனக்கென்றொரு தோப்புக் காத்திருக்கிறது" மனம் நினைத்துக்கொண்டது.

மலரன்னை

# இனி இப்படி நடக்கக் கூடாது..!

## ஹிரோஷிமா நாகசாகி கற்றுத் தரும் பாடம்

**"அணு குண்டை பிரயோகிக்க முடிவெடுத்த பின் எங்கு வீசுவது என்ற பட்டிமன்றமே நடந்தது. மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதி, மையப்பகுதி, அரண்மனைகள், ஆலயங்கள் என விவாதித்து இறுதியில் நாகசாகி, கொகுரா, ஹிரோஷிமா, கியோட்டோ, நீகேடா எனும் ஐந்து நகரங்கள் தேர்வாகின. இறுதியில் ஹிரோசிமா, நாகசாகி, கொகுரா தேர்வாகிறது."**

உலக வரலாற்றில் அதிக சேதத்தையும், அதிக படிப்பினையையும் கற்றுக் கொடுத்தது. இரண்டாம் உலகப் போரே. சூரியன் உதிக்கும் நாடு எனப் பெயர் பெற்ற ஜப்பான்... பசுபிக் கடலின் மேற்குப் புறமாக இருக்கும் பல தீவுகளைக் கொண்ட நாடு. அன்றைய இரு வல்லரசுகளான ரஷ்யாவும் அமெரிக்காவும் ஆகவே ஆகாது. அதனால்தான் இத்தாலி ஜேர்மனியுடன் கைகோர்த்து அச்சு நாடுகளாக அன்றைக்கு வலம் வந்தன.

1941 டிசெம்பர் 11 வரை அமெரிக்கா மறைமுகமாக பிரிட்டனுக்கு உதவினாலும் நேரடியாகக் களத்தில் இறங்கவில்லை. அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க நினைத்த ஜப்பான் அமெரிக்க போர்க்கப்பல்கள் அணிவகுத்து நிறுத்தப்பட்டிருக்கும் **Pearl (harnour)** துறைமுகத்தை சிதைத்து விட்டால் அமெரிக்காவை ஒடுக்கிவிடலாமென நினைத்து ஜப்பானிய போர் விமானங்கள் குண்டுமழை பொழிய 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்தனர். இதன்பின்தான் நேரடியாகப் போரில் குதித்தது அமெரிக்கா.

### அணுகுண்டு


"வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி தேடும்", உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழி தேடும். என்பது போல் அமெரிக்கா பொறுத்திருந்து பழி தீர்த்தது.1942ஆம் ஆண்டு அணுகுண்டு தயாரிக்கும் மான் ஹாட்டன் திட்டத்தை இரகசியமாகச் செயற்படுத்தியது. 1940ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட புளுட்டோனியம் அமெரிக்க அணுகுண்டு தயாரிப்புக்கு உதவியது. யுரேனியத்தை நியூட்ரோன்களின் தாக்குதலுக்கு உட்படுத்துவதன் மூலம் புளுட்டோனியம் பெறப்பட்டது.

ஒரு அணுவை இரண்டாகப் பிளப்பதற்கும் இணைப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. அணுப்பிளவை நிகழ்த்த யுரேனியம் மீது நியூட்ரோன் என்ற நுண் துகள்களால் அதைத் தாக்குவார்கள். அடி வாங்கிய யுரேனிய அணு வெடித்து இரண்டாக உடைவதுடன் வெப்பத்தையும் இன்னும் சில நியூட்ரோன்களையும் பிரசவிக்கிறது. அந்த நியூட்ரோன்கள் அருகில் இருக்கும் வேறு யுரேனியம் அணுக்களைத் தாக்கி உடைக்க, இந்த வினை முடிவில்லாமல் யுரேனியம் பாக்கி இருக்கும் வரை தொடரும்.

மூன்று ஆண்டுகளில் 1945ஆம் ஆண்டு ட்ரினிடி தீவில் அணுகுண்டை சோதித்துப் பார்த்தது அமெரிக்கா. எப்படியாவது ஜேர்மனிக்கு முன் கண்டுபிடித்துவிட வேண்டும் எனும் யூகம் வெற்றியைத் தந்தது. ஒரு சாதாரண குண்டை விட 10 இலட்சம் மடங்கு சக்தி வாய்ந்ததாக இருந்தது. 1943 இல் இத்தாலியும், 1945இல் ஹிட்லர் இறந்த பின் ஜேர்மனியும் சரணடைந்தது. ஜப்பானுக்கு ஓகஸ்ட் 3 ஆம் திகதி கெடுவாக அமெரிக்கா விதித்தது. அதைப் புறக்கணித்ததால் அணுகுண்டைப் பயன்படுத்தி ஜப்பானை பணியவைக்க ட்ரூமன் முடிவெடுத்தார்.

### எங்கு வீசலாம்

அணுகுண்டை பிரயோகிக்க முடிவெடுத்த பின் எங்கு வீசுவது என்ற பட்டிமன்றமே நடந்தது. மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதி, மையப்பகுதி, அரண்மனைகள், ஆலயங்கள் என விவாதித்து இறுதியில் நாகசாகி, கொகுரா, ஹிரோஷிமா, கியோட்டோ, நீகேடா எனும் ஐந்து நகரங்கள் தேர்வாகின. இறுதியில் ஹிரோஷிமா, நாகசாகி, கொகுரா தேர்வாகிறது.



சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து இன்டியானா பொலிஸ் கப்பல் மூலம் யுரேனிய குண்டிற்கான மூலப்பொருள்கள் டினியன் தீவுக்கு வந்தடைந்தது.

அமெரிக்க சோதனையின்போது புளுட்டோனியத்தால் செய்யப்பட்ட குண்டு பயன்படுத்தப்பட்டது. ஆனால், தற்போது ஹிரோஷிமாவில் பிரயோகிப்பது யுரேனியம் என்பதால் படைத்தலைவர் பால் டிப்பெட்ஸ் அதற்கான பொருள்களை பயன்படுத்த ஆயத்தமானார். காலை 7.45 மணிக்கு டினியன் தீவிலிருந்து மூன்று விமானங்கள் ஹிரோஷிமாவை நோக்கிக் கிளம்பின.

ஹிரோஷிமா ஹேன் சூ தீவில் அமைந்துள்ள நகரம் ஹிரோஷிமா. 73 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் 2 இலட்சத்துக்கும் மேல் மக்களைக் கொண்ட நகரம். 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி காலை எப்போதும் போல் விடிந்தது அம்மக்களுக்கு. காலை 8.15 மணிக்கு என்ன நடக்கப் போகிறதென தெரியாமல் மக்கள் எப்போதும் போல் இயங்கிக் கொண்டிருந்தனர். வானில் மூன்று விமானங்கள் பறந்தன.

ஹிரோஷிமாவில் வானிலை தெளிவாக இருப்பதாகத் தகவல் கிடைத்தவுடன் டினியல் தீவிலிருந்து கர்னல் டிப்பெட்ஸ°ம், உடன் ராபர்ட் லூயிஸ°ம் உலகின் முதல் அணுகுண்டை பிரயோகிக்கப் போகிறோம் என்ற இறுமாப்புடன் பறந்தனர். எனோலாகே எனும் விமானத்தில் பத்தடி உயரமும், 71 அடி விட்டமும், யுரேனியம்-235 நிரப்பப்பட்ட 'லிட்டில்பாய்' எனும் குண்டை ஜப்பானிய நேரப்படி காலை 8.15 மணிக்கு 31,000 அடி உயரத்திலிருந்து 4,100 கிலோ எடைகொண்ட அந்தக் குட்டி அரக்கன் வெளியில் குதித்தான்.

நிலத்தில் வெடிக்காமல் 1,850 அடி உயரத்திலேயே வெடித்தன. விமானிகள் பாதுகாப்புக் கண்ணாடிகளை அணிந்து பார்வையிட்டனர். எனினும், பேரொளிக்குப் பின் எங்கும் புகை மண்டலமாகவே இருந்தது.1 கி.மீ பரப்பிலிருந்த ஆயிரக்கண்க்கான கட்டடங்கள் விழுந்தன. ஹிரோஷிமாவில் இருந்த 60,000 கட்டடங்கள் சேதமடைந்தன.

1,40,000 பேர் உடனடியாய் இறந்தனர். குண்டு வெடித்த மையத்தில் 5,000 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் நிலவியதால் உடல்கருகி இறந்தனர். ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்துக்கு வெப்பம் இருந்தது. 16 மணி நேரம் கழித்து அமெரிக்கா அணுகுண்டு வீசியதை அறிவித்தது. அதுவரை என்ன வகை குண்டென்றே யாருக்கும் தெரியவில்லை. குண்டு வெடித்த துயரம் அடங்கியவுடன் கதிர் வீச்சு ஆரம்பித்தது. இதில் பல ஆயிரம் பேர் மாண்டனர். நகரை விட்டு தள்ளி இருந்தவர்களும் தப்பவில்லை.

### அடுத்த குறி நாகசாகி

ஹிரோஷிமா பேரழிவுக்குப் பின் ஓகஸ்ட் 9ஆம் திகதி டோக்கியோவில் குழு கூடி நேச நாடுகளிடம் சரணடைய விவாதித்தனர். சரணடைய காலதாமதம் ஆனதால் அமெரிக்க ஓகஸ்ட் 11ஆம் திகதி திட்டமிட்டபடி கொகுரா நகரைத் தாக்க குறி வைத்தது. அங்கு அன்று மேகங்கள் சூழ்ந்திருந்ததால் திட்டம் மாறி நாகசாகியில் ஓகஸ்ட் 9ஆம் திகதி காலை 11 மணிக்கு **FAT MAN** எனும் புளுட்டோனியம் குண்டை வீசியது.

இதுதான் சோதனை வெடிப்புக்கு உட்படுத்தப்பட்ட குண்டு என்பது குறிப்பிடத்தக்கது. 4,500 கி.கி எடையும், 1.5 மீற்றர் விட்டமும், 3.2 மீற்றர் நீளமும் உடையது. 1,950 அடி உயரத்தில் வெடிக்க வைக்கப்பட்டு விழுந்தது. அதே அளவு உயிர்ச்சேதம் இங்கும் நிகழ்ந்தது. ஜப்பான் நிலைகுலைந்து போனது. இதற்குப் பின்னும் சரணடையாவிட்டால் செப்டெம்பரிலும் ஒக்டோபரிலும் மீண்டும் குண்டு வீச இரு திட்டங்கள் வைத்திருந்தது அமெரிக்கா. ஆனால், ஜப்பான் 1945 ஓகஸ்ட் 15 ஆம் திகதி மன்னர் ஹிரோஹிடோ ரேடியோ மூலம் தன்னம்பிக்கை உரையாற்றினார். செப்டெம்பர் 2 ஆம் திகதி போர் நிறுத்தத்தில் கையெழுத்திட்டது. ஜெனரல் டோஜோ தூக்கிலிடப்பட்டார்.

உயிர்தப்பியவர்கள் நிலைதான் மோசம். மரணத்திலிருந்து தப்பித்தாலும் கதிரியக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு தான் அதிகம். பல குழந்தைகள் பிறப்பிலேயே ஊனமாகப் பிறந்தனர். தழும்புகளுடன் இன்னும் வாழ்கின்றனர். இருநகரமும் அணு ஆயுதத்தால் உருவாகும் பேரழிவை உலகுக்கு உணர்த்தும் வரலாறாக உள்ளது.

### எல்லாம் அணுமயம்

அணுகுண்டு வீச்சால் பேரழிவு ஏற்பட்டாலும் உலக நாடுகள் பாதுகாப்புக்காக குண்டுகள் தயாரிக்கத் தொடங்கின. அணுகுண்டுகளைத் தவிர்த்தாலும் மின்தேவைக்காக அணு உலைகளைப் பயன்படுத்தும் முறையும் நடைமுறைக்கு வந்தது. அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா என அதிகாரமிக்க நாடுகளாக விளங்குகின்றன. இனி ஒரு துயர சம்பவம் நடக்கக் கூடாது என்பதே ஹிரோஷிமா நாகசாகி உலகத்துக்குக் கற்றுத் தரும் பாடம்.

ஜூனியர் விகடன்

# காக்கையின் கூடுகளில் குயில்கள் முட்டையிடுவது ஏன்?

*நம்மில் பலரும் காகத்தின் கூட்டில், அதற்கே தெரியாமல் தன்னுடைய முட்டையை வைத்துவிட்டுச் செல்லும் குயில் பற்றிய கதைகளைக் கேட்டிருப்போம். ஆனால், இந்தச் செயற்பாட்டின் இயக்கவியல் குறித்து நாம் யாருமே கேள்வி கேட்டதோ, அறிந்துகொள்ள முற்பட்டதோ இல்லை.*



இனப்பெருக்கம்... இதுதான் பூமியில் வாழ்கின்ற அசையும் உயிர்கள், அசையா உயிர்கள் என்று அனைத்திற்குமான அடிப்படை ஆதாரமாக இருந்து வருகின்றது. பரிணாமத்தின் பாதையில், இங்குள்ள அனைத்து வகையான உயிரினங்களும் ஏதாவதொரு வகையில் தம் இனத்தைப் பெருக்குவதில்தான் முதல் கவனம் செலுத்துகின்றன. அதற்கான வேலையில், முன்னேற்பாடுகளில், புதியதாகப் பிறந்தனவற்றை அணுகுவதில் என்று அனைத்திலுமே உயிர்கள் வேறுபட்டிருக்கின்றன. அதிலும் முட்டையிடும் குடும்பத்தைச் சேர்ந்த பறவையினங்களில் பல வகைகள் உள்ளன.

அதாவது, கூடுகட்டி முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் பறவைகளுடைய கூடுகளைச் சார்ந்து, தம் குஞ்சுகளை வளர்க்க வேறு பறவையினத்தைச் சேர்ந்த தாய்ப் பறவையைச் சார்ந்து இருக்கின்ற பறவைகளும் இருக்கின்றன. அவற்றின் வாழ்வியலும் அவை சார்ந்திருக்கும் பறவைகளுடைய வாழ்வியலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

தன் முட்டையை அடைகாத்து, அது பொரித்த பிறகு, குஞ்சுகள் பறக்கத் தொடங்கும் வரை கவனித்து, உணவளித்துப் பராமரித்துக் கொள்ளும் வேலையை, நேரத்தை தன்னுடையதாக எடுத்துக் கொள்ளாமல், வேறு பறவையின் கையில் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து விடுகின்றன. அப்படிப்பட்ட பறவைகளை "பாராசிடிக் பறவைகள்" என்றும் இந்த முறையை 'பாராடிசிசம்' என்றும் அறிவியல் துறையில் அழைக்கின்றனர்.

இதை ஒட்டுண்ணித் தன்மை என்று தமிழில் அழைக்கின்றனர். அதாவது, வாழ்விற்காக, பிழைத்திருப்பதற்காக மற்ற உயிரினங்களைச் சார்ந்து வாழும் உயிரினத்தின் வாழ்வியல் முறை. தாவரங்களில் ஒரு மரத்தைச் சார்ந்து காளான் உட்படப் பல்வகைச் சிறு தாவரங்கள் முளைப்பதைப் பார்த்திருப்போம். அவை, அந்த மரத்தின் ஊட்டச்சத்துகளில் குறிப்பிட்ட அளவை எடுத்துக்கொண்டு வாழக்கூடியவை. தனக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துகளுக்காக, அது முளைத்திருக்கும் மரத்தைச் சார்ந்திருப்பவை. அதேபோல, பறவைகளில் இளம் குஞ்சுகளைப் பராமரித்து, வளர்க்கும் வேலையை இன்னொரு பறவையிடம் விட்டுவிடுவனவற்றை பாராசிடிக் பறவைகள் **(Parasitic bird)** என்றும் அவை சார்ந்து வாழ்கின்ற பறவையை ஓம்புயிரி **(Host bird)** என்றும் அழைக்கின்றனர்.

அதற்கு நம் கண்முன்னே இருக்கின்ற சிறந்த உதாரணம் காக்கையும் **(Host bird)** குயிலும்தான் **(Parasitic bird)**.

இத்தகைய பரிணாம வளர்ச்சி, குயில் போன்ற ஓம்புயிரிப் பறவைகளை, தம் எதிர்காலச் சந்ததிகளை வளர்ப்பதற்காக நேரம் செலவிடுவதைத் தடுத்து, சிறிது புத்திசாலித்தனமாகச் செயற்படும் திறனைக் கொடுத்துள்ளன. அதன்மூலம் அவற்றுக்கு அதிக நேரம் கிடைத்து, இன்னும் அதிகமாக இனப்பெருக்கத்தில் ஈடுபடுகின்றன. இத்தகைய இனப்பெருக்க ஓம்புயிரிகள் குறித்து மனிதர்களுக்கு நீண்டகாலமாகவே தெரிந்துள்ளது. ஆனால், அதற்கான காரணம்தான் நீண்டகாலமாகவே புரியாமலிருந்தது.

இனப்பெருக்கத்தில் ஈடுபட்ட பிறகு, குயில் காக்கையின் கூட்டில் முட்டையிட்டு விடுகின்றது. முட்டையுடைய நிறம் மற்றும் வடிவத்தில், காகத்தின் முட்டையோடு குயிலுடையதும் ஒத்திருக்கும். குயில்களைப் போலவே, மற்ற கூடுகளைச் சார்ந்திருக்கும் பறவைகளுடைய முட்டைகளும்கூட, அவை எந்தப் பறவையினத்தைச் சார்ந்திருக்கின்றதோ அதன் முட்டை வடிவத்தையும் நிறத்தையும் ஒத்திருப்பதாக ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

காக்கை சராசரியாக ஒரு நாளைக்கு ஒன்று என்ற விகிதத்தில், மொத்தம் 5 முட்டைகளை இடும். ஆசிய குயிலும் கூட, இந்த ஐந்து நாட்களுக்கு உள்ளாகவே, அதன் கூட்டில் முட்டையிட்டு விடுகின்றது. ஒருவேளை காக்கை முட்டையிடுவதற்கு முன்னமே, குயில் முட்டையிட்டு வைத்தால், அதைக் கண்டுபிடிப்பது எளிதாகிவிடும். அதனால், குயில்கள், காக்கைக்கு அடுத்தபடியாக வந்து முட்டையிட்டு வைக்கின்றது. அதன் முட்டை, காகத்தினுடையதைவிட ஓரளவுக்குச் சிறியதாக இருக்கும். அதனால், அதை அடைக்காக்க வேண்டிய காலமும் குறைவாகவே இருக்கும். அதைக் கண்காணிக்கத் தொடங்கிய டின்சி மரியாம், காகம் இட்ட முட்டைகளையும் குயில் இட்ட முட்டைகளையும் குறித்து வைத்துக்கொண்டு, சற்றுத் தள்ளி, அவற்றுக்குத் தெரியாமல் அமர்ந்து, தன்னுடைய தொலைநோக்கியில் கண்காணிக்கத் தொடங்கினார்.

இதுபோன்ற ஆள்மாறாட்ட முட்டையிடுதல்களைத் தடுக்க, காகம் போன்ற பறவைகள் சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. சில நேரங்களில் முறையாகக் கண்காணித்து, அப்படி முட்டையிட வந்தால் தாக்குகின்றன. இல்லையேல் சில நேரங்களில் எச்சரிக்கை ஒலிகளை எழுப்புவது, கூட்டை மறைவாக அமைப்பது, மிக மூர்க்கமாக எல்லையைக் காவல் காப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுகின்றன. இருந்தும் இவையனைத்தையும் தாண்டி குயில்கள் முட்டையிட்டு விடுகின்றன.

காகங்கள் ஜோடியாகவும் கூட்டைக் காவல் காக்கின்றன. சில நேரங்களில் அவை சிறு கூட்டமாகவும்கூட காவல் காக்கின்றன. இனப்பெருக்கக் காலங்களில் காகங்கள் கூட்டுச் சேர்ந்து ஒற்றுமையாகச் செயற்படும் பழக்கத்தைக் கொண்டவை. இத்தகைய பழக்கங்களை அவற்றிடம் ஆள்மாறாட்ட வேலைகளில் ஈடுபடும் குயில்களிடமிருந்து தற்காத்துக் கொள்ள அவை மேற்கொள்கின்றன.

காகங்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து தாய்க் காகம் வெளியே செல்வதற்கான நேரத்தைக் குறைக்க உதவுகின்றன. உணவு கொண்டுவந்து கொடுப்பது, உணவு ஊட்டுவது போன்றவற்றை அவை மேற்கொள்கின்றன. அதன் மூலம் குயில்கள் ஆள்மாறாட்டம் செய்வதிலிருந்து காகங்கள் தம் கூட்டைத் தற்காத்துக் கொள்கின்றன. அப்படிப்பட்ட நேரங்களில் ஏதேனும் பெண் குயில் கூட்டின் பக்கமாகப் பார்த்தாலும்கூட, தாய் காகம் துரத்தத் தொடங்கிவிடும்

இருந்தும் இவையனைத்தையும் மீறி குயில் அந்தக் காகத்தின் கூட்டில் முட்டையிட்டதையும் அவர் கவனித்துள்ளார்.

எது குயிலுடையது, எது தன்னுடையது என்ற குழப்பம் வந்துவிடுவதால் எதையும் உடைக்காமல் அனைத்தையுமே காக்கைகள் அடைகாக்கின்றன.

காகம், குயில் போல இரண்டு தரப்பு பறவைகளுமே ஒன்றையொன்று சமாளித்து, தம் இனத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான தகவமைப்பைக் கொண்டுள்ளன. காகம், தன்னுடைய கூட்டிற்கே மிகுந்த எச்சரிக்கையோடும் கண்காணிப்போடும் தான் சென்று வந்தது. அதேநேரம் குயிலும் கூட அது முட்டையிட நினைக்கும் கூட்டைக் கண்காணிப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றது. பெண் குயிலுடைய உடல் மரங்களுக்கு மத்தியில் மறைந்துகொள்ளும் நிறத்தை ஒத்து இருப்பதால் அவை எளிதில் மரங்களுக்கு நடுவே மறைந்து கொள்கின்றன.

இப்படியெல்லாம் மெனக்கெட்டு காக்கையின் கூட்டைச் சென்றடையும் குயில், முட்டையிடும் "இரண்டு காகங்களும் வெளியே சென்றிருந்த நேரத்தில் வெற்றிகரமாக ஒரு குயில் அதன் கூட்டிற்குள் சென்றதை நாங்கள் பார்த்தோம். அப்படிச் சென்ற சில நிமிடங்களிலேயே காகங்கள் சுதாரித்து துரத்தியடித்துவிட்டன. அங்கிருந்து தப்பித்து நான் அமர்ந்திருந்த திசை நோக்கித்தான் அது பறந்து வந்தது. அப்போது, அதன் அலகில் ஒரு முட்டையைக் கவ்வியிருந்தது. பின்னர் காக்கைக் கூட்டைச் சோதித்துப் பார்த்தபோது ஒரு முட்டை குறைந்திருப்பதைக் கண்டுபிடித்தோம்.

வெற்றிகரமாக அது ஒரு முட்டையைக் கூட்டிலிருந்து அப்புறப்படுத்திவிட்டது. ஆனால், அந்த இடத்தில் வேறு முட்டையை இடவில்லை. அதற்கு அடுத்த நாள் காலையில் நாங்கள் சென்று கவனித்தபோது அந்த இடத்தில் புதிதாக ஒரு குயில் முட்டையைக் கண்டோம். முந்தைய நாள் முட்டையைத் திருடிச் சென்ற குயில்தான் அதை அங்கு வைத்திருக்க வேண்டும்" என்று அவர் தன்னுடைய ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

இப்போது அங்கிருப்பதில் எது குயிலுடையது, எது தன்னுடையது என்ற குழப்பம் காக்கைக்கு வந்துவிடும். எங்கே தன்னுடையதை உடைத்துவிடுவோமோ என்ற சந்தேகத்தில் அனைத்தையும் அடைகாக்கின்றன. தன்னுடைய அனைத்து முட்டைகளையும் ஒரே கூட்டில் வைத்தால் ஆபத்து என்பதைக் குயில்கள் நன்கு உணர்ந்திருக்கின்றன. ஆகவே, பல்வேறு கூடுகளில் வைக்கின்றன. அப்படி வைக்கும்போது அது வைக்கின்ற முட்டைகளுடைய எண்ணிக்கைக்கு நிகரான முட்டைகளை உடைத்துவிடுகின்றது. அப்படிச் செய்வதன் மூலம் அந்தக் கூட்டிலுள்ள குஞ்சுகளுக்குக் கிடைக்கும் உணவில் தன் குஞ்சுகளுக்குப் பற்றாக் குறை ஏற்பட்டுவிடக் கூடாதென்பதில் கவனமாக இருக்கின்றது.

இப்படி, தன் இனத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக குயில்கள் காகங்களைச் சார்ந்திருக்கின்றன. அவற்றிடமிருந்து தன் முட்டைகளைக் காப்பாற்ற காக்கைகள் குயில்களிடம் போராடுகின்றன. இரண்டின் போராட்டத்திற்கும் வெற்றி கிடைக்கின்றது. இறுதியில் இரண்டுமே தம் இனத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. பரிணாமப் பாதையில் காக்கையைச் சார்ந்திருக்கும் வகையில் குயில்கள் தகவமைத்துக் கொண்டன. அவற்றிடமிருந்து தற்காத்துக் கொள்ளவும் காகங்கள் கற்றுக்கொண்டன. இருந்தும் இரண்டுக்குமான போராட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இது இரண்டுக்குமான இனப்பெருக்கக் காலம். இதை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் நேரத்தில்கூட எங்காவது, ஏதேனும் ஒரு தாய்க் குயில், ஒரு காக்கைக் கூட்டைக் கண்காணித்துக் கொண்டிருக்கலாம்.

# பாராளுமன்றத் தேர்தல் தந்த பாடங்கள்

**“ வடக்கு மாகாணசபையில் ‘இலங்கையில் நடந்தது இன அழிப்பே’ என தீர்மானம் நிறைவேற்றிய விக்னேஸ்வரனின் குரல் பாராளுமன்றத்திலும் “இலங்கையில் நடந்தது இன அழிப்பே” என ஒலிக்கும்...**




2020 பாராளுமன்றத் தேர்தல் திருவிழா கடந்த புதன் கிழமையுடன் முடிந்தது.

ஆளும் பொதுஜன பெரமுன கட்சி 2/3 பெரும்பான்மையினைப் பெற்று அமோக வெற்றியுடன் இறுமாப்பாய் தலை நிமிர்ந்து நிற்கிறது. சஜித்தை தலைமையாகக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி ஓரளவு ஆசனங்களைப் பெற்றது. ஐ.தே.க. ஒரு ஆசனத்தைக் கூடப்பெறாமல் வரலாறு காணாத படுதோல்வியை அடைந்துள்ளது.

வடக்கு- கிழக்கைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என தம்மை தாமே தெரிவித்து தம்பட்டம் அடித்த தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி என்பது கழுதை தேய் ந்து கட்டெறும்பானதற்கு ஒப்பானதே தவிர அதை வெற்றி என பெருமிதம் அடைதல் ஆகாது.

வடக்கு- கிழக்கில் அத்தனை ஆசனங்களையும் கைப்பற்றி தமிழரின் ஏகோபித்த ஆதரவைப் பெறுவோம் எனத் தேர்தல் பிரசார மேடைகளில் முழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வடக்கில் ஆறு ஆசனங்களும் கிழக்கில் மூன்று ஆசனங்களும் போனஸ் ஒரு ஆசனத்துடன் பத்து ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

இது கடந்த 2015 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியுடன் ஒப்பிடும் போது மிகப்பெரிய வீழ்ச்சி என்றே கூறவேண்டும்.

வெற்றி அடைந்தாலும் அந்த வெற்றியைக் கொண்டாட முடியாத அளவு தோல்வி என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் உணராமல் இருக்குமாயின் இனிவரும் காலங்களில் இன்னும் பயங்கர அடிகளைச் சந்திக்க வேண்டி வரும் என்பது மறுக்க முடியாத உண்மை.

வடக்கில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முதன்மை வேட்பாளருமான மாவை. சேனாதிராஜா தோல்வியடைந்தது அக்கட்சிக்கு பாரிய பின்னடைவையே ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால், மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என அடைமொழியிடப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சார் அணிக்கு ஒரு ஆசனத்துடன் போனஸ் ஆசனம் ஒன்று கிடைத்திருப்பது அக்கட்சியின் தற்கால வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அத்தனை கட்சிகளும் இணைந்து அழைத்து வந்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை மாகாணசபை ஆட்சியை திறம்பட நடத்த விடாமல் குழப்பி தமது தாளத்திற்கு அடி பணிய மறுத்த அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து அவரை பதவியில் இருந்து நீக்க முயற்சித்தவர்களை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய விடயங்ளைச் செயற்படுத்தாது சர்வதேச விசாரணை, முள்ளிவாய்க்காலில் இறந்த பொது மக்களின் இறப்பிற்கு நீதி கோரிய முதலமைச்சரின் வாயை அடைக்கப் பார்த்தார்கள். இருந்தும் முதல்வரின் மக்களின் நீதிக்கான பேச்சு ஓயவில்லை.

இறுதியில் நீதியரசர் கூட்டமைப்பில் இருந்து விலகி தமிழ் மக்கள் தேசிய கூட்டணியை அமைத்து இம்முறை தேர்தலில் களமிறங்கி வெற்றியும் கண்டார்.

மாகாணசபையில் இலங்கையில் நடைபெற்றது இன அழிப்பே எனத் தீர்மானம் நிறைவேற்றிய அவரின் குரல் பாராளுமன்றத்திலும் இலங்கையில் நடந்தது இன அழிப்பே என ஒலிக்கும் என்பதில் ஐயமேதும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடைத்த தோல்வியை உணர்ந்து தம்மைச் சரி செய்து கொள்ள வேண்டிய கடப்பாட்டில் இருக்கிறார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். தொடர்ந்தும் மக்களை முட்டாளாக எண்ணமுடியாது என்பதை இத் தேர்தலில் மக்கள் மிகத் தெளிவாக கூறியிருக்கிறார்கள்.

மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி அரசிற்கு ஒத்தாசை வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அர்சியல் கைதிகளின் விடுதலை பற்றியோ சர்வதேச விசாரணை பற்றியோ பேசாமல் அரசின் அற்பசொற்ப சலுகைகளுக்காக எம் இனத்தின் தலைகளை அடகுவைத்ததே மிச்சமாகியது.

பிள்ளையில்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடிய கதையாய் கூட்டமைப்பினர் தமக்கு நிகர் யாருமில்லையென எகத்தாளம் புரிந்ததற்கு தமிழ் மக்கள் சரியான பாடத்தை புகட்டியுள்ளனர்.

நல்லாட்சி அரசில் அங்கம் வகித்த கூட்டமைப்பினர் சர்வதேச விசாரணையை மறந்து இலங்கை அரசிற்கு மேலும் மேலும் காலஅவகாசம் வழங்க சம்மதித்தன் விளைவை இப்போது புரிந்து கொண்டுள்ளனர் என்பதே உண்மை.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளை யும் என்பார்கள். கூட்டமைப்பினர் முற்பகல் செய்ததை இப்போது அறுவடை செய்திருக்கிறார்கள்.

தேசியக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய அங்கஜன் இராமநாதன் 49 ஆயிரத்து 373 மொத்த வாக்குகளில் 36 ஆயிரத்து 365 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதுவே வடக்கு தேர்தல் களத்தில் இம்முறை பெற்ற அதிகூடிய விருப்பு வாக்கு ஆகும்.

வெறும் வெற்று வாக்குகளை உதிரவிட்டு மக்களுக்கு எதையும் செய்யாமல் இருந்தால். தோல்வியை நோக்கியே அந்தப் பயணம் இருக்கும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்போது புரிந்து கொண்டிருப்பார்கள்.

மீறி புரிந்து கொள்ளாமல் முன்னைய அதே பாதையில் பயணிப்பார்களாக இருந்தால், அது அவர்களின் தோல்விக்கான சமிக்ஞை என்றே கூறவேண்டும்.

காலத்திற்கு காலம் தமிழ் மக்கள் நம்பி நம்பி ஏமாந்ததை விட வேறு ஏதும் ஏற்பட்டதாக சரித்திரமில்லை இம்முறை மக்கள் மனங்களில் மாற்று என்கின்ற புதிய எண்ணம் அலை மோதத் தொடங்கியதை இத் தேர்தல் உணர்த்தியுள்ளது.

மாற்றுத் தலைமை என்பது ஏன் உருவெடுத்தது? என்பதை கூட்டமைப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டிய நேரம் இது. மக்களுக்கு வழங்கிய ஆணையை மீறி ஒரு சிலரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை ஒட்டு மொத்த தமிழர் தலையிலும் சுமத்தியதால் வந்ததே இந்த மாற்றுத் தலைமை என்கின்ற பதம்.

இனி மக்களை யாரும் ஏமாற்ற முடியாது. யார் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் விளைவிக்கிறார்களோ அவர்களை மக்கள் தூக்கி எறிவர்.

மக்களுக்காக மக்கள் பிரதிநிதிகளே தவிர, மக்கள் பிரதிநிதிகளுக்காக மக்கள் அல்ல என்பதை ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் விளங்கி, மக்கள் உரிமைசார் விடயங்களை உணர்ந்து நடந்தால் மக்கள் உங்களை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவர்.

அதே மக்களுக்கு விரோதமாய் நடந்தால் உங்களை தூக்கி எறியவும் தயங்கமாட்டார்கள் என்பதையே இந்தப் பாராளுமன்றத் தேர்தல் உணர்த்தியுள்ளது.

— அபிமன்யு —

# கொரோனாவுக்கு முன் பின்

திடீரென வந்து வாழ்க்கையை மொத்தமாகப் புரட்டிப்போட்டுவிட்டது கொரோனா. இதுவரையிலான நம்பிக்கைகள், செயற்பாடுகள், தேடல்கள் என எல்லாவற்றையும் மாற்றிவிட்டது. யோசித்துப் பார்த்தால், எல்லாமே நமக்குப் புதிய அனுபவங்களாக இருக்கின்றன. இதுவரை நாம் தவறவிட்ட பல விடயங்களை இந்தக் கொரோனாக் காலம் நமக்கு மீட்டுத் தந்திருக்கிறது. நம் பார்வையும் சிந்தனைகளும் மாறியிருக்கின்றன. அப்படி, கடந்த மூன்று மாதங்களில் நம்மையறியாமல் நம் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் சில...



- **கொரோனாவுக்கு முன்:** பக்கத்துத் தெருவில் பச்சை மிளகாய் வாங்கக்கூட பைக், கார் எடுத்துச் சென்றோம்.
- **கொரோனாவுக்குப் பின்:** 2 கி.மீ.வரை நடந்தே சென்று எல்லாப் பொருட்களையும் வாங்குகிறோம்.
- **கொரோனாவுக்கு முன்:** பீட்சா, பர்கர், சிக்கன் ரோல், மட்டன் கபாப், அஜினோமோட்டா.ஃபாஸ்ட்புட் எல்லாவற்றுடன் நோய்கள் இலவசம்.
- **கொரோனாவுக்குப் பின்:** பழைய சோறும் பச்சை வெங்காயமும்கூட ருசிதான், ஆரோக்கியம்தான்.
- **கொரோனாவுக்கு முன்:** ஷொப்பிங் என்ற பெயரில் பொருட்களை அள்ளிவந்து வீட்டை மினி மாலாக மாற்றியிருந்தோம்.
- **கொரோனாவுக்குப் பின்:** என்னடா இது, வீட்டில் இருக்கிற பாதிப்பொருள் தேவையே இல்லை போலிருக்கு. இனி அலெட்டா இருக்கணும்.
- **கொரோனாவுக்கு முன்:** ஆண்கள் மைன்ட் வோய்ஸ் – காலையிலேயே சமையல் முடிச்சு லஞ்ச் பொக்ஸ் கொடுத்திடுறாங்களே, அதுக்கப்புறம் பகல் முழுக்க மெகா சீரியல், குட்டித் தூக்கம்தான். பிறந்தா பெண்ணாப் பிறக்கணும்!
- **கொரோனாவுக்குப் பின்:** அட வீட்டில இவ்வளவு வேலையா, நாமகூட வொர்க் ஃப்ரம் ஹோம்னு அப்பப்போ ஃபேஸ்புக், இன்ஸ்டா பக்கம் எட்டிப்பார்க்கிறோம். ஆனா இவங்களுக்கு ரெஸ்ட்டே இல்லையே!
- **கொரோனாவுக்கு முன்:** நம்ம வீட்டில மொட்டைமாடின்னு ஒண்ணு இருக்கா?
- **கொரோனாவுக்குப் பின்:** அழகான வானம், அலையாயும்மேகம்(கவிதை கவிதை), மொட்டை மாடியில் பார்க்க இவ்வளவு விடயம் இருக்கா?
- **கொரோனாவுக்கு முன்:** என்னா பெரிய ஹெல்த், ஹெல்த்னு ஓவரா ஃபிலிம் காட்டுறாங்க. இன்னைக்குச் செத்தா நாளைக்குப் பால்!
- **கொரோனாவுக்கு பின்:** ஹெல்த்தான்பா முக்கியம். கைரேகையே அழிஞ்சாலும் சரி, கையைக் கழுவிட்டே இருப்பேன்.
- **கொரோனாவுக்கு முன்:** தூய்மைப்பணியாளர்கள் என்று யாராவது இருக்காங்களா?
- **கொரோனாவுக்குப் பின்:** இப்பதான் அவங்க அருமை தெரிஞ்சது. கிரேட் சல்யூட்!
- **கொரோனாவுக்கு முன்:** அலுவலக வேலை செய்து வந்தா செம டயர்டு. கோப்பி கொண்டு வர இவ்வளவு நேரமா?
- **கொரோனாவுக்குப் பின்:** வெண்டைக்காய் நறுக்கிறதிலும் வெங்காயம் உரிக்கிறதிலும் இவ்வளவு கஷ்டம் இருக்கா, இனிமேல் ஞாயிறிலேயாவது சமையலில் உதவி பண்ணணும்!
- **கொரோனாவுக்கு முன்:** தேவையோ, தேவையில்லையோ ஷொப்பிங் பண்ணுறோம், மொபைல் வாங்கப்போனால் கூடவே ஹெட்போனும் வாங்கினோம்.
- **கொரோனாவுக்குப் பின்:** இந்த வருடம் இன்கிரிமென்ட் இல்லை, போனஸ் இல்லை. அட, சம்பளம் வருகிறதே பெரிய விடயம். சிக்கனமா இருக்கணும்!
- **கொரோனாவுக்கு முன்:** லைட்டா காலில் சுளுக்கு. கண்டிப்பாக டாக்டரைப் பார்க்கணும்.
- **கொரோனாவுக்குப் பின்:** எல்லாத்துக்கும் ஆஸ்பத்திரி போகணும்னு அவசியமில்லை. அம்மாகிட்ட சொன்னா எண்ணெய் தேய்ச்சு சுளுக்கு எடுத்துவிடப் போறாங்க!
- **கொரோனாவுக்கு முன்:** வங்கியில ஆரம்பிச்சு மளிகைக் கடை வரைக்கும் கியூ. அதை ஏன் போலோ பண்ணணும். யார் காலையாவது மிதிக்கிறோம், யார் தலையிலாவது ஏறுகிறோம். கியூவை உடைச்சு தனி கியூ உருவாக்குகிறோம்.
- **கொரோனாவுக்குப் பின்:** பாஸ், குறைந்தபட்சம் ரெண்டு மீற்றர் இடைவெளியைக் கடைப்பிடிங்கன்னு, அட யாரப்பா மாஸ்க்கைக் கழற்றிட்டுத் தும்முறது?



- **கொரோனாவுக்கு முன்:** வீட்டு வேலைக்காரம்மா ஐந்து நாள் லீவு, சம்பளத்தில பிடிக்கணும்.!
- **கொரோனாவுக்குப் பின்:** ச்சே பாவம்ல, கொரோனா காரணமாக வேலைக்காரம்மா வேலைக்கு வர முடியலை. ஆனா கண்டிப்பா இந்த மாசம் சம்பளம் கொடுக்கணும்.
- **கொரோனாவுக்கு முன்:** ஆகப்பெரிய மண்டபம், தடபுடல் விருந்து, மேளக் கச்சேரி... கல்யாணம் களைகட்டணும்!
- **கொரோனாவுக்குப் பின்:** இருமனம் சேர்ந்தால் திருமணம். வாழ்க்கை என்பது என்ன, தத்துவம் டயர்டு ஆக்குதா? சரி விடுங்க. இந்தக் கொரோனா வந்தபிறகுதான் தேவையில்லாத வெட்டிச்செலவுகள் இல்லாமல் கல்யாணம் பண்ண முடியும்னு கற்றுக் கொண்டோம். நல்லாத்தானே இருக்கோம்.

# தேர்தல் கள நிலவரம்




நாட்டின் 9 ஆவது புதிய பாராளுமன்றத்துக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பொருட்டு கடந்த புதன்கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் பொதுஜன பெரமுன 128 இடங்களைப் பெற்று மாபெரும் வெற்றி வாகை சூடியுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் பிரிந்து சஜித் பிரேமதாஸ தலைமையில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி 47 ஆசனங்களைப் பெற்று எதிர்க்கட்சி ஆசனத்தில் அமரவுள்ளது.

நாட்டை பல தடைவைகள் ஆட்சி செய்த பழம் பெறும் தேசிய கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி எந்தவொரு ஆசனத்தையும் பெறாது படுதோல்வி அடைந்துள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களால் பெரிதும் எதிர்ப்பார்க்கப் பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் ஒன்பது ஆசனங்களையும் ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்தையும் பெற்று 10 உறுப்பினர்களை ஒருவாறு தக்கவைத்துக் கொண்டது.

மக்கள் விடுதலை முன்னணிக்கு இரு ஆசனங்கள் கிடைத்துள்ளன. யாழ்.மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அங்கஜன் இராம நாதன் 49,373 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

வடக்கு, கிழக்கைப் பொறுத்த மட்டில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கடந்த தடவையை விட இத்தடவை 5 ஆல் குறைந்துள்ளது.

2004 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஆசீர்வாதத்துடன் 22 ஆசனங்களைக் கூட்டமைப்பு பெற்றிருந் தது. பின்னர் 2010 இல் 14 ஆசனங்களும், 2015 இல் அதே அளவிலான ஆசனங்களையும் பெற்றிருந்தது.

கூட்டமைப்பு யாழ்.மாவாட்டத்தில் 3 ஆசனங் களையும் வன்னியில் 3 ஆசனங்களையும் மட்டக் களப்பில் இரண்டு ஆசனங்களையும் திருகோண மலையில் ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளது. அம்பாறையில் எந்தவொரு ஆசனமும் கிட்டவில்லை.

தமிழ் மக்களின் வாக்குகள் பிளவுபட்டமையும் கடுமையான விமர்சனங்களை கூட்டமைப்பு சந்தித் தமையும் மக்கள் திருப்தி அடையக்கூடிய போதிய சேவைகள் எதனையும் மேற்கொள்ளாமையும் தமிழ் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பிரிந்து சென்று தேசிய மற்றும் மாற்று கட்சிகளுக்கு வாக்களிக்க நேர்ந்தது. அதுமாத்திரமன்றி வடக்கில் பல கட்சிகள் போட்டியிட்ட மையும் தமிழ் வாக்குகள் சிதறடிக்கப்பட காரணமாக அமைந்தது.

இதேவேளை யாழில் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தலைமையிலான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஒரு ஆசனத்தையும், ஈ.பி.டி.பி. ஒரு ஆசனத்தையும், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளது.

ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுன மிகக் குறுகிய காலத்தில் கால்பதித்து இதர தேசிய கட்சிகள் அனைத்துக்கும் பாரிய சவாலாக மாத்திரமன்றி இருக்கும் இடம் தெரியாது உருக்குலைத்து விட்டது என்றே கூற வேண்டும்.

இதேவேளை மூன்றில் இரண்டு பெரும்பான் மையை முன்வைத்தே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது பிரசாரத்தை முன்னெடுத்திருந்தார்.

இந்நிலையில், பொதுஜன பெரமுன பெற்ற 128 ஆசனங்களுடன் அவர்களுக்கு தேசியப் பட்டியல் ஊடாக கிடைத்த 17 ஆசனங்களையும் சேர்த்து 145 ஆசனங்களை ஒட்டுமொத்தமாகக் கைப்பற்றியுள்ளது.

இதேவேளை மூன்றில் இரண்டு பெரும்பான் மையை எதிர்பார்க்கும் பொதுஜன பெரமுனவுக்கு ஈ.பி.டி.பியின் இரு ஆசனங்கள் அங்கஜன் இராமநாதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு ஆசனம், அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ் மூலம் ஒரு ஆசனம், பிள்ளையானின் தமிழ் மக்கள் புலிகள் கட்சி மூலம் ஒரு ஆசனமும் கிடைக்கும் என்பதால் ஒட்டு மொத்தமாக அவர்கள் 150 ஆசனங்களை பெற்றிருந்தனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற தற்போதைய நிலையில் 151 ஆசனங்கள் தேவை என்பதால், தற்போது தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் நிலை எவ்வேளையிலும் உருவாகலாம். இதுவே இன்றைய களநிலவரம்.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பூம்புகார்
இயற்றியவர் : எம்.கருணாநிதி
இசை : ஆர்.சுதர்சனம்
பாடியவர் : கே.பி.சுந்தராம்பாள்



ஒருவனுக்கு ஒருத்தி என்ற
உயிர் மூச்சை உள்ளடக்கி
அறன் எனப் பட்டதே இல் வாழ்க்கை அதுவும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று எனும்
திருக்குறளை மறவாதே திருக்குறளை மறவாதே
திசை தவறிப் போகாதே
ஏ... ஏ... ஏ... ஏ... ஏ...

வாழ்க்கை எனும் ஓடம்
வழங்குகின்ற பாடம்
மானிடரின் மனதினிலே
மறக்க ஒண்ணா வேதம்

வாழ்க்கை எனும் ஓடம்
வழங்குகின்ற பாடம்
மானிடரின் மனதினிலே
மறக்க ஒண்ணா வேதம்
வாழ்க்கை எனும் ஓடம்...

வாலிபம் என்பது கலைகின்ற வேடம் அதில்
வந்தது வரட்டும் என்பவன் முழு மூடன்
வாலிபம் என்பது கலைகின்ற வேடம் அதில்
வந்தது வரட்டும் என்பவன் முழு மூடன்
வரும் முன் காப்பவன் தான் அறிவாளி
புயல் வரும் முன் காப்பவன் தான் அறிவாளி
அது வந்த பின்னே தவிப்பவன் தான் ஏமாளி

வாழ்க்கை எனும் ஓடம்
வழங்குகின்ற பாடம்
மானிடரின் மனதினிலே
மறக்க ஒண்ணா வேதம்
வாழ்க்கை எனும் ஓடம்...

துடுப்புகள் இல்லா படகு
அலைகள் அழைக்கின்ற
திசை எல்லாம் போகும்
தீமையை தடுப்பவர் இல்லா வாழ்வும்
அந்த படகின் நிலை போலே ஆகும்
அந்த படகின் நிலை போலே ஆகும்

வாழ்க்கை எனும் ஓடம்
வழங்குகின்ற பாடம்
மானிடரின் மனதினிலே
மறக்க ஒண்ணா வேதம்
வாழ்க்கை எனும் ஓடம்...

# பெண்களுக்கெதிரான வன்முறை



உலகம் முழுவதும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஒரு பெண் தனது குடும்பத்தில் உள்ள மிக நெருக்கமான மற்றும் தெரிந்தவர்களால் தான் அதிகளவு வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றாள். தாம் கொடுமைக்கு ஆளாகிறோம் என்பதை அறிந்திருந்தும் அதை எதிர்த்துக் குரல் எழுப்ப முடியாதவர்களாய் பெண்கள் இருக்கிறார்கள்.

பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக ஐநா. மற்றும் உலக உணவு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதன்படி 1000 பேரைக் கொண்ட ஒரு கிராமத்தில் 500 பேர் பெண்களாக இருக்கின்றனர். 510 பெண்கள் பிறந்திருக்க வேண்டிய இடத்தில் 500 பெண்கள் இருக்கின்றனர். மீதமுள்ள 10 பேர் பெண் குழந்தை என்ற காரணத்தால் தாயின் வயிற்றிலேயே அழிக்கப்படுகின்றனர்.

500 பெண்களில் 30 பெண்கள் ஆசியாவைச் சேர்ந்தவர்கள். 167 பெண்கள் தங்கள் வாழ்நாளில் ஏதோவொரு வகையான வன்முறையை சந்தித்தவர்களாக இருக்கின்றார்கள். 100 பேர் தமது வாழ்நாளில் ஏதோவொரு கட்டத்தில் பாலியல் வன்முறைகளை எதிர்கொண்டவர்களாக இருப்பார்கள். மூன்று பெண்களில் ஒருவர் தான் நன்கு அறிந்தவர்கள், மிக நெருக்கமானவர்களால் அடித்துத் துன்புறுத்தப்பட்டோ அல்லது கட்டாய பாலியல் தொந்தரவுக்கு ஆளாக்கப்படுகிறாள்.

கொலை செய்யப்படும் பெண்களில் 70 சதவீதத்தினர் கணவனாலேயே கொல்லப்படுகிறார்கள்.

எகிப்தில் திருமணமான பெண்களில் 35 சதவீதத்தினர் ஏதோவொரு கட்டத்தில் கணவனால் அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர்.

அமெரிக்காவில் ஒவ்வொரு 12 விநாடிக்கும் ஒரு பெண் தனது கணவனால் அல்லது காதலனால் அடித்துத் துன்புறுத்தப்படுகிறாள்.

பாகிஸ்தானில் 42 சதவீதப் பெண்கள் குடும்பத்தில் தம்மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளைத் தமது தலைவிதி என ஏற்றுக் கொள்கின்றனர். ரஷ்யாவில் தினமும் சுமார் 36 ஆயிரம் பெண்கள் கணவனால் வன்முறைக்கு உள்ளாகின்றனர்.

ஸ்பெயினில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி 5 நாட்களுக்கு ஒரு முறை ஒரு பெண் தனது கணவனால் கொல்லப்படுகின்றாள். ஒரு பெண்ணை பலாத்காரம் செய்வதே பாலியல் வன்முறையின் உச்சக்கட்டமாகக் கருதப்படுகின்றது.

தாம் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு விட்டோம் என்பது வெளியே தெரிய வந்தால் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு விடுவோம் என்ற பயத்தில் தமக்கு நேர்ந்த அவலத்தை பெண்கள் வெளியே சொல்வதில்லை.

அமெரிக்காவில் 20 நிமிடங்களுக்கு ஒருமுறை ஒரு பெண் பலாத்காரம் செய்யப்படுகிறாள். பிரான்ஸில் ஒவ்வொரு வருடமும் 25 ஆயிரம் பெண்கள் பலாத்காரம் செய்யப்படுகின்றனர்.

தொடரும் இந்த வன்முறைகளுக்கு முடிவு கட்டுவது அறிவார்ந்த சமுதாயத்தின் கடமையாகும்.

**வி.பிரணவன்
யாழ்.கலட்டி.**

# கொரோனாவிலும் கொடியது காலநிலை மாற்றம்

## எச்சரிக்கும் பில்கேட்ஸ்

உலகம் முழுவதும் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாகக் கொரோனாத் தொற்று நோயுடன் போராடிக்கொண்டிருக்கிறது. மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்து வைரஸுடன் போராடிக் கொண்டிருக்கின்றனர். வேலை, பாதுகாப்பின்மை, மன அழுத்தம் மற்றும் பிற பல்வேறு சவால்களை உலக மக்கள் எதிர் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் இந்த எல்லாப் போராட்டங்களும் இடையில் உருவாக்கப்பட்டு வரும் தடுப்பு மருந்து நம்மை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு செல்லும் என்ற நம்பிக்கையில் அனைவரும் தங்கள் நாட்களைக் கழித்து வருகின்றனர்.

இந்நிலையில் கொரோனாவைவிடக் காலநிலை மாற்றத்தால் உருவாகும் ஆபத்து பெரிய அளவில் இருக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் மைக்ரோசொப்ட் இணை நிறுவுநர் பில் கேட்ஸ். இவர் பல ஆண்டுகளாகவே உலகின் காலநிலை தொடர்பான விடயத்தைப் பற்றிப் பேசி வருகிறார். இதற்கிடையில் காபனீரொட்சைட்டு வெளியீடு குறித்துப் பேசியுள்ள அவர்,

"இந்த ஆண்டு உலகம் முழுவதும் விதிக்கப்பட்ட ஊரடங்கால் எவ்வளவு காபனீரொட்சைட்டு வெளியீடு குறைந்துள்ளது என்பதை ஆய்வாளர்கள் தெரிவிக்க மறுத்துள்ளனர். ஆனால், சர்வதேச எரிசக்தி நிறுவனம் 8% குறைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இது ஒரு அர்த்தமுள்ள குறைப்பாகப் பார்க்கப்படுகிறது. மேலும், ஒவ்வோர் ஆண்டும் இந்தக் குறைவு விகிதத்தைத் தொடர முடிந்தால் நாம் சிறந்த நிலையில் இருப்போம், துரதிர்ஷ்டவசமாக நம்மால் அதைச் செய்ய முடியாது. இந்த 8% குறைப்புக் காரணம் என்ன என்பதைக் கவனியுங்கள். உலகம் முழுவதும் 6 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் முதல் கார், விமானம், வாகனங்கள் போக்குவரத்து கிட்டத்தட்ட முற்றிலும் நிறுத்தப்பட்டது. கண்டிப்பாக, இந்தச் சூழலை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால், காபனீரொட்சைட்டு வெளியீட்டைக் கட்டுப்படுத்த தவறினால் கொரோனாவுக்கு இணையான மற்றொரு பேரழிவை மக்கள் சந்திக்க நேரிடும்.

காலநிலை மாற்றத்தால் புவியின் வெப்பநிலை உயர்ந்து வருகிறது. இப்படியே சென்றால் இன்னும் 40 ஆண்டுகளில் அதாவது, 2060 ஆம் ஆண்டில்



கொரோனாவைப் போலவே அதிகளவில் மக்கள் இறக்க நேரிடலாம். மேலும், 2100 ஆவது ஆண்டில் இந்த மதிப்பு ஐந்து மடங்கு அதிகரித்திருக்கும். தற்போது கொரோனாவால் ஒரு இலட்சத்துக்கு 14 பேர் என்ற கணத்தில் உயிரிழப்பு பாதிப்பு ஏற்படுகிறது. அதுவே காலநிலை மாற்றத்தால் அதிகபட்சம் எனில் ஒரு இலட்சத்துக்கு 73 உயிரிழப்புகளும் குறைந்தபட்சமாக ஒரு இலட்சத்துக்கு 10 பேர் வரை உயிரிழக்க நேரிடும். கொரோனாவை விடக் காலநிலை மாற்றம் மிக மோசமான பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும். இப்போது இருக்கும் ஆபத்து பெரியது தான், அதேநேரம் நாளைய ஆபத்து குறித்தும் அந்தந்த நாடுகள் முறையாகத் திட்டமிடுவது அவசியமான ஒன்று" எனத் தெரிவித்துள்ளார்.




யோகிபாபு காமெடி களத்தில் சிக்ஸர் அடித்து வந்த நிலையில், அந்த குழந்தையே நீங்க தான் என்று அவரை ஏற்றிவிட்டு ஹீரோ கதாபாத்திரம் கொடுக்க ஆரம்பித்தனர், அவரும் கூர்கா, தர்மபிரபு என வண்டியை ஓட்ட, இதில் காக்டெயில் எவ்வளவு தூரம் சென்றது என்பதை பார்ப்போம்.

### கதைக்களம்

சோழர் காலத்தில் செய்யப்பட்ட விலை மதிப்பற்ற முருகன் சிலை ஒன்று காணாமல் போகிறது, அந்த சிலையை கண்டுபிடிக்க பொலிஸ் சில திட்டங்களை வகுக்கின்றது.

அதே நேரத்தில் யோகிபாபு முடி திருத்தும் வேலை செய்ய, ஒருநாள் நண்பர்களுடன் சேர்ந்து சரக்கு அடிக்கின்றனர், விடிந்து பார்த்தால் அவர்கள் ரூமில் ஒரு பெண் இறந்த நிலையில் இருக்கிறார்.

உடனே அதிர்ச்சியாகிய நண்பர்கள் அதை மறைக்க, இவர்கள் ஒரு திட்டத்தைப் போட, பிறகு அந்த பெண் யார், எப்படி இங்கே வந்தார், யார் கொன்றது, முருகன் சிலை என்ன ஆனது என்பதே மீதிக் கதை.

### படத்தை பற்றிய அலசல்

யோகிபாபு ஏன் சேர் நல்லா தானே போய்ட்டு இருந்துச்சு, திடீர் என்று ஏன் இப்படி என்று தான் கேட்க தோன்றுகின்றது. இன்னும் எத்தனை வருடத்திற்கு பன்ரூட்டி தலையா, பஞ்சர் வாயா என்ற வசனத்தை வைத்து ஓட்டுவது.

படத்தில் ஒரு காட்சி கூட நமக்கு சிரிப்பு என்பதே வரக்கூடாது என்பதற்காக எடுக்கப்பட்ட காமெடி படம் போல் உள்ளது.

இதில் கலக்கப்போவது யாரு பிரபலங்களை பயன்படுத்தியது நல்ல ஐடியா என்றாலும், அவர்கள் ஏதோ 2 நிமிடம் அதற்குள் காமெடி செய்யுங்கள் என்பது போல் காமெடி செய்து விட்டு செல்கின்றனர்.

படத்தின் பட்ஜெட் மிகக் குறைவு என்பது ஒளிப்பதிவில் இருந்து தெரிகிறது. யோகிபாபு கால்ஷிட் கிடைத்தால் போதும் என்று அதை வைத்து முடிந்த வரை இழுத்துச் செல்ல முயற்சிக்குக் மற்றொரு ஏமாற்றம் தான் இந்த காக்டெயில்.

### க்ளாப்ஸ்

டைட்டில் கார்ட் செம்ம இண்டரஸ்ட் ஆக உட்கார வைக்கிறது. மற்ற ஏதுமில்லை.

### பல்ப்ஸ்

டைட்டில் கார்ட் தவிர வேறு ஏதுமில்லை, கிளைமக்ஸில் வரும் புகழ் மற்றும் பாலா கொஞ்சம் சிரிக்க வைக்க முயற்சிக்கின்றனர். மொத்தத்தில் பெயர் தான் காக்டெயில், உள்ளே பச்சை தண்ணி கூட இல்லை.

## 50 வயதில் மீண்டும் சிக்ஸ் பேக்



நடிகர் விக்ரம் தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராகவும், இந்திய சினிமாவின் மிகச்சிறந்த நடிகர்களில் ஒருவராகவும் திகழ்பவர்.

இவர் நடிப்பில் சென்ற வருடம் கடாரம் கொண்டான் என்ற திரைப்படம் வெளியாகியிருந்தது.

அதனைத் தொடர்ந்து இயக்குநர் அஜய் ஞானமுத்து இயக்கத்தில் கோபரா திரைப்படத்தில் நடித்து வந்தார்.

மேலும் அப்படத்தில் இடம்பெற்றுள்ள தும்பி துள்ளல் என்ற பாடல் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

அதன்பின் இவர் மஹாவீர் கர்ணன், பொன்னியின் செல்வன் உள்ளிட்ட திரைப்படங்களில் நடிக்கவுள்ளார்.

அதுமட்டுமன்றி இயக்குநர் கார்த்திக் சுப்ராஜ் இயக்கத்தில் அவரின் மகன் துருவ் உடன் இணைந்து ஒரு திரைப்படத்திலும் நடிக்கவுள்ளார்.

இந்நிலையில் சீயான் விக்ரமின் புதிய புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது, அதில் சிக்ஸ்பக் உடன் மிகவும் பிட்டாக காணப்பட்டுள்ளார்.

எனவே இத்தனை ரசிகர்கள் இந்த கெட்டப் கார்த்திக் சுப்புராஜ் படத்திற்காகவா அல்லது பொன்னியின் செல்வன் திரைப்படத்திற்காகவா என கேள்வி எழுப்பி வருகின்றனர்.



லொஸ்லியா

## குதிரைக்காக அழுத எமி ஜாக்சன்!



மதராசபட்டினம் படம் மூலம் தமிழில் நாயகியாக அறிமுகமானவர் எமி ஜாக்சன். இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல மொடலான இவர் தொடர்ந்து ரஜினி, விக்ரம், தனுஷ் என முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்தார். பின்னர் காதல், கர்ப்பம், குழந்தை என பிஸியானதால் நடிப்பதற்கு இடைவெளி கொடுத்திருக்கிறார். விரைவில் மீண்டும் நடிக்க வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மதராசபட்டினம் பட ஷூட்டிங்கின் போது நடந்த சில சுவாரஷ்யமான சம்பவங்களை நினைவு கூர்ந்துள்ளார் இயக்குநர் விஜய். அதில் எமி ஜாக்சனுக்கு இந்தியாவில் குறிப்பாக தமிழர்களின் வாழ்க்கை முறை வித்தியாசமாக இருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

வீதியில் மாடு செல்வதைப் பார்த்தே அவர் ஆச்சரியப்பட்டதாகக் கூறியுள்ள விஜய், படப்பிடிப்பின் போது குதிரை வெயிலில் இருந்ததைப் பார்த்து எமி அழுததாகவும் கூறியுள்ளார்.

பிறகு குதிரையை நிழல் இருக்கும் ஷெட் போன்ற ஒரு இடத்திற்கு கொண்டு சென்று, அதற்கு அதிக உணவு கொடுத்த பிறகு தான் எமி ஜாக்சன் அமைதி யானாராம் என்று கூறியுள்ளார்.

## போர்முலா வன் ரேஸ் காரில் தல அஜித்



தல அஜித் தற்போது தமிழ் சினிமாவில் மிகப்பெரிய நடிகராக திகழ்பவர். இவருக்கென்று தமிழில் பெரிய ரசிகர்கள் கூட்டமே உள்ளது.

சென்ற வருடம் இவர் நடிப்பில் வெளியான விஸ்வாசம் மற்றும் நேர்கொண்ட பார்வை உள்ளிட்ட திரைப்படங்கள் பெரிய அளவில் வசூல் சாதனை செய்தது.

அதனை தொடர்ந்து மீண்டும் இயக்குநர் எச். வினோத் இயக்கத்தில் வலிமை திரைப்படத்தில் நடித்து வந்தார்.

மேலும் இப்படத்தின் 50 சதவீத படப்பிடிப்பு முடிந்துள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது கொரோனா காரணத்தினால் இப்படத்தின் படப்பிடிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தல அஜித் நடிகராக மட்டுமின்றி பன்முக திறமைகளை கொண்டவர் என்பது அனைவரும் அறிந்ததே.

மேலும் Formula1 ரேஸ் கார் போட்டிக்காக இந்திய சார்பில் கலந்து கொண்டு பெருமை சேர்த்தார்.





# ஆளே இல்லாத டீக்கடையில்

# ஐ.பி.எல்.கோப்பை!

## கோடிகள் புழங்கும் ஐ.பி.எல்லை மிஸ் பண்ண யாருக்குத்தான் மனசு வரும்!

“ சில ஐரோப்பிய காற்பந்து கிளப்கள் காலி இருக்கைகளுடன் வீரர்கள் ஆடினால் நன்றாக இருக்காது என ரசிகர்களின் கட்டவுட்களால் மைதானங்களை நிரப்புகின்றன. ரசிகர்கள் தங்களுடைய புகைப்படங்களை அனுப்பினால் போதும், அதைக் கட்டவுட்டாக பிரின்ட் எடுத்து ஒரு இருக்கையில் வைத்து விடுகின்றனர். இதில் சிலர் கொரோனாவால் மறைந்த ரசிகர்களின் படங்களை அனுப்பி நினைவஞ்சலி செலுத்துவதையும் பார்க்க முடிகிறது. ”




மழையால் ஒரு போட்டி தடைப்பட்டாலே நமக்குள் இருக்கும் கிரிக்கெட் ரசிகன் சோக மியூசிக் போட்டு 'அப்பு' கமல் போல நடக்க ஆரம்பித்து விடுவான். ஆனால் கொரோனாவோ கிரிக்கெட் மட்டுமல்லாமல் உலகமெங்கும் நடக்கவிருந்த முக்கிய விளையாட்டு நிகழ்வுகள் அனைத்தையுமே மொத்தமாக முடக்கியிருக்கிறது. பல மாதங்களாக கிரிக்கெட் இல்லாமல் சோர்ந்து போயிருந்த ரசிகர்களுக்கு குளுக்கோஸாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் கடந்த மாதம் இங்கிலாந்தில் மீண்டும் தொடங்கின. அந்தப் போட்டியிலும் மைதானத்தில் யாரும் இல்லை. விக்கெட்டோ, பவுண்டரியோ, யாரிடத்திலும் எந்தவிதமான அதீத துள்ளலும் இல்லை. கைகளால் சம்பிரதாயத்துக்கு ஒருமுறை குட்டியாக ஒரு பஞ்ச்.

அவ்வளவுதான், அடுத்த பந்துக்கு ரெடியாகி விடுகின்றனர். போட்டி முடிந்த பின்கூட தலைவர்கள் ஒரு மெஷினுடன் தனியாக நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படியான பல கட்டுப்பாடுகளுடன் நடந்து முடிந்திருக்கும் இங்கிலாந்து-மேற்கிந்தியத் தீவுகள் இடையேயான டெஸ்ட் தொடர் மீண்டும் கிரிக்கெட் ரசிகர்களுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. இருப்பினும் பல மாதங்கள் தங்களின் அபிமான இந்திய வீரர்களைக் களத்தில் பார்க்காத ஏக்கம் இந்திய ரசிகர்களுக்கு இருக்கவே செய்கிறது.

இந்நிலையில்தான் செப்டெம்பர் மாதம் தொடங்கவிருந்த இருபது-20 கிரிக்கெட் உலகக்கோப்பையைத் தள்ளிப்போடுவதாக ஐ.சி.சி.அறிவித்திருக்கிறது. அந்த நேரத்தில் ஐ.பி.எல்லை நடத்திவிடலாம் என்ற திட்டத்துடன் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. பி.சி.சி.ஐ.தற்போதைய சூழலில் இந்தியாவில் நடத்துவதற்கான வாய்ப்புகளே இல்லை என்பதால் ஐக்கிய அரபு நாடுகளை டிக் அடித்திருக்கிறார்கள்.

ஆனால் பெரும்பாலான கிரிக்கெட் போர்டுகள் தங்கள் வீரர்களை ஐ.பி.எல்லுக்கு அனுப்புவது குறித்து இன்னும் எந்தவித அறிவிப்பையும் வெளியிடவில்லை. ஆனால், வெளிநாட்டு வீரர்கள் எப்படியும் தனியார் விமானத்திலாவது வந்து இறங்கி விடுவார்கள் என நம்பலாம். கோடிகள் புழங்கும் ஐ.பி.எல்லை மிஸ் பண்ண யாருக்குத்தான் மனசு வரும்!

ஆனால், இந்த வருட ஐ.பி.எல்.முந்தைய ஐ.பி.எல்கள் போன்று கொண்டாட்டமாக இருக்குமா? எனத் தெரியவில்லை. மைதானங்களில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்களா? என்ற எந்தத் தகவலையும் ஐ.பி.எல்.நிர்வாகம் இதுவரை தெரிவிக்கவில்லை. அப்படி அனுமதிக்கப்படுவதாக இருந்தாலும் மிகக் குறைந்த அளவிலான மக்கள் மட்டுமே அனுமதிக்கப்பட வாய்ப்புகள் அதிகம். மைதானத்தில் ரசிகர்களின் ஆரவாரத்தை ஒலிபெருக்கிகள் மூலம் ஒளிபரப்புவதன் மூலம் இதைச் சரிக்கட்டலாம்.

சில ஐரோப்பிய காற்பந்து கிளப்கள் காலி இருக்கைகளுடன் வீரர்கள் ஆடினால் நன்றாக இருக்காது என ரசிகர்களின் கட்டவுட்களால் மைதானங்களை நிரப்புகின்றன. ரசிகர்கள் தங்களுடைய புகைப்படங்களை அனுப்பினால் போதும், அதைக் கட்டவுட்டாக பிரின்ட் எடுத்து ஒரு இருக்கையில் வைத்து விடுகின்றனர். இதில் சிலர் கொரோனாவால் மறைந்த ரசிகர்களின் படங்களை அனுப்பி நினைவஞ்சலி செலுத்துவதையும் பார்க்க முடிகிறது.

இப்படி ஒரு போட்டியில் ஒசாமா பின்லேடன் புகைப்படம் அனுப்பப்பட்டு அது கவனிக்கப்படாமல் கட்டவுட்டாக வைக்கப்பட அது சர்ச்சையானது. இதனால் தற்போது புகைப்படங்களைப் பார்த்து உறுதிசெய்ய வேண்டிய கட்டாயமும் காற்பந்து கிளப்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஒருபுறம் இப்படியென்றால் இன்னொருபுறம் தீர்வு தேடி மொத்தமாகத் தொழில்நுட்பத்திடம் சரணடைந்திருக்கிறார்கள். அமெரிக்காவின் மிக முக்கிய பேஸ்பால் லீக் 'MLB.' ஃபாக்ஸ் ஸ்போர்ட்ஸ் சேனல், விர்ச்சுவலாக வீடியோ கேம்களில் இருப்பது போன்ற போலி அனிமேட்டட் ரசிகர்களை இந்தப் போட்டிகளின் ஒளிபரப்பின்போது மைதானத்தில் சேர்க்கிறது.

இதில் பெரிய சிக்கல், லைவாகப் போட்டி நடந்து கொண்டிருக்கும்போதே பின்புறத்தில் கிராபிக்ஸை ரெண்டர் செய்ய வேண்டும். ஒரு வீடியோ எடுத்து அதன்பின் கிராபிக்ஸ் சேர்த்து ஒளிபரப்புவதைவிடப் பல மடங்கு கடினமான காரியம் இது. இதைச் சாத்தியப்படுத்த **'Pixotope'** என்ற மென்பொருளைப் பயன்படுத்துகின்றனர்.

இது **'Unreal Engine'** என்ற பிரபல கேமிங் என்ஜின் மீது கட்டமைக்கப்பட்ட மென்பொருள். இதன்மூலம் ரசிகர்கள் நிறைந்த மைதானங்களைப் பார்ப்பது போன்ற உணர்வைப் பார்வையாளர்களுக்குக் கொடுக்க முயற்சி செய்கிறது அந்த சேனல்.

“ரசிகர்களைக் காட்டுவது ஒரு ஸ்போர்ட்ஸ் ஒளிபரப்பின் மிக முக்கிய அம்சமாக நாங்கள் பார்க்கிறோம்” எனக் கூறுகிறது ஃபாக்ஸ் ஸ்போர்ட்ஸ். இந்த விர்ச்சுவல் ரசிகர்கள் மீதான முழுக்கட்டுப்பாடும் அந்தச் சேனலிடம் இருக்கும்.

ஒரு போட்டிக்கு எத்தனை ரசிகர்கள் வருவார்கள், எந்த அணியின் ரசிகர்கள் அதிகம் வருவார்கள், அவர்கள் என்ன உடைகள் அணிவார்கள் என எல்லா முடிவுகளுமே ஃபாக்ஸ் ஸ்போர்ட்ஸ் கையில்தான். இதை எப்படிச் சரியாக முடிவு செய்வது என்ற குழப்பத்தில் தற்போது இருக்கிறது அந்த நிறுவனம்.

இப்படிச் செய்யப்பட்ட முதல் ஒளிபரப்பைப் பார்த்த ரசிகர்கள் பெரிதாகத் திருப்தியடையவில்லை. 'இது மிகவும் விநோதமான உணர்வைத் தருவதாகவும் கைதட்டுவதுகூட மிகவும் தாமதமாகத்தான் நடக்கிறது என்றும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இது ஆரம்பக்கட்டம்தான், நாட்கள் செல்லச் செல்லத்தான் இந்தத் தொழில்நுட்பம் மேம்படும் எனத் தெரிவிக்கிறது ஃபாக்ஸ் ஸ்போர்ட்ஸ் தரப்பு. 'சரியாகச் செயற்படுத்த முடிந்தால் விரைவில் மற்ற விளையாட்டுகளுக்கும் இதை எடுத்து வருவோம்' என்றும் நம்பிக்கையளிக்கிறது ஃபாக்ஸ் ஸ்போர்ட்ஸ்.

மைதானத்தில் மக்கள் இல்லாத குறையைத் தீர்க்க இன்னும் வேறு என்ன பண்ணலாம்?

முன்பு சொன்னதுபோல ஐ.பி.எல்லில் என்ன செய்யப்போகிறார்கள் என இன்னும் தெரியவில்லை. ஆனால், பல கோடி மக்கள் பார்க்கும் உலகின் மிக முக்கிய விளையாட்டுத் தொடர்களில் ஒன்றாக இருப்பதால், இப்போதே என்ன செய்யலாம் எனப் பல விவாதங்கள் நடந்து கொண்டிருக்கும். விரைவில் இதுபற்றிய அறிவிப்புகளை எதிர்பார்க்கலாம்.

மைதானத்திற்குச் செல்லாதவர்களுக்கும்கூட ஐ.பி.எல்.போட்டி நடக்கும் மைதானம் ஒரு திருவிழாக் களம் என்பது தெரியும். எப்படியான தொழில்நுட்பம் வந்தாலும் அந்தக் கொண்டாட்டத்தை ஈடுசெய்ய முடியுமா?

# வெளிவந்து விட்டது கலைமுகம் இதழ்-69


கலைமுகம் கலை இலக்கிய சமூக இதழ் -69 வெளியாகியுள்ளது

"...இலங்கை கொரோனாவின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு விட்டதா? இல்லையா? என்பதே தெரியாத, இயல்புக்கு திரும்புதலுக்கும் திரும்பாமைக்கும் இடைப்பட்ட காலத்தில் கலைமுகம் வெளிவருகிறது.

மனிதர்களாகிய எமக்கு எப்போதுமே எஞ்சியிருக்கும் ஒரே ஆயுதம் நம்பிக்கை ஒன்றுதான். அதன் துணை கொண்டு துன்பியல் மிகுந்த இக்காலங்களையும் வெற்றிகரமாக காப்போம் என நம்புவோம்..."

எனும் பொறுப்பாசிரியரின் பொறுப்பான பத்தியுடன் கலைமுகம் இதழ் விரிந்து செல்கிறது. நா.நவராஜ் எழுதிய "ஹோர்ல்டார்னின் வீடு வந்தடைதல், மார்டின் ஹைடோக்கர் மற்றும் ஆ.சபாரத்தினம் என்ற ஆக்கத்துடன் தொடங்கும் கலைமுகம் இருத்தலின் வலி அல்லது இன்னுமொரு பக்கம் - தாட்ஷாயினி, நிறங்கள் முளைக்கும் காடு-கவிதை, சி.ரமேஸ் எழுதும் "இலங்கை தமிழ் இலக்கிய துறைகளில் நிலைமாற்றத்திற்கான நகர்வுகள் - 2009 ஆம் ஆண்டுக்குப் பின் வெளிவந்த நாவல்கள், குறும்நாவல்கள் எனும் தொடர்.

" என்னைச் சுற்றியுள்ள உலகத்தை அடையாளம் காட்டவே விரும்புகிறேன். எழுத்தாளர் தாமரை செல்வியுடனான நேர்காணல், டெமியன்சூரி பற்றிய அரங்காடி அமரரான கூத்துக் கலைஞன் என்ற கட்டுரை, பேசப்பெரிதும் இனிதாய் நீ -பத்தி, பண்டிதர் சே.திருநாவுக்கரசரின் சிந்திக்க வைக்கும் சினிமா பாடல்கள், அ.அஜந்தன் எழுதிய தண்டனைகள் தராது நிரந்தர தீர்வு காண எனும் உளவியல் சார் கட்டுரை. அத்துடன் இன்னும் பல பாடப் படைப் பாளிகளின் அற்புத படைப்புக்களுடன் வெளிவந்திருக்கிறது கலைமுகம் இதழ்-69




கலைமுகம் இதழின் -70 ஆம் பக்கத்தில் அஸ்மாபோகன் எழுதிய " அவனும் அவர்களும்" என்ற கவிதை உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் வலிதனை ஆழமாக சுமந்து நிற்கிறது.

" அவன் எனும் வெடிபொருளார்
அவர்கள் அணையாத
மெழுகுவர்த்திகளாய்
உயிர்த்தெழுந்தனர்..."

என்ற உயிர்மை கலந்த வரிகள் கவிதையை உச்சத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

கொரோனா எனும் கொடிய அரக்கனின் பிடியில் சிக்கி இன்னும் இயல்புக்கு திரும்பாமல் அச்ச உணர்வுடன் முகத்துக்கு முகக் கவசம் அணிந்து வெறுமையான வாழ்க்கை வாழ்ந்து வரும் சமூகத்திற்கு ஒரு புதிய மாற்றத்தை கொணரும் நோக்குடன் புதிய பல விடயங்களை புகுத்தி பக்கங்களை அதிகரித்தமை பாராட்டத்தக்க விடயம்.

அட்டைப்பட ஓவியம் இணையத்திலிருந்து பெறப்பட்டாலும் தற்கால இறுக்கமான வாழ்வியலை எடுத்துக்காட்டும் விதத்தில் இருக்கிறது.

இலக்கிய இரசனை அற்று வெறுமை மிகுந்த சமூக வலைத்தளங்களுக்குள் முகம் புதைத்துக் கிடக்கும் எமது சமூகத்திற்கு கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் கலைமுகம் இதழ் குழு பல்சுவை ததும்பும் இதழை வெளியிட்டு இருப்பது பாராட்டுக்குரிய விடயமே.

வாசிப்பை சமூகத்தில் நேசிப்பதற்காய் கலைமுகம் ஆற்றும் பணி காத்திரமானது.

அந்தவகையில் தொடர்ந்து இதழ்கள் வெளிவந்து ஒரு சமூகவியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது எம் போன்றோரின் எண்ணமாகும்.

கலைமுகம் இதழ் வீடுகளின் தேநீர் மேசைகளில் கட்டாயம் இருக்க வேண்டிய இதழ்.

**மாவை.நா.கஜேந்திரன்**

# தீபம்

தீபம் ஏற்றுவது, புற இருளை நீக்கி வெளிச்சம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல. அதற்கு மின்சார விளக்குகளே போதுமானவை. நாம் ஏற்றும் தீபம் நமது அக இருளையும் அழிக்கவல்லது.

சாஸ்திரங்களில் கூறப்பட்ட திரவியங்கள் தீப ஒளியுடன் கலந்து, ஒருவித அதிர்வுகளை ஏற்படுத்தி, நம் மனத்தையும் அங்கு இருக்கக்கூடிய சுற்றுப்புறச் சூழலையும் நல்ல நிலையில் அமைக்கக்கூடிய ஆற்றல் கொண்டவை.

நல்லெண்ணெய் அல்லது தூய பசுவிலிருந்து தருவிக்கப்பட்ட நெய் ஆகிய இரண்டுமே கோயில்களிலும் வீட்டுப் பூஜை அறைகளிலும் தீபம் ஏற்றுவதற்கு உகந்தவையாகக் கூறப்பட்டுள்ளன. 'திலா/ பாபஹர்ா' என்றொரு வாக்கியம் உண்டு. எள் நம் பாபங்களை அகற்றும். 'ஆயுர் வைக்ருதம்' - நல்ல நெய், நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வழிவகுக்கும்.

'க்ருத தீபே தக்ஷிணே ஸ்யாத் தைல தீபஸ்து வாமத' என்ற வாக்கியத்தின் மூலம், வலது பாகத்தில் நெய் தீபத்தையும் இடது பக்கத்தில் நல்லெண்ணெய் தீபத்தையும் வைத்து வழிபாடுகள் நடத்தவேண்டும் என்று சாக்த தந்திரங்கள் கட்டளையிடுகின்றன. குறிப்பிட்ட பரிகாரங்களுக்காகக் குறிப்பிட்ட எண்ணெய் பரிந்துரைக்கப்பட்டால், அந்த நேரத்தில் மட்டும் அவற்றைப் பயன்படுத்தலாம்

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2080

### மதி



ஆயிரம் தடவை உன்னிடம் சண்டை இட்டு கொண்டு பேசாமல் இருந்து விட்டு சமாதானம் ஆகும் போது ஏனோ தெரியவில்லை புதிதாய் காதலிப்பது போன்றே ஓர் உணர்வு ஏற்படுகின்றது..!

### கரன்



அன்பை ரசிக்க தெரியாதவனுக்கு எந்தப் பேரழகி மனைவியானாலும் அவன் வாழ்க்கை சுமைதான்.. ரசிக்க தெரிந்தவனுக்கு அழகற்ற மனைவி கூட தேவதை தான்...

### குமரன்



வாழும் இந்த குறுகிய காலத்தில் யாரையும் வெறுக்காதீர்கள்... அனைவரும் ஒருவித அன்பிற்காய் மட்டும் தான் ஏங்குகிறார்கள்..!

### அனு



ஒரு பெண்ணின் குறைந்த பட்ச ஆசை தன்னை மட்டுமே காதல் செய்யும் ஒரு ஆண் வாழ்க்கை முழுவதும் துணையாக வர வேண்டும் என்றே..!

### கண்ணன்



ஒருவருடைய கண்ணில் இருந்து கண்ணீர் வரும் போது இன்னொருவருடைய கண்களில் இருந்து கண்ணீர் வந்தால் அந்த உறவை விட இந்த உலகத்தில் பெரிய உறவு இல்லை..!

### கயல்



காசு பணம் சம்பாதிக்கிறதை விட கட்டினவளை கடைசி வரைக்கும் கண் கலங்காமல் வைத்திருக்கிறது தான் ஒரு ஆணுக்கு கெத்து..!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 216

## ஆறு மணி நேரத்துக்கும் குறைவாக தூங்குபவர்களுக்கு நோய் எதிர்ப்புத் தன்மை குறைகிறது

ஒரு நாளைக்கு ஆறு மணி நேரத்துக்கும் குறைவாக தூங்குபவர்களுக்கு ஜலதோஷத்தை உண்டாக்கும் வைரஸின் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக ஆய்வின் முடிவுகள் தெரிவித்துள்ளன.

இது குறித்து நடத்தப்பட்ட பரிசோதனையில், 164 ஆரோக்கியமானவர்களின் தூங்கும் பழக்கம் கண்காணிக்கப்பட்டது. அதற்காக அவர்களின் கைகளின் மணிக்கட்டில் தொடு உணர் கருவி பொருத்தப்பட்டது.

அதன் பிறகு அவர்களின் மூக்கில் ஜலதோஷத்தைத் தோற்றுவிக்கும் ரினோவைரஸ் அடங்கிய திரவத்தின் சில சொட்டுக்கள் விடப்பட்டன.



இவர்கள் அனைவரும் ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டு கூர்ந்து கண்காணிக்கப்பட்டனர். இவர்களில் எத்தனைபேருக்கு ஜலதோஷம் பிடித்தது என்று கண்காணிக்கப்பட்டது.

இந்த பரிசோதனையின் இறுதியில் கிடைத்த முடிவுகள் குறைவான தூக்கம் மனிதர்களின் நோய் எதிர்ப்புத் தன்மையின் வீரியத்தைக் குறைக்கிறது என்பதை உறுதி செய்திருக்கின்றன.

இந்தப் பரிசோதனையில் தூக்கத்தின் கால அளவு மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டது. தூக்கத்தின் தன்மை கணக்கில் எடுக்கப்படவில்லை. விட்டு விட்டு தூங்குவது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

மாறாக ஒருவர் ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் தூங்குகிறார் என்பது மட்டுமே கணக்கு என்கிறார்கள் ஆய்வாளர்கள்.


ஆய்வின் முடிவுகளின் படி, ஒரு நாளைக்கு ஏழு மணி நேரத்துக்கும் அதிகமாக தூங்குபவர்களோடு ஒப்பிடும் போது, ஒரு நாளைக்கு ஆறுமணி நேரத்துக்கும் குறைவாக தூங்குபவர்களுக்கு ஜலதோஷம் பிடிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக தெரிய வந்திருக்கிறது.

**யாழ்.மருத்துவக்குழு**

## வாழைப்பழங்கள் மனிதனுக்கு ஆற்றலையும் சக்தியையும் கொடுக்கும்

வாழை ஒரு மரவகையைச் சேர்ந்ததல்ல. அது தாவர வகையைச் சேர்ந்தது. பூண்டுத் தாவரங்கள் சேர்ந்த பேரினம். உலகிலேயே பெரிய தாவரம் வெப்பம் மிகுந்த ஈரலிப்பான காலநிலையிலேயே இது வளருகின்றது.

உலகில் எல்லாப் பாகங்களிலும் எல்லா நேரங்களிலும் விலை குறைவான அதேவேளை எல்லாச் சத்துக்களும் நிறைந்த பழம் வாழைப்பழமாகத் தான் இருக்கும். எமது சமூகத்தில் குழந்தைகளுக்கு முதல் ஊட்டும் பழம் அதிகமாக வாழைப்பழமாகத் தான் இருக்கின்றது. எனவே சிறியோர் முதல் பெரியோர் வரை பயன்படுத்தக்கூடிய இலகுவில் ஜீரணிக்கக்கூடிய கட்டமைப்பைக் கொண்டுள்ள பழம் வாழைப்பழம் ஆகும். இதில் காணப்படும் பிரக்ரோசும், குளுக்கோசும் உடலுக்கு உடனடியாகவே ஆற்றலையும், சக்தியையும் கொடுக்கவல்லவை.



### வாழைப்பழத்தைப் பற்றிய சில தகவல்கள்

1. வாழைப்பழம் ஒரு மனிதனுக்கு கிடைக்கும் ஊட்டச்சத்து மட்டுமல்ல. நோய்கள் வராமல் தடுக்கக் கூடிய நோய்த்தடுப்பு நாசினியும் கூட இன்றைய விஞ்ஞானிகளும் சத்துணவு நிபுணர்களும் உலகில் தரமான உணவு வாழைப்பழம் என பரிந்துரை செய்கிறார்கள்.

2. நமது மூளை அமைதியடைய செரடோனின் என்னும் கூட்டுப் பொருள் தேவை. இந்த செரடோனின் உற்பத்தியாவதற்கு காரணமாகப் ட்ரைப்டோபன் **(Triptoptan)** என்கின்ற அமினோ அமிலம் உள்ளது. இந்த **Triptoptan** வாழைப்பழத்தில் ஏராளம் உள்ளது.

3. வாழைப்பழம் உலர்ந்த சருமத்துக்கு மிகுந்த ஈரப்பதனை அளிக்கக் கூடியது. இதில் காணப்படும் பொட்டாசியம் மூளையின் செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கச் செய்கிறது.

4. எல்லாக் காலநிலைகளிலும் கிடைக்கும் பழம் வாழைப்பழம், இதர ஏனைய பழங்களைப் போல் இது வாழை மரத்திலேயே சரிவரக் கனிவதில்லை. அவை காயாக இருக்கும்போது குலை வெட்டப்படுகிறது. பழுக்க வைக்கப்படுகின்றன. இதன் காரணமாக வாழைப்பழத்தை வெகுதூரமான இடங்களுக்கு அனுப்புவது சாத்தியமாகிறது.

5. வாழைப்பழத்தில் பல ஊட்டச்சத்துக்கள் பரவலாக அடங்கி இருந்தாலும் பொட்டாசியத்தைத் தவிர்ந்த வேறு எந்த தனிப்பட்ட மிகுந்த அளவில் இல்லை. இந்தத் தாது உப்பு, மற்றத்தாது உப்புக்களைப் போல் உடல் நலத்துக்கு மிகவும் இன்றியமையாதது. வாழைப்பழத்தில் சோடியம் சத்து மிகவும் குறைவு. சோடியம் அற்ற உணவாகவும், உப்பு, கொழுப்பு அற்ற உணவாகவும் வாழைப்பழம் காணப்படுகின்றது. இதனுடைய மென்மையான கட்டமைப்புக் காரணமாக இருதய நோயாளிகள், உயர் குருதியமுக்கம், வயிற்றுப்புண் மற்றும் மலச்சிக்கல் போன்றநோயாளிகளுக்கு இது சிறப்பான உணவாகும்.

6. வாழைப்பழத்தில் மிதமான கலோரியே அடங்கியிருப்பதால் இதனை உண்பவருக்குச் சிறந்த திருப்தியை அளிக்கின்றது.

7. பழுக்காத வாழைக்காயில் கார்போவைதரேட், மாப்பொருள் வடிவில் உள்ளது. நன்கு பழுக்க வைக்கும் போது இந்த மாப்பொருள், சுக்குரோஸ், குளுக்கோஸ், பரக்ரோஸ் போன்ற வெல்லங்களாக மாற்றமடைகின்றது. நன்கு பழுத்த வாழைப்பழத்தைச் சாப்பிடும் போது இந்த வெல்லங்களின் ஒரு பகுதி உடனடியாக எமது உடலால் உட்கவரப்படுகிறது. அடுத்த 15 நிமிடங்களிலேயே குருதியில் வெல்ல மட்டம் அதிகரிப்பதை அவதானிக்கலாம். மீதி உணவுப்பகுதி சற்று மெதுவாக உடலால் உட்கவரப்படுகிறது. இது சற்று நீண்ட நேரத்திற்கு உடலுக்கு வேண்டிய ஆற்றலைக் கொடுக்கிறது. எனவே களைப்பான நேரங்களில் வாழைப்பழங்களை உண்டால் உடலும், மனமும் சுறுசுறுப்பாக இயங்குகின்றன.

வாழைமரங்கள் எமது மண்ணில் இலகுவாக செழித்து வளரக்கூடியவை. எனவே வீடுகள் தோறும் வாழைமரங்கள் நாட்டி பயன்பெறுவோம்.

**S. சுதாகரன்**
**தாதிய உத்தியோகத்தர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்